Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C



## தேர்தலில் சர்வதேசக் கண்காணிப்பை மீண்டும் வலியுறுத்தியது கூட்டமைப்பு

### பிரிட்டன் எம்.பிக்களிடம் எடுத்துரைப்பு

கிளிநொச்சி, ஜூலை 24
வடக்கில் இராணுவ ஆட்சியே நடக்கிறது. இதனால் வடக்கு மாகாணத் தேர்தல் நீதியாக நடைபெறும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. எனவே தேர்தலில் சர்வதேசத்தின் காண்காணிப்பு அவசியம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவிடம் வலியுறுத்தி உள்ளது.
வடபகுதிக்கு வந்திருந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுக் காலை 9 மணிக்கு கிளிநொச்சியில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடியது.
இந்தச் சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாவை சேனாதிராசா கருத்து வெளியிட்டார்.
அவர் அங்கு தெரிவித்தவை

தொடர்ச்சி: பக்கம் 21



## ரயில் நிலையத்துக்கு ஆனையிறவில் அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 24
23 வருடங்களின் பின்னர் ஆனையிறவில் 15 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளுடனும் கூடிய ரயில் நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பிரதம விருந்

தொடர்ச்சி: பக்கம் 21

## விதவைப் பெண்கள் விவரம் யாழில் திரட்டும் இராணுவம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் விதவைப் பெண்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்டோர் தொடர்பான விவரங்களைத் திரட்டும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
அந்தந்தப் பகுதிகளிலுள்ள இராணுவத்தினரே மக்களைப் பொது இடத்துக்கு அழைத்து இந்த விவரங்களைப் பதிவு செய்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

தொடர்ச்சி: பக்கம் 21

இந்தியா



பக். 06

சீன ஊடுருவல் இனி நடக்காது

உலகம்



பக். 07

கடத்தப்பட்டாராம் முர்சி

விளையாட்டு



பக். 23

பிக்பாஷ் தொடரில் முரளிதரன்

# மாணவரை போதைக்குள் தள்ளிவிடும் சதி அம்பலம்

## குடாநாட்டில் இனந்தெரியாத கும்பலொன்று திட்டமிட்டுச் சீரழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களை போதைப் பாவனைக்குள் தள்ளிச் சீரழிக்கும் திட்டமிட்ட சதி அம்பலமாகி இருக்கிறது.
இது குறித்து விசாரணை நடத்திய அதிகாரிகள் மோட்டார் சைக்கிள்களில் வரும் குழுவினர் நன்கு திட்டமிட்டு இச்செயலில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை கண்டறிந்து உள்ளனர்.
போதைப்பொருள் கலந்த பாக்குப் போன்ற ஒரு பதார்த்தம் பாடசாலை நேரங்களில் மாணவர்கள் மத்தியில் இந்தக் குழுவால் விநியோகிக்கப்படுகிறது. இதனை மெல்லும் பாடசாலை மாணவர்கள் சிலர் மயங்கி விழுந்ததைத் தொடர்ந்து இது பற்றிய விசாரணைகள் ஆரம்பமாகின.
யாழ். புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் தரம்- 9 ஐச் சேர்ந்த மாணவர்கள் போதையூட்டிய பாக்குகள் பயன்படுத்தியமை தொடர்பில் பாடசாலை அதிபரால் எச்சரிக்கப்பட்டனர். இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் சிறுவர் நீதிமன்றினால் வடமாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளரிடம் அறிக்கை கோரப்பட்டிருந்தது.
இந்தச் சம்பவம் தொடர்பில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.
மோட்டார் சைக்கிளில் வரும் இளைஞர் குழுவொன்று பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்துப் போதைப் பொருள்களை விநியோகிக்கின்றது. 14 வயது தொடக்கம் 17 வயதுக்கு இடைப்பட்டவர்களையே இலக்காகக் கொண்டு இந்தப் போதைப்பொருள் விநியோகிக்கப்படுகின்றது.
பாடசாலை ஆரம்பமாகும் நேரத்தில் அல்லது மதிய வேளையில் பாடசாலை வளவினுள் இந்தப் போதைப் பொருள்கள் வெளியிலிருந்து எறியப்படுகின்றன.
தனியார் கல்வி நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றிலும் இந்தக் குழுவினர் இலவசமாகப் போதைப் பொருளை விநியோகிக்கின்றனர்.
இந்தப் போதைப் பொருள்களைப் பாவிக்கும் மாணவர்கள் மயங்கி விழுவதுடன் போதை ஏறியவர்களாகத் தள்ளாடுவதாகவும் தெரியவந்துள்ளது.
இந்த விடயங்கள் தொடர்

தொடர்ச்சி: பக்கம் 21

## நாளை முதல் வேட்புமனு தாக்கல்

கொழும்பு, ஜூலை 24
வடக்கு, மத்திய வடமேல் மாகாண சபைக்கான வேட்புமனுத் தாக்கல்கள் நாளை வியாழக்கிழமை முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளது.
ஒவ்வொரு மாகாணங்களிலும் போட்டியிடுபவர்கள் தத்தமது மாவட்டங்களிலேயே தனித்தனியான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.
அலுவலக நாள்களில் மாத்

தொடர்ச்சி: பக்கம் 21

180 யாழ்ப்பாணத்தவர்களுடன்

## இந்தோனேஷியக் கடலில் நேற்றுக் கவிழ்ந்தது படகு

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 180 பேர் உட்பட 208 புகலிடக் கோரிக்கையாளர்களுடன் இந்தோனேஷியாவில் இருந்து ஆஸ்திரேலியா நோக்கி புறப்பட்ட படகு ஒன்று அலையால் எத்துண்டு, பாறையில் மோதி நேற்றிரவு நடுக்கடலில் கவிழ்ந்தது. இதில் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.
எனினும் படகில் 125 உயிர்காக்கும் அங்கிகள் இருந்ததாகவும் அவற்றின் உதவியுடன் சிலர் மீன்பிடிப் படகுகள்

தொடர்ச்சி: பக்கம் 21

## தேர்தல் விதிகளை மீறி நேற்றும் காணிக் கச்சேரி

முல்லைத்தீவு மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் நேற்று செவ்வாய்க்கிழமை காலையிலிருந்து காணிக் கச்சேரி நடத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் மதிய நேரம் திடீ

தொடர்ச்சி: பக்கம் 21

## கோத்தாவின் படத்துடன் தேர்தல் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும்

யாழ்ப்பாணம், ஜூலை 24
அரச அதிகாரியான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் படத்துடன் கூடிய தேர்தல் சுவரொட்டிகள் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.




தொடர்ச்சி: பக்கம் 21




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## இலங்கையில் பாதுகாப்பின்மையே காரணம்



சென்னை,ஜூலை 24

தமிழ்நாட்டில் முகாம்களிலும், வெளியிலும் வசித்து வரும், இலங்கைத் தமிழர்கள், தாயகம் திரும்பும் எண்ணிக்கை, நாளுக்கு நாள் குறைந்து வருவதாகவும், இலங்கையை விட, தமிழ்நாடு பாதுகாப்பானது என்று அவர்கள் உணர்வதே, அதற்குக் காரணம் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இந்திய அதிகாரிகள் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் உள்ள, 102 அகதி முகாம்களில், 60, 725 இலங்கைத் தமிழர்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு, தமிழ்நாடு அரசு சார்பில், நிதியுதவியும், அத்தியாவசிய பொருட்களும் வழங்கப்படுகின்றன. முகாம்களுக்கு வெளியிலும், பல ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர் குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்நிலையில்,இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர், சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

கடந்த, 10 ஆண்டுகளில், இலங்கையில் போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த 2004ஆம் ஆண்டு காலப் பகுதியில் மட்டும் அதிகபட்சமாக, 3,078 பேர் தாயகம் திரும்பிச் சென்றனர். அதற்கு அடுத்தடுத்த ஆண்டுகளில், இறுதிப்போர் தொடங்கிய போது, தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

2007இல் யாருமே இலங்கைக்குத் திரும்பிச் செல்லவில்லை.2009இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், மீண்டும் தாயகம் திரும்புவோரின் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கியது. அடுத்தடுத்த ஆண்டுகளில், உச்சத்துக்கு சென்ற இந்த எண்ணிக்கை, கடந்த சில ஆண்டுகளாக குறைந்து வருகிறது.

இது குறித்து, தமிழ்நாடு அரச அதிகாரிகள் கூறுகையில், இறுதிப் போருக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன் வந்தவர்களே, போர் முடிந்த பின், சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்கின்றனர். தற்போதுள்ள இளைய தலைமுறையினர் யாரும், இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புவதில்லை. காரணம், இலங்கையை விட, தமிழ்நாடே தமக்குப் பாதுகாப்பானது; உறவானது என்று நினைக்கின்றனர்.

முகாம்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கானவர்களில், பெரும்பாலான இளைஞர்கள், தமிழ்நாட்டுக்கு வந்த பின்னரே பிறந்தவர்கள். எனவே அவர்கள், இலங்கை செல்வதைவிட, தமிழ்நாட்டில் இருக்கவே விரும்புகின்றனர்.

அதுமட்டுமின்றி, போருக்குப் பின்னர், தமிழர்களின் குடியிருப்புகளில், சிங்களக் குடியிருப்புகள் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன. எனவே, அங்கு செல்வதைப் பாதுகாப்பு குறைவானதாக நினைக்கின்றனர். எனவே, தாயகம் திரும்புகின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. எதிர்வரும் காலங்களில், இன்னும் குறையலாம்-என்றனர். (த)

" முகாம்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கானவர்களில், பெரும்பாலான இளைஞர்கள், தமிழ்நாட்டுக்கு வந்த பின்னரே பிறந்தவர்கள். எனவே அவர்கள், இலங்கை செல்வதைவிட, தமிழ்நாட்டில் இருக்கவே விரும்புகின்றனர்.

## தேர்தல் விதி மீறல் குறித்து முறையிட விசேட பிரிவு

கொழும்பு, ஜூலை 24

வடமாகாண சபைத் தேர்தலின் போது தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்காக மாவட்ட செயலகங்களில் விசேட முறைப்பாட்டுப் பிரிவு செயற்படுவதுடன், இம்முறை பிரதேச செயலகங்களிலும் முறைப்பாட்டுப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நாளை வியாழக்கிழமை முதல் தாக்கல் செய்யப்படவுள்ளன.

முதல் முறையாக வடமாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறவுள்ளதால் அதிகளவான தேர்தல் விதிமுறை மீறல்கள் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் ஒவ்வொரு மாவட்ட செயலகத்திலும் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு தனியான பிரிவு அமைக்கப்படவுள்ளது.

இதற்கு மேலதிகமாக யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களிலும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையில் முறைப்பாட்டுப் பிரிவு அமைக்கப்படவுள்ளது.

வேலணை பிரதேச செயலர் பிரிவு, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றிலேயே இந்த முறைப்பாட்டுப் பிரிவுகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன. (த-5)

## வடபகுதி மக்கள் சுதந்திரமாக இல்லை

### தெற்கு உள்ளூராட்சி உறுப்பினர்கள் மத்தியில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர்



யாழ்ப்பாணம்,ஜூலை 24

வடபகுதியில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் தென்பகுதி மக்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய சுதந்திரமான வாழ்க்கை வடபகுதி மக்களுக்கு கிடைக்கவில்லை. இவ்வாறானதொரு சூழலிலே மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

தென்பகுதியில் இருந்து யாழ்.மாவட்டத்துக்கு வருகைதந்த பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் கடந்த காலங்களில் ஜனநாயக வழியில் போராட்டங்களை நடத்தினார்கள். இந்தப் போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில் ஆயுதம் ஏந்திப் போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

தென்பகுதி மக்கள் சுதந்திரமாக இருப்பதைப் போன்று வட பகுதி மக்களுக்கு அந்த வாழ்க்கை கிடைக்கவில்லை. எனவே தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்து வடபகுதிக்கு வந்துள்ள இந்தக் குழு இங்குள்ள மக்களின் பிரச்சினைகள், அவர்களின் உரிமைகள், தேவைகள் தொடர்பாகக் கேட்டறிந்து அவற்றைத் தென்னிலங்கை மக்களுக்கும் தெரிவிக்க வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் தென்னிலங்கையைச் சேர்ந்த பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள், நல்லாட்சி மன்றத்தின் குழு உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-14)

## இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு வடக்குத் தேர்தலால் கடும் நெருக்கடி

புதுடில்லி,ஜூலை 24

பூட்டானில் நடந்த தேர்தலில் சாதகமான முடிவுகள் வெளியானதால் புதுடில்லி சற்று ஆறுதலடைந்திருந்த சில நாள்களில், அண்டை நாட்டின் தேர்தலால் இந்திய வெளிவிவகார அமைச்சு இன்னொரு நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதாக பிரிட்டனின் 'டெய்லி மெயில்' நாளேடு தெரிவித்துள்ளது.

வடக்கில் போருக்குப் பின்னர் நடக்கும் தேர்தலின் பின்னர், மாகாண முதல்வர்களுக்கு முழுமையான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று இந்தியா கடுமையாக வலியுறுத்திய போதும், கொழும்பு அதற்கு மறுத்து வருகிறது.

இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கமைய உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கிய பகுதிகளை நீக்க வேண்டும் என்று இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பரில் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், தமிழ்க் கூட்டமைப்பு அதிகாரத்துக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், 13ஆவது திருத்தச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி, மாகாண முதல்வருக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில்லை என்பதில் கொழும்பு தெளிவாக உள்ளது.

இது தொடர்பாக, டெய்லி மெயிலிடம்



பேசிய, ஜனாதிபதியின் சகோதரரும், அரசின் பெரும்பாலான அமைச்சுக்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் படைத்த அமைச்சருமான பசில் ராஜபக்ஷ,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, யாருமே செய்யாத, இந்திய-இலங்கை உடன்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்துகிறார். ஆனால் அதைச் செய்வதற்கு சிலவற்றை தியாகம் செய்ய வேண்டும். மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடிய இன்னொரு சூழ்நிலையை நாம் கொண்டு வரமுடியாது.இது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற அமைதியான சூழல். இதனை நாம் இழக்க முடியாது. பொருளாதார வளர்ச்சி, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தின்றி ஜனநாயகத் தன்மை நோக்கி நாம் துணிச்சலான நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றும் அவர் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## சீரற்ற காலநிலை இன்றும் தொடரும்

கொழும்பு,ஜூலை 24

பலத்த காற்றுடன் கூடிய கடும் மழை இன்று புதன்கிழமை வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேல் பருவக்காற்றுக் காரணமாக மத்திய, சப்ரகமுவ, மேல்மாகாணங்களிலும் காலி, மாத்தறை நகரங்களிலும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தென் கடற்பரப்பு பகுதிக்கு அப்பால் காற்றின் வேகம் மணிக்கு 60 கிலோ மீற்றருக்கு அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இதேவேளை கன்யொன், மேல் கொத்மலை லக்ஷபானா, காஸில்றீ ஆகிய நீர்த்தேக்கங்களில் உச்ச அளவுக்கு நீர் நிரம்பியுள்ளதால் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு குறித்த பகுதிகளைச் சேர்ந்தவர்களைப் பாதுகாப்புடன் இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயாவிளான் புனித யாகப்பர் ஆலய திருவிழா நாளை

கொழும்புத்துறை, ஜூலை 24

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வயாவிளான் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதியுடன் நடைபெறவுள்ள இத்திருவிழாவுக்குச் செல்ல விரும்பும் யாத்திரிகர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் மேற் கொள்ளப்படவுள்ளதாக ஆலய வழிபாட் டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், கோப்பாய் புனித மரியாள் ஆலயம், பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயம் ஆகிய இடங்களில் இருந்து அன்றைய தினம் காலை 7 மணிக்கு பஸ் சேவைகள் இடம்பெறும்.

ஆலயத்தில் முற்பகல் 10 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும். (வ-135)



## வடதாரகையில் தொலைக்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடதாரகை கப்பலில் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக தொலைக்காட்சி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்தப் பகுதிக்குச் சென்ற அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தொலைக் காட்சியை வழங்கியிருந்தார்.

குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுத் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வரும் வடதாரகைக்கு வழங்கப்பட்ட இந்த தொலைக்காட்சி விரைவில் கப்பலில் பொருத்தப்படவுள்ளன.

(வ-17)

# கல்வி வழிகாட்டல்



வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கனகராயன் குளம் பிரதேசத்தில் ஏழு பாடசாலைகளைச் சேர்ந்த இந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு கனகராயன்குளம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் கனகராயன்குளம் ம.வி.யில் இடம்பெற்றது.இதில் எழுபதுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கிற்கு வளவாளர்களாக வவுனியா வடக்கு வலய ஆரம்பக்கல்வி ஆலோசகர் முரளிதரன், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# பெண்கள் நிமிர்ந்து நிற்க 'சுயம்' வாணிப நிலையம்

### யாழ். பிரதான வீதியில் திறக்கப்பட்டது




கொழும்புத்துறை, ஜூலை 24

போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக 'நலிவுற்ற நம் பெண்களின் நல்வாழ்வுக்காக' என்ற வார்த்தைகளோடு 'சுயம்' பல்பொருள் வாணிப நிலையமொன்று யாழ்.பிரதான வீதியில் புனித யாகப்பர் ஆலயம் முன்பாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை ஆகியோரின் நல்லாசியுடன் சின்மய மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் அண்மையில் திறந்து வைத்தார்.

இந்தக் கட்டடத்தொகுதிக்கான பெயர்ப் பலகையை பாவனைக்கு வழங்கிய அருட் திரு மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த வாணிப நிலையத்தின் வருமானம் பாதிப்புற்ற பெண்களின் நல்வாழ்வுக்காகப் பயன் படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை வாடிக்கையாளரின் வசதியும் உற்பத்தியாளர்களின் உயர்ச் சியும் கருதி யாழ்.மறை மாவட்டகத் தோலிக்க இளையோர் ஒன்றியத்தினர் வாசல் வந்து வழங்கும் சேவையையும் அறிமுகப்படுத்தியுள் ளனர். குறிப்பிட்ட தொகைக்கு மேலாக கொள்வளவு செய்வோர் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு இச் சேவையைப் பெறமுடியும்.

பாதிப்புற்ற பெண்களின் உற்பத்திகளை இந்த விற்பனை நிலையத்தில் விற்கவும் தங்களது பிரதேசத்தில் விநியோகித்து உதவ ஆர்வமுள்ளவர்கள்தொடர்புகொள்ள முடியுமெனவும் நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். (வ-135)

# ஆயிரத்துக்கும் மேலானோர் பயனடைந்தனர்

## நேற்றைய நடமாடும் சேவையில்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 12 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பொது மக்களுக்கு நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் நேற்று ஆயிரக் கணக்கானோர் பங்குபற்றிப் பயன் பெற்றனர்.

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 12 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்காக நேற்று யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

இதன் போது ஜே/89, ஜே/90, ஜே/91, ஜே/92, ஜே/93, ஜே/94, ஜே/95, ஜே/96, ஜே/106, ஜே/107, ஜே/108, ஜே/109 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் பங்குபற்றி தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்களை வழங்கவுள்ளனர்.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடத்தப்பட்ட இந்த நடமாடும் சேவையில் அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் நன்மை தந்துள்ளதாக பயனாளிகள் தெரிவித்தனர். இதேவேளை குறித்த நடமாடும் சேவை இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளது. (வ-14)



# பணத்துக்குப் பதிலாக கைக்குழந்தை பிணை

## யாழ்.நகரில் விசித்திர சம்பவம்



யாழ்ப்பாணம், ஜூலை 24

விபத்துக்காக பணம் செலுத்த முடியாமல் தனது கைக் குழந்தையை பிணை வைத்து ஒருவர் மீட்ட சம்பவம் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றுள்ளது.

பிறவுண்றோட் சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணும் ஓட்டோவில் வந்த குடும்பஸ்தரும் எதிரெதிரே மோதுண்டனர். இதனால் மோட்டார் சைக்கிள் சிறிய சேதங்களுக்குள்ளானது. இதனையடுத்து அங்கு நின்ற இளைஞர்கள் ஓட்டோ சாரதியில் தப்புள்ளதாகக் கூறி மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணுக்கு சிறுதொகை பணம் (2,000 ரூபா) செலுத்துமாறு கூறினார். இதனால் தவறை ஒப்புக் கொண்ட குடும்பஸ்தர் தன்னிடம் தற்போது பணம் இல்லை என்று கூறி தனது கைக்குழந்தையை பிணையாக வைத்து பணம் எடுக்கச் சென்றார். சென்றவர் அரை மணி நேரங்களின் பின்னரே பணத்துடன் வந்து குழந்தையை மீட்டுள்ளார் . அதன் பின்னர் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப் பட்டது. (வ-21)

## வேலணையில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வேலணைப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் இன்று வேலணைப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேச மக்களுடன் நலன் விரும்பிகளும் முகாமில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

சட்டவிரோதமாக இரண்டாவது தடவையாகவும் மது விற்பனை செய்தவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதமும் 6 மாத சிறைத் தண்டனை விதித்து 5 வருடத்துக்கு ஒத்தி வைத்தார். வேலணையைச் சேர்ந்த பாசுதானந்தன் என்பவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

தவிரசட்டவிரோதமாகமதுவிற்ற வேலணை கிழக்கைச் சேர்ந்த க.பரமலிங்கம் என்ப வருக்கு 10 ஆயிரம் ரூபா அப ராதம் விதித்தது நீதிமன்று.(வ-4)

# காலநிலைக்கேற்ற மரக்கறிச் செய்கை

## விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.குடாநாட்டில் தற்போதைய காலநிலையைப் பயன்படுத்தி விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

தற்போது மரக்கறிப் பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு சந்தைக்கு வந்து சேர்வதன் மூலம் அவற்றில் விலை தினமும் சரிவடைந்து செல்கின்றது.

பயிற்றை, கத்தரி, புடோல், பூசணி, போஞ்சி, பாகல், வெண்டி போன்ற மரக்கறி பயிர் உற்பத்தியில் அதிகமான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் சந்தைகளில் வீழ்ச்சியடைந்ததை அடுத்து தென் பகுதிக்கு அவை அதிகமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 ஆசிரியர்கள் கூட்டுத்தாக்குதல் மாணவன் தீவிர சிகிச்சைப் பிரிவில்

## தென்மராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
தென்மராட்சி வலயத்திலுள்ள பிரபல பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் 9 ஆசிரியர்களால் மிக மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது குறித்துத் தெரிய வருவதாவது:-

குறித்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் செய்த தவறு காரணமாக அவர்களை ஆசிரியர்கள் தண்டித்திருந்தனர். இதற்கு அடுத்தநாள் குறித்த மாணவன் பாடசாலை சென்றான். அப்போதும் அவன்மீது அதே குற்றத்தை சுமத்திய ஆசிரியர்கள் 9 பேர் கூட்டாகச் சேர்ந்து அந்த மாணவனைத் தாக்கினார்கள் என்று கூறப்படுகின்றது.

தம்மால் மாணவன் தாக்கப்பட்ட விடயத்தை வெளியே சொன்னால் பரீட்சை எழுத அனுமதிக்க மாட்டோம் என்று தாக்குதலில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மிரட்டியுள்ளனர். இதனால் குறித்த மாணவன் 2 நாள்கள் வீட்டில் தங்கியிருந்தபோதும், உடல் நிலை மோசமாகவே சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த மாணவனின் தாயாரும் அதே பாடசாலையில் பல வருடங்களாக கற்பித்தலில் ஈடுபட்டு வந்தவர் என்றும், அவர் கடந்த ஜனவரியில் அதே வலயத்திலுள்ள பிறிதொரு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. எனவே தாயார் மீதான வெறுப்பு அல்லது வேறுஏதாவது முன் பகையை மனதில் கொண்டே மாணவனை 9 ஆசிரியர்களும் தாக்கியிருக்கலாம் என்றும் குறித்த பாடசாலையைச் சேர்ந்த இன்னொரு ஆசிரியர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஙு-4)

# போதைப் பொருள் குறித்து விழிப்புணர்வுப் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர் கழகங்களுக்கு போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், போதைப் பொருள்கள் தகவல் நிலையத்தினரால் யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்தில் இளவயதினரிடையே போதைப் பொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றது. இதனைத் தடுக்கும் நோக்குடனேயே போதைப் பொருள்கள் தகவல் நிலையத்தினர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அந்தப் பகுதி இளைஞர் கழகங்களிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதேபோன்று பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், சமூர்த்தி அதிகார சபை என்பனவற்றினூடாகவும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகள் இந்த விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்த விரும்பும் இளைஞர் கழகங்கள் தமது பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (து-5-9)

## மடிக்கணினி திருடியோர் மாட்டினர் பொலிஸாரிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
குருநகரில் அருட்தந்தை ஒருவரின் மடிக்கணினியை திருடிச் சென்றவர்கள் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர்.

யாழ். பிரதான வீதியை அண்மித்துள்ள குறித்த அருட்தந்தையின் தங்குமிடத்திலேயே கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குருநகர் மற்றும் புங்குடுதீவைச் சேர்ந்த இருவரே சுமார் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான குறித்த மடிக்கணினியைத் திருடியுள்ளனர். அருட்தந்தையின் மடிக்கணினி தங்குமிடக் காவலாளியின் உதவியுடனேயே திருடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் குருநகரைச் சேர்ந்த காவலாளியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தத் திருட்டு தொடர்பில் மறுநாள் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்ற அருட்தந்தையிடம் குறித்த மடிக்கணினி மீள ஒப்படைக்கப்பட்டதாகவும், சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஙு-4)

# பஸ் வேகத்தில் நழுவியது கை பறிபோனது குடும்பஸ்தர் உயிர்



யாழ்ப்பாணம், ஜூலை 24
பஸ்ஸினுள்ளே கைபிடி நழுவியதனால் வெளியே தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

அரியாலையைச் சேர்ந்த இராமையா கோவிந்தசாமி (வயது-50) என்பவரே உயிரிழந்தார். கடந்த 15ஆம் திகதி குறித்த நபர் யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் கூலி வேலை செய்யும் பொருட்டு பயணித்தார். அப்போது முன்னால் சென்று கொண்டிருந்த இன்னொரு பஸ்ஸை முந்துவதற்காக அவர் பயணித்த பஸ் வேகமாக செல்ல முற்பட்டது. அப்போது பஸ்ஸினுள் கைநழுவி பின்கதவு வழியே குடும்பஸ்தர் வெளியே வீசப்பட்டார்.

முன்னால் சென்று கொண்டிருந்த பஸ்ஸை பின்னால் இவர் பயணித்த பஸ் முந்திச் செல்ல முற்பட்ட போதே கைநழுவி பஸ்ஸின் பின்கதவு வழியே வெளியே வீசப்பட்டார்.


> பஸ் முந்திச் செல்ல முற்பட்டபோதே கைநழுவி பஸ்ஸின் பின்கதவு வழியே வெளியே வீசப் பட்டார்.

சம்பவத்தையடுத்து குறித்த பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். (ஙு-4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

### சரவணமுத்து சுப்பிரமணியம்



தோற்றம் 28.01.1954

மறைவு 24.06.2013

அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.07.2013) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தங்களை அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் அனைத்து வழிகளிலும் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சரசாலை தெற்கு.
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கிட்டினர்



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கிட்டினர் கடந்த (22.07.2013) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கோவிந்தர்- இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் பாலசுப்பிரமணியம், அம்பிகாதேவி, கணேசலிங்கம், கமலாதேவி, பாலசுந்தரலிங்கம், இந்திராதேவி, சந்திராதேவி ஆகியோரின் அன்பு தகப்பனாரும் தேவி, குணபரசிவலிங்கம், திலகேஸ்வரி, மூர்த்தி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் இந்திரா, விசயரத்தினம், கேதீஸ்வரன் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் நாகம்மா ஆகியோரின் சகோதரனும் நாகையா, பூமணி, கனகம்மா, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், துரைசிங்கம், நடராசா ஆகியோரின் மைத்துனரும் குகதாஸ், குணதாஸ், நளினி, அனிதா, அனிஸன், சியாமளா, சியானி, தினேஸ், பிரபாகரன், சுரேஸ், சுலைசன், கிரியா, கீர்த்தனன், சர்மினி, சகிலன், சகித், கவின், சுதன், பவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2013) வியாழக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

தகவல்:
குடும்பத்தினர்.

(29912)

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் சிவலிங்கம்

கலைமகள் வீதி, தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பூரணம் சிவலிங்கம் நேற்று (23.07.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - நாயகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் (முன்னாள், விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர், வலிகாமம் வடக்கு) அன்பு மனைவியும் பொன்னம்பலம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஈஸ்வரி, ஈஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு தாயும் இராசரத்தினம் (இராசரத்தினம் ஸ்ரோர்ஸ், சுதுமலை), அவனிகா (கனடா), ஜெயவதனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் நித்தியா குகன், சிவகனன் (கனடா), பிரணவன் மேனனி (கனடா), கிஷாந் (கனடா), டிலான் (கனடா), சுதோன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு.

(சி/11022)

தகவல்:
இராசரத்தினம் (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்றப்படாத ஆரம்ப கல்வி ஆசிரியர் விவரம் திரட்டல்

வடமராட்சி, ஜூலை 24
ஆரம்பக் கல்வியில் பயிற்றப்படாத ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக அவர்களின் விவரங்கள் வலய மட்டத்தில் வடமாகாண கல்வி அமைச்சால் திரட்டப்படுகின்றன.

தேசிய மட்டத்தில் உள்ள அரச பாடசாலைகளில் பணியாற்றும் ஆரம்பக் கல்வியில் பயிற்றப்படாத ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் ஒன்றை கல்வி அமைச்சு 900 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கவுள்ளது.

ஆரம்பக் கல்வித்துறையை வலுவுள்ள தாக்கும் ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைய இதற்கான நிதியை திறைசேரி கல்வி அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தின் ஊடாக தமிழ், சிங்கள மொழி மூலம் வார இறுதி நாள்களில் சுமார் 300 மணித்தியாலங்களைக் கொண்டதாக இந்தப் பயிற்சி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியைப் போதிக்கும் ஆரம்பக் கல்வி பயிற்சியைப் பெறாத பட்டதாரி ஏனைய பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்களின் விவரம் சேகரிக்கப்பட்டதும் அவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பமாகும் என வட மாகாண கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-8)

## சந்தைகளின் பெயர் இனி பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ். மாநகர சபைப் பகுதியில் உள்ள சகல பொதுச் சந்தைகளுக்கும் சந்தைகளின் பெயர் குறிப்பிடப்பட்ட விளம்பரத் தட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறை போன்ற மீன் சந்தைகளுக்கும் மற்றும் நகரில் உள்ள மரக்கறி விற்பனை சந்தைக்கும் பெயர் குறிப்பிடப்பட்ட விளம்பரத் தட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. (வ-17)

# ஆலய நிர்வாக சிக்கல்களை இந்து மாமன்றம் தீர்க்கும்

### முறையீடுகளின் மீது உடனடி நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24
ஆலயத்தின் நிர்வாகக் குளறுபடிகள், சொத்து உரிமைகள் தொடர்பான முறைப்பாடுகளை அகில இலங்கை இந்துமாமன்றத்தின் நடுத்தீர்ப்பு மையத்திடம் முன்வைப்பதன் ஊடாக பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் ஆலயங்களில் ஏற்படும் சொத்து, உரிமைப் பிரச்சினைகள் மற்றும் நிர்வாகத்தினர் இடையே ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக நீதிமன்றங்களை நாடவேண்டி இருந்தது. இதனால் ஆலயத்துக்கு அவமதிப்பு ஏற்பட்டதுடன் மதத்தின் தனித்துவத்தையும் இழக்கும் நிலை ஏற்பட்டது.

இதனால் அகில இலங்கை இந்து மாமன்றம் சமூக நோக்குடன் நடுத்தீர்ப்பு மையத்தை அமைத்துள்ளது.

இதனூடாக கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுகிறது.

ஆலயத்தில் நிர்வாகக் குளறுபடிகள் காரணமாக 12இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.


இந்த முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளன. ஏனைய மாகாணங்களை விட வடமாகாணத்திலேயே இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆலய சொத்துக்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக குறித்த ஆலயங்களைச் சேர்ந்த பிரதேச மக்கள் ஒன்றிணைந்து முறைப்பாடுகளைத் தெரிவிப்பதன் ஊடாக ஆலயச் சொத்துகளைப் பாதுகாக்க முடியும்.

பிரதேச மக்கள் முறைப்பாடுகளை வழங்கப் பின்னடிப்பதாலேயே பொதுச் சொத்துக்களாகவுள்ள ஆலயங்கள் பல தனியார் சொத்துக்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

இந்தச் செயல்களைக் கண்டித்து ஆலயம் சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தை நாடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## வேகமாக வளர்கிறது புதிய சிறை



பண்ணையில் புதிதாக நிர்மாணிக்கப்படும் சிறைச்சாலைக்கான கட்டடப் பணிகள் தற்போது துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. புதிய சிறைச்சாலைக் கட்டடம் சகல வசதிகளுடன் நவீன முறையில் நிர்மாணிக்கப்படுகிறது. (வ-17)

## நடமாடும் சேவை திருநெல்வேலியில் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 24
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை நாளை வியாழக் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை திருநெல்வேலி, சேர். பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஜே/97, ஜே/98, ஜே/100, ஜே/102, ஜே/103, ஜே/104, ஜே/105, ஜே/110, ஜே/111, ஜே/112, ஜே/113, ஜே/114, ஜே/122 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகள் பங்குபற்றலாம்

இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றும் பயனாளிகள் அந்தந்தப் பிரிவு கிராம சேவகருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-14-7)



## தென்மராட்சியில் 78 திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் 76 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளபடவுள்ளதாக மாவட்டச் செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

வேலைத்திட்டங்கள் தொடர்பான விவரங்கள் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# சி, டி தரங்களில் இயங்க உணவகங்களுக்குத் தடை

### சுகாதார அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக

தென்மராட்சி, ஜூலை 24
சுகாதார அமைச்சால் அண்மையில் வெளியிடப்பட்ட புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் உணவு கையாளும் நிலையங்களில் ' சி' 'டி' தரங்களில் எந்தவொரு வர்த்தக நிலையங்களும் இயங்க முடியாது என கண்டிப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட பரிசோதனையில் ' சி' தரத்துக்கு பரிந்துரை செய்யப்பட்ட அனைத்து உணவு கையாளும் நிலையங்களும் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் வர்த்தக நிலையத்தை 'பி' தரத்துக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல உணவு கையாளும் நிலையங்களாகப் பயன்படுத்தப்பட்டுவரும் சமயலறைகளில் விறகுப் பாவனையை நிறுத்தி மாற்று ஒழுங்குகள் (காஸ் அல்லது மின்சாரம்) மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த காலப் பகுதிக்குள் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாவிடின் வர்த்தக நிலையத்தை மூட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு வழங்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)



# நகை, பணத்துடன் நபர் தலைமறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 24
28 பவுண் நகையையும் 18 லட்சம் ரூபா பணத்தையும் பெற்றுக் கொண்ட இரும்புக் கடை வியாபாரி பொருள்களை விற்றுவிட்டு நகைகள் மற்றும் பணத்துடன் தலைமறைவாகிவிட்டார்.

நகைகளையும் பணத்தையும் கொடுத்து ஏமாந்த பெண் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடியைச் சேர்ந்தவரும் அங்கு இரும்புக் கடை நடத்தி வந்தவருமான ஜெகதாஸ் என்றழைக்கப்படும் நபரே இவ்வாறு தலைமறைவாகியுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] நகை மற்றும் பணத்தைப் பெற்றுள்ளார். அந்தப் பெண்ணின் கணவர் வெளிநாட்டில் உள்ளார். வீடு கட்ட வேண்டும் என்றும் வீடு கட்டி முடிந்த பின்னர் வீட்டை ஈடு வைத்துவிட்டு நகை மற்றும் பணத்தை மீளத்தருவதாகக்கூறியே அவற்றைப் பெற்றுள்ளார்.

> கடந்த வருடம் செப்ரெம்பரில் 28 பவுண் நகைகளைப் பெற்றுள்ளார். கடந்த மே மாதம் 18 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த வருடம் செப்ரெம்பரில் 28 பவுண் நகைகளைப் பெற்றுள்ளார். கடந்த மே மாதம் 18 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.

அவற்றை விரைவில் திருப்பித் தருவதாக குறித்த நபர் கூறிவந்த நிலையில் கடையிலுள்ள அநேகமான இரும்புப் பொருள்களை விற்றுவிட்டு விற்ற பணம், நகைகள், பணத்துடன் தலைமறைவாகிவிட்டார்.

வாங்கிய நகைகளைத் திருப்பித் தருவார் என்று நம்பியிருந்த பெண்ணுக்கு நம்பிக்கை மோசடி செய்துவிட்டு இவ்வாறு தலைமறைவாகியுள்ளார். சம்பவம் தொடர்பில் தாம் விசாரணை முன்னெடுப்பதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன ஊடுருவல் இனி நடக்காது

## மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி நம்பிக்கை

புதுடில்லி, ஜூலை 24
சீன ஊடுருவல் சம்பவங்கள் இனிவரும் காலங்களில் நடக்காது என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் சென்னையில் இருந்து புதுடில்லி புறப்பட்டுச் சென்ற நராயணசாமி விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அதன்போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் கூறுகையில்,
"இந்திய எல்லை பகுதியில் சீன இராணுவம் ஊடுருவும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரிப்பது கவலை அளிக்கிறது. தற்போது நமது எல்லை பகுதியான லே என்ற இடத்தில் சீன இராணுவம் ஊடுருவியுள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது. அவர்களை அப்புறப்படுத்த வெளியுறவு துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.
இதுகுறித்து சீனாவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக சீன அரசு உறுதியளித்துள்ளது. உறுதியளித்தபடி சீன அரசு நடந்து



கொள்ளும் என்று நம்புகின்றோம்" என்று தெரிவித்தார். (ற)

## நடிகை மஞ்சுளா காலமானார்



சென்னை, ஜூலை 24
நடிகை மஞ்சுளா நேற்றுக் காலை திடீரென காலமானார். நடிகர் விஜயகுமாரின் மனைவியான 59 வயதான நடிகை மஞ்சுளா சில மாதங்களாக நுரையீரல் தொற்றுநோயால் அவதிப்பட்டு வந்தார். கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் தவறி விழுந்த அவரின் வயிற்றுப் பகுதியில் கட்டிலின் கால் பகுதி குத்தியது. அதையடுத்து அவரது வயிற்றில் இரத்தம் உறைந்தது. மயக்கமடைந்த அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட மஞ்சுளாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும், அவரின் சிறுநீரகம் படிப்படியாகப் பழுதடைந்தது. இந்தநிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார்.
1965ஆம் ஆண்டு சாந்தி நிலையம் என்ற திரைப்படத்தில் சிறுமியாக திரையுலகில் பிரவேசித்த மஞ்சுளா பின்னர் ஏராளமான படங்களில் நடித்து பாராட்டைப் பெற்றார். (ற)



உலகிலேயே சிறந்த வாடகைக் காராக (டக்ஸி) இந்தியாவின் அம்பாசடர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. எத்தனையோ புதுவிதமான தொழில்நுட்பம் பொருந்திய கார்கள் வலம் வந்தாலும் அதைத் தாண்டி இந்தியாவின் அம்பாசடர் காருக்கு இந்தப் பெருமை கிடைத்துள்ளது. இங்கிலாந்தைச் சேர்ந்த மோட்டார் மியூசியம் பிலியு என்ற அமைப்பு இந்தத் தேர்வை அறிவித்துள்ளது.இங்கிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி, தென்னாபிரிக்கா, மெக்ஸிகோ, ரஷ்யா ஆகிய நாடுகளின் கார்களோடு மோதி இந்தப் பெருமையைப் பெற்றுள்ளது அம்பாசடர்.
சி.கே.பிர்லா குழுமத்தின் இந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிட்டெட் நிறுவனம் 1948ஆம் ஆண்டு அம்பாசடர் காரை மேற்கு வங்க மாநிலம் உத்தர்பரா என்ற இடத்தில் உற்பத்தி செய்ய ஆரம்பித்திருந்தது. அன்றில் இருந்து இன்றுவரை மக்கள் மத்தியில் தனி அபிமானத்தைப் பிடித்துள்ளது அம்பாசடர். (ற)

## வழக்குகளை மீளப்பெற முடியாது

### கூடங்குளம் விவகாரம் குறித்து தமிழக அரசு

சென்னை, ஜூலை 24
கூடங்குளம் போராட்டக் குழுவினர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை தற்போது உள்ளசூழ்நிலையில் திரும்பப் பெறமுடியாது என்று தெரிவித்துள்ளது தமிழக அரசு.
கூடங்குளம் போராட்டக் குழுவினர் மீது போடப்பட்டுள்ள 1000க்கும் மேற்பட்ட வழக்குகளை திரும்ப பெற வேண்டும் என்று வழக்கறிஞர் புகழேந்தி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அதுகுறித்த விசாரணைகளின் போதே தமிழக அரசு இவ்வாறு விளக்கம் அளித்துள்ளது.
இதுகுறித்து அரச தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் விளக்கமளிக்கையில்,
"தற்போதுள்ள சூழ்நிலையில் கூடங்குளம் போராட்டக் குழுவினர் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை திரும்ப பெற முடியாது. சூழ்நிலை மாறினால் வழக்குகளை திரும்ப பெற அரசு பரிசீலனை செய்யும். அத்துடன் கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம் வழங்கிய அனுமதியை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று தெரிவித்தார்.
இதுகுறித்த வழக்கை திகதி குறிப்பிடாது ஒத்திவைத்தது உயர்நீதிமன்றம். (ற)



## கருணாநிதிக்கு மறதி நோய்

### பருதி இளம்வழுதி கடும் சாட்டை

சென்னை, ஜூலை 24
தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட மறந்து விடும் அளவுக்கு, கருணாநிதியை ஞாபக மறதி நோய் பிடித்து ஆட்டுகிறது என்று தி.மு.கவில் இருந்து பிரிந்து அ.தி.மு.கவில் இணைந்துள்ள பரிதி இளம்வழுதி கடுமையாகச் சாடியுள்ளார்.
தஞ்சையில் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,
"காவிரி விவகாரம் தொடர்பாக, ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. உறுப்பினர்கள் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். வெளிநடப்பு செய்தது பற்றி நிருபர்கள் கேட்ட போது, திருக்குறள் வாசித்தனர்; நன்றாக இருந்தது; வெளிநடப்பு செய்து விட்டோம்' என, பதிலளித்தார். அதைத் தொலைக் காட்சியில் பார்த்த கருணாநிதி கடும் கோபம் கொண்டார். அருகில் இருந்த என்னை பார்த்து, "தி.மு.க. உறுப்பினர்கள் யாருக்கும் பேசவே தெரியவில்லை. அதுசரி நீ ஏன் இப்போதெல்லாம் சட்டசபைக்கு போவதில்லை. முன் போல பேசுவதில்லை" என்று கேட்டார் கருணாநிதி. தேர்தலில் திட்டமிட்டுத் தோற்கடிக்கப்பட்ட என்னைப் பார்த்து ஏன் சட்டசபைக்குப் போகவில்லை என்று கேட்டது எனக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.
கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் யார் என்று கூட, தெரியாத தலைவராக கருணாநிதி உள்ளார். அவரை ஞாபக மறதி நோய் பிடித்து ஆட்டுகிறது. தமிழக மக்கள் ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை மாறி மாறி வாக்கு போட்டு ஜெயிக்க வைப்பர். அதனால் எதிர் வரும் தேர்தலிலும் வென்று விடலாம் என கருணாநிதி பகல் கனவு காண்கிறார்" என்று தெரிவித்தார். (ற)

## வரைமுறையற்ற பேச்சு வம்பிலேயே முடியும்

### கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு ராகுல் காந்தி எச்சரிக்கை

புதுடில்லி, ஜூலை 24
கட்சி வரைமுறைகளை மீறி கருத்து தெரிவிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.
காங்கிரஸ் மூத்த தலைவர் ஷகில் அகமது தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள கருத்தில் குஜராத் கலவரத்துக்கு பின்புதான் இந்தியன் முஜாகித்தீன் உருவானது என கருத்து தெரிவித்தார். இதற்கு பா.ஜ. கடும் கண்டனம் தெரிவித்தது.
குறித்த கருத்துகளால் எழுந்துள்ள சர்ச்சைகளை அடுத்து காங்கிரஸ் தலைவர்கள் அடிக்கடி தெரிவிக்கும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பாக காங்கிரஸ் மேலிடம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. அதன் பின்னணியிலேயே ராகுல் காந்தி இவ்வாறு கண்டிப்பான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.
இந்த விடயம் குறித்து ராகுல்



காந்தி கருத்துத் தெரிவிக்கும்போது,
"காங்கிரஸ் செய்தி தொடர்பாளர்கள், குழு நிர்வாகிகளுக்கு தனிப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் பொறுப்பாளர்களாக இருக்கும் போது கட்சி வரைமுறைக்கு உட்பட்டு நடந்து கொள்ள வேண்டும். நாம் மகாத்மா காந்தி கட்சியை சேர்ந்தவர்கள். கட்சி கொள்கையை மீறி செயல்படக்கூடாது. அவ்வாறு செயல்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார். (ற)

## கருணாநிதிக்குப் பொறாமை; குற்றஞ்சாட்டுகின்றார் 'ஜெ'

சென்னை, ஜூலை 24
என்எல்சி பங்குகளை தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் வாங்கும் முடிவை தி.மு.க. தலைவர் கருணாநிதி விமர்சித்திருப்பது, அவரது ஆதங்கத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது என்று முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக ஜெயலலிதா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
"என்எல்சி பங்குகளை தமிழக அரசு வாங்கும் முடிவு, சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சிறந்த முடிவு. தமிழக அரசு அந்த யோசனையைத் தெரிவிக்காமல் இருந்திருந்தால், என்எல்சி பங்குகளை



மத் திய அரசு தனியாருக்கு விற் பனை செய்திருக்கும்.
பொதுத்துறை நிறுவனங்களின் 10 சதவீத பங்குகள் பொதுப்பங்களாக இருக்க வேண்டும் என்று விதியை 2010 ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டு வந்தபோது மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்த கருணாநிதி அமைதியாக இருந்தது ஏன் என்பது தெரியவில்லை.
இந்த விவகாரத்தில் தமிழக அரசுக்கு கிடைத்த வெற்றியைப் பொறுக்க முடியாமல் கருணாநிதி பேசிவருகின்றார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஐரோப்பிய யூனியன் தடை

## பயங்கரவாதப் பட்டியலில் இணைத்தது

லண்டன், ஜூலை 24

லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பின் இராணுவப் பிரிவை தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.

அமெரிக்காவும், இஸ்ரேலும் ஹிஸ்புல்லா இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக ஏற்கெனவே அறிவித்துள்ள நிலையில் ஐரோப்பிய யூனியனும் அந்த அமைப்புக்கு தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தன.

இந்நிலையில், ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 28 நாட்டு நிதியமைச்சர்களின் மாதாந்த கூட்டத்தில் ஹிஸ்புல்லா இயக்கத்தை பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் சேர்ப்பது என கடந்த திங்கட்கிழமை ஏகமனதாக முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து நெதர்லாந்து நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் பிரான்ஸ் திம்மர்மேன்ஸ் கூறுகையில்; "ஐரோப்பிய யூனியன் ஹிஸ்புல்லா இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தமை வரவேற்கத்தக்கது.



மிகவும் முக்கியமான இந்த முடிவு எனக்கு மன நிறைவைத் தருகிறது" என்று தெரிவித்துள்ளார்.

இந்தத் தடையின் மூலம் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்கப்படமாட்டாது. அந்த அமைப்புடன் தொடர்புடையவர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் முடக்கப்படும்.

எனினும், அந்த அமைப்புடன் தொடர்புடையவர்களை அடையாளம் காண்பதில் சிக்கல் நீடிப்பதால், இந்தத் தடையை நடைமுறைப்படுத்துவது மிகவும் சிரமம் என்று கூறப்படுகிறது. ஹிஸ்புல்லா இயக்கத்தின் இராணுவப் பிரிவு லெபனானின் இராணுவத்துக்கு நிகரானதாகக் கருதப்படுகிறது. சிரியாவில் அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்துக்கு அந்த அமைப்பு உதவி வருகிறது. (ற)

# அமெரிக்காவுடன் இனி உறவில்லை -வெனிசுவேலா

கராக்கஸ், ஜூலை 24

அமெரிக்காவுடனான உறவை புதுப்பிக்கும் முயற்சியை கைவிடவுள்ளோம் என்று வெனிசுவேலா அறிவித்துள்ளது.

ஐ.நாவுக்கான அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்டுள்ள சமந்தா பவர், வெனிசுவேலாவுக்கு எதிராக அறிக்கை விடுத்ததையடுத்தே அந்த நாடு இந்த முடிவை எடுத்துள்ளது.

வெனிசுவேலா தினமும் 9 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெயை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கிறது. ஆனாலும் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் வொஷிங்டன், காரகாஸ் நகரங்களில் பரஸ்பரம் இரு நாட்டு தூதரகங்களும் செயற்படவில்லை.

இந்தநிலையில் அமெரிக்கா வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி மற்றும் வெனிசுவேலா வெளியுறவுத் துறை அமைச்சர் இலியாஸ் ஜவுவா ஆகிய இருவரும் கடந்த ஜூன் மாதம் சந்தித்துப் பேசினர். அதையடுத்து இருநாடுகளுக்கிடையே மீண்டும் உறவைத் தொடருவது என முடிவு செய்யப்பட்டது.

எனினும் இந்த முயற்சியைக் கைவிடுவதாக வெனிசுவேலா திடீரென அறிவித்துள்ளது. (ற)

# கடத்தப்பட்டாராம் மூர்சி

## எகிப்திய இராணுவம் மீது குடும்பத்தினர் குற்றச்சாட்டு

கெய்ரோ, ஜூலை 24

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி மூர்சியை அந்நாட்டு இராணுவம் கடத்திச் சென்றுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள அவரது குடும்பத்தினர், அது குறித்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு எகிப்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முகமது மூர்சி வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றார். எனினும் அதன் பின்னர் அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த பொதுமக்கள் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டனர்.



போராட்டங்கள் தீவிரமடைந்து நாடு முழுவதும் பரவியதை அடுத்து, அந்நாட்டு இராணுவம் அதில் தலையிட்டது. கடந்த மாதம் 3ஆம் திகதி திடீரென ஆட்சியைக் கைப்பற்றிய அந்நாட்டு இராணுவம், மூர்சியைக் கைது செய்ததுடன், அவரை இரகசிய இடத்தில் காவலில் வைத்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மூர்சியின் குடும்பத்தினர், "மூர்சியை இராணுவத்தினர் கடத்திச் சென்றுள்ளனர். அவர் தற்போது எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறித்த தகவல் எதுவும் கூறப்படவில்லை. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசியல் தலைவரை இராணுவம் கைது செய்துள்ளது. அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு இராணுவம் தான் பொறுப்பேற்க வேண்டும். இந்தப் பிரச்சினையை சர்வதேச ரீதியில் கொண்டு சென்று மூர்சியை மீட்போம்" என்று தெரிவித்துள்ளனர். (ற)

# பாக்தாத் தாக்குதல்களில் 65 பேர் சாவு

பாக்தாத், ஜூலை 24

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதல்களில் 65 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நோன்பினை நிறைவு செய்ய மக்கள் கடைவீதிகளை நோக்கிச் சென்றபோது ஆங்காங்கே கார்குண்டுகள் வெடித்துள்ளன.

இந்த தாக்குதல்களில் 65 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற)

# பலஸ்தீன கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் முடிவு

ஜெருசலேம், ஜூலை 24

இஸ்ரேல் சிறையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பலஸ்தீனர்களை விடுதலை செய்ய, இஸ்ரேல் அரசு தீர்மானித்துள்ளது.

அதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையே, நீண்டகாலமாக நிலவி வரும், எல்லைப் பிரச்சினை தொடர்பான மோதலை, முடிவுக்கு கொண்டுவர, அமெரிக்கா முயன்று வருகிறது.

சிறைக் கைதிகளின் விடுவிப்பு தொடர்பான அறிவிப்பை அடுத்து அமெரிக்கா வெளியுறவு அமைச்சர் ஜோன் ஹெறியின் ஏற்பாட்டின்படி, இரு நாடுகளுக்கும் இடையேயான அமைதிப் பேச்சுக்கள் இந்த வார இறுதியில் ஆரம்பமாகும் என்று கூறப்படுகின்றது. (ற)





நாளை பிரேஸிலில் நடைபெற இருக்கும் 28ஆவது உலக இளைஞர் திருவிழாவில் கலந்துகொள்வதற்காக போப்பாண்டவர் பிரான்ஸிஸ் பிரேஸிலுக்குப் பயணமாகியுள்ளார். பிரேஸிலில் தற்போது அரசுக்கெதிராக கொந்தளிப்பான நிலை காணப்படும் நிலையில் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ள போப்பாண்டவர், தனது மூடிய பாரம்பரிய வாகனத்தைத் தவிர்த்து, திறந்த வாகனத்தில் பயணித்து மக்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார். (ற)

# எகிப்தில் பஸ் விபத்து

## 15 இராணுவத்தினர் சாவு

கெய்ரோ, ஜூலை 24

எகிப்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் அந்த நாட்டு இராணுவத்தினர் 15 பேர் உயிரிழந்ததுடன், 40 பேர் காயமடைந்துள்ளனர். இராணுவத்தினர் பயணித்த பஸ் லொறியொன்றுடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

துறைமுக நகரான அலஸ்ட்ராவுக்கும் தலைநகர் கெய்ரோவுக்கு இடையிலான வீதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ரமழான் மாத விடுமுறைக்காக தமது வீடுகளுக்குச் சென்ற படையினரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.



எகிப்தில் வருடாந்தம் இடம்பெறும் வீதி விபத்துக்களில் சுமார் 12 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது. (ற)

# வில்லியம் கேத்துக்கு ஆண் குழந்தை

லண்டன், ஜூலை 24

பிரிட்டனின் இளவரசர் வில்லியமின் மனைவி வில்லியம் கேத்துக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது என்று அரச குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.


நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணி 24 நிமிடங்கள் அளவில் இந்தக் குழந்தை பிறந்தது என்று தெரிவித்த பக்கிங்ஹாம் அரண்மனை வட்டாரங்கள், குழந்தை மூன்றரை கிலோ எடையுடன் பிறந்தது என்றும் மேலும் தெரிவித்தன.

பிரிட்டனின் இளவரசன் என்று அறியப்படவிருக்கும் இந்த ஆண் குழந்தை காலப்போக்கில் பிரிட்டிஷ் சிம்மாசனத்துக்கு வர உரிமையுள்ள வாரிசுகளில் மூன்றாவதாக இருக்கும்.

15 கொமன்வெல்த் நாடுகளின் தலைமைப் பதவியையும் அது வகிக்கும்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், "புதிய வாரிசின் வருகை நாட்டின் வாழ்க்கையில் முக்கியமான தருணம். அதைவிட, இது ஒரு நேசமுடனும் பாசமுடனும் இருக்கும் ஒரு தம்பதியருக்குக் கிட்டியுள்ள மிக அற்புதமான தருணம்" என்று கூறினார்.

பிரிட்டனின் புதிய வாரிசின் வருகையை அடுத்து கேத் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனைக்கு வெளியே பெருந்திரளான கூட்டம் கூடியிருந்தது. (ற)



புதிய வாரிசின் வருகை குறித்து பக்கிங்ஹாம் அரண்மனையில் வைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பு.

# குறைகின்றது காடழிப்பு வீதம்

ஜொகன்னஸ்பேர்க், ஜூலை24

உலகில் மிகப் பெரிய மழைக்காடான கொங்கோ பள்ளத்தாக்கில் காடழிப்பு வீதம் குறைவடைந்துள்ளது.

ஆபிரிக்காவின் கொங்கோ பள்ளத்தாக்கிலுள்ள மழைக்காடுகளின் காடழிப்பு வீதம் 2000 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மூன்றில் ஒன்றாக வீழ்ச்சிடைந்துள்ளது.

விவசாயத் துறையை விடுத்து எண்ணெய் மற்றும் சுரங்கத் துறைகளில் கவனம் செலுத்தப்பட்டமையே இந்த வீழ்ச்சிக்கு காரணம் என்று கூறப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனம் விற்பனைக்கு

NP LF -XXXXஇலக்கமுடைய நிசான் பெனட் லொறி (டீசல்) வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:075 671 9272 (35203) (3.5.6)

## தவறிவிட்டது

சரசாலை வடக்கு கந்தசாமி தவமலர் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 845223128V) கடந்த (19.07.2013) இல் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவை யின்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும்.

தொடர்பு: 077 851 8734

## தேவை

அச்சகமொன்றிற்கு அனுபவமுள்ள கணினி இயக்குநர் ஒருவர் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 390 1877

(29854)(3.6.11)

## தொலைத் தொடர்பு நிலைய பொருள்கள் விற்பனைக்கு

உரிமையாளர் வெளிநாடு செல்லும் காரணத்தினால் நல்ல நிலையில் உள்ள கணினிகள், பக்ஸ் இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம், ஸ்கானர், பிறிண்டர், லெமனேற்றிங் மிசின் போன்ற அனைத்து தொலைத் தொடர்பு சாதனப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 267 9728

(39853)(3.6.11)

## விற்பனைக்கு

10 இஞ்சி பட்டடை மற்றும் தச்சு வேலைக் குரிய சகல மிசின்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 364 9046

(29852)(3.6.11)

## European Union Welcomes Professionals !!

தொழில் வாய்ப்புடன் சட்டபூர்வமாகக் குடிபெயர அரிய வாய்ப்பு

**MIRGRATE TO EUROPE**

DENMARK - NORWAY-SWEDEN - HOLLAND-ENGLAND

பட்டதாரிகள்; தொழில்தேடுவோருக்கான வேலை வாய்ப்புக்கள்

EU BLUE CARD
THE EUROPEAN UNION WELCOMES HIGHLY EDUCATED PROFESSIONALS

Entrance fee: Rs 1000

01) Managers (General Managers/ Finance Manager / Account manager / Audit Manager / Admin Manager)
(24-50 வயதுக்கட்பட்டவர்கள்/CIMA or Degree/பொருத்தமான தொழில் அனுபவமுடையவர்கள்)

2) IT Managers / Programmers / IT Engineer
24-50 வயதுக்குட்பட்டவர்கள்/ Degree/HND/Any Computer Diploma with Duration of at least 1 year
பொருத்தமான தொழில் அனுபவமுடையவர்கள்)

03) Marketing & Sales Managers
(50 வயதுக்குட்பட்டவர்கள்-பொருத்தமான தொழில் அனுபவமுடையவர்கள்
CIM or Degree / HND

குடும்பமாக குடிபெயர அரிய வாய்ப்பு
4 - 5மாதங்களுக்கிடையில் Approval
Good Command of English ( No IELTS)

Don't Miss IT

- 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச கல்வி மற்றும் பராமரிப்பு செலவுகள்
- இலவச வீசா மற்றும் சட்டஆலோசனைகள்
- தகமை மற்றும் அனுபவத்திற்கேற்ப சலுகைகளும் அதியுச்ச சம்பளமும்
- குடும்பத்துடன் (தங்கியிருப்போர்) குடிபெயரும் வாய்ப்பு

14 வருடங்களுக்கு மேற்பட்ட நம்பகமான உன்னத சேவை

## Study in UK -NewZeland-Holland

Hotel Management/ Foundation Degree

Entrance fee Rs 500

| for UK: | for Newzeland | for Holland |
|---|---|---|
| minimum GCE(O/L) | minimum GCE(A/L) | minimum GCE(O/L) |
| Pass for English | Pass for English | Pass for English |
| Student Can fly within 1 month | fly within 2 months | fly within 4-6 months |
| Lowest Course fee | Lowest Course fee | Lowest Course fee |

Call over with your Educational Qualifications/ Guranteed Process/ No Hidden Charges/ Part Time work

நேர்முகத்தேர்வுக்கு அனைத்து சான்றிதழ்களுடனும் வரவும்.

பதிவுசெய்யப்பட்ட ஆசனங்களே உள்ளதால் உங்கள் அனுமதிக்கும் Interview நேரத்திற்கும் 075 0 713188 என்ற இலக்கத்திற்கு உடனே அழையுங்கள்

ஆலோசனைகளுக்கு எந்தவிதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது

Assesment & Interview
27 & 28 ம் திகதிகளில்
Tilko City Hotel-Jaffna ல் நடைபெறும்
Call Over with your Bio Data

(Approved Center for Oxford College for International Careers)

ICON Center for International Careers
(ICIC) -16,St.Antony's Mw-Colombo-13
Tel: 011-5 644895 Mr.Sam 077 198 5871
Mr.Danny :075 0713188 (தமிழில்)


# இனவாதச் செயற்பாட்டை அரசு நிறுத்த வேண்டும்

## அரச பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள்

அம்பாறை,ஜூலை 24

நாட்டில் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக தலைவிரித்தாடும் இனவாத செயற்பாடுகளுக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். முஸ்லிம் மக்களின் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களும், இனவாத அச்சுறுத்தல் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக இடம்பெறுவது கண்டிக்கத் தக்கது.

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்தார். இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீதான பேரினவாத, இன வாத தாக்குதல்கள் இந்த நாட்டில் இடம்பெற்று வருகின்றன.

சிறுபான்மையின மக்களைப் பெரிதும் புண்படுத்தும் வகையில் புத்த பிரானின் சிலைகளும் வேண்டுமென்றே விதைக்கப்பட்டு வருகின்றன.

புனித ரமழான் மாத ஆரம்பத்தில் மஹியங்கனை அரபா ஜும்ஆ பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெமட்ட கொட மடுவத்தில் இறைச்சி லொறி ஒன்றுக்கு காவி உடை தரித்தவர்கள் தீ வைத்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

அநுராதபுரம் தர்ஹா தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் தெமட்ட கொட தீவைப்புச் சம்பவம் வரை 25 இற்கு மேற்பட்ட தாக்குதல் சம்பவங்களும், முஸ்லிம் சமூகத்தின் கலாசார விழுமியங்களுக்கு இடையூறு விளைவிக்கும் சம்பவங்களும் நாட்டில் இடம்பெற்றுள்ளன.

> முஸ்லிம் சமூகத்தின் கலாசார விழுமியங்களுக்கு இடையூறு விளைவிக்கும் சம்பவங்களும் நாட்டில் இடம்பெற்றுள்ளன.

இத்தனை இன மோதலுக்கான தூண்டுதல் சம்பவங்கள் இடம் பெற்றும் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. அது முஸ்லிம்கள் மத்தியில் மட்டுமன்றி ஏனைய சிறுபான்மை சமூகங்கள் மத்தியிலும் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நாட்டில் பெரும்பான்மையினரான சிங்களவர் நலன், பாதுகாப்பு மட்டுமல்ல, சிறுபான்மை சமூகங்களையும் பாதுகாக்கும் கட்டாய கடப்பாடு அரசுக்கு உண்டு. எனவே இன்னுமின்னும் அரசு இத்தகைய இனவாத, மதவாத செயற்பாடுகள் நாட்டில் தொடர அனுமதிக்காது முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## அரசாங்க அறிவித்தல்
## யாழ். மாவட்டச் செயலகம் கேள்வி கோரல் -2013

மாவட்ட செயலகத்தால் கீழ்வரும் பொருள்களுக்கான கூறுவிலைகள், பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரி கிளையில் **25.07.2013** ஆம் திகதியிலிருந்து **15.08.2013** ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் **காலை 9.00** மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரையும் விநியோகிக்கப்படும். மேலதிக விவரங்களை மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரி கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொருள்கள் விவரம் வருமாறு**

1. காகிதாதிகள்/ எழுது பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்கள் விநியோகித்தல்
2. அடையாள அட்டைகள் தயாரித்தல்
3. மின்சார உபகரணங்கள் விநியோகித்தல்
4. நுகர்வுப் பொருள்கள் விநியோகித்தல்
5. புகைப்படப் பிரதி இயந்திரம், கணினி இயந்திரம் என்பனவற்றிற்கான ரோனர்கள் விநியோகித்தல்

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(C/11009)(3.6.11)

## பிரதேச செயலகம் - வலி. தெற்கு, உடுவில்

## கேள்வி அறிவித்தல்

### உடுவில் பிரதேச செயலக கலாசார மண்டபத்துக்கு மண்போட்டு நிரவுதலும் விறாந்தை அமைத்தலும்

I. பிரதேசசெயலாளர், பிரதேச செயலகம், உடுவில் சார்பாக தகுதி வாய்ந்த பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஒப்பந்த வேலைக்குக் கோருகின்றார்.

II. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கணக்காளர், பிரதேச செயலகம், வலி. தெற்கு, உடுவில் - 0213214696 இல் இருந்து மேலதிக அனைத்துத் தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம். கீழ்க் குறிப்பிடப்படும் ஒப்பந்த வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் கேள்வி கோரப்படுகிறது.

III. கேள்வி விண்ணப்பங்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00 செலுத்தி 05.08.2013ஆம் திகதி பி.ப 14.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

IV. கேள்விகளை 07.08.2013ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக பிரதேச செயலகம் உடுவிலில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக / பதிவுத் தபாலில் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

V. கேள்வி திறக்கப்படும் நேரம் : 07.08.2013 பி.ப 14.30 மணி

VI. கேள்வி செல்லுபடியாகும் காலம் : 09.10.2013 மேலதிக தகவல்களுக்கு: 021 321 4696

VII. கேள்விப் பத்திர வைப்புத் தொகை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இல. | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (Rs.) | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை வைப்புப் (பணமாக) |
|---|---|---|---|---|
| VS/DS/DA/EDA/ CUL-CENT/01 | மண்போட்டு நிரவுதலும் விறாந்தை அமைத்தலும். | 1465000.00 | 45 நாள்கள் | 15000.00 |

மு.நந்தகோபாலன், பிரதேச செயலாளர்,
வலி. தெற்கு,உடுவில்.

(சி/11008) (10,6,3)


## வீடு வாடகைக்கு

மூன்றாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் (புதிய HNB வங்கிக்கு அருகில் வைத்தியசாலை பின்புறமாகவும், பஸ்தரிப்பிடத்திற்கு அருகில்) சகலவசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 582 0084

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் 1½ (ஒன்றரை) பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (30950)(2.6)

தொடர்பு:- 077 712 0968

## வீடு விற்பனைக்கு

வளாக லேன்(கம்பஸ்லேன்) இரண்டு பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 020 0700 (31083) (3.5.6)

## விற்பனைக்கு

தேர் வடக் கயிறு விற்பனைக்கு உண்டு.


தொடர்பு: (31147) (15.3.6)
021 321 2763, 077 711 8493


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கங்கள் மூலம் பாடசாலைகளில் தமிழ் வளர்க்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
ஒவ்வொரு பாடசாலைகளிலும் தமிழ்ச் சங்கங்களை அமைத்து அதன் மூலமாக தமிழ் மொழியை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது என்று யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தெரிவித்தார்.
தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்.சென். பற்றிக்ஸ்கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
மாணவர்கள் தற்போது மனித பண்பியல் சார்ந்த பாடங்களைக் கற்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படுவோரில் இதுவரை இல்லாத அளவுக்கு இந்தமுறை சிறப்பாக தமிழ்ப் பாடத்தைக் கற்பதற்கென 60 பேர் வரையிலானோர் விண்ணப்பித்துள்ளனர். முன்னைய காலங்களில் சுமார் 20 பேர் இவ்விதம் கூறியுள்ளார்.
பெரும்பாலான பாடசாலைகளில் தமிழ்மன்றம் உருவாக்கப்பட்டு தமிழ் வளர்க்க உந்து சக்தியாக இயக்கப்படுகிறது.
அநேகமான பாடசாலைகளில் தமிழ் மன்றங்கள் பெயரளவிலேயே இயங்குகின்றன.
உரிய செயற்பாட்டை அவை முன்னெடுக்கவில்லை. எதிர்காலத்தில் பாடசாலைகள் தோறும் தமிழ்ச் சங்கங்கள் அமைக்கப்படுவதன் மூலமாக தமிழ்மொழியை வளர்க்க இயலும் - என்றார். (வ-4)

பெரும்பாலான பாடசாலைகளில் தமிழ்மன்றம் உருவாக்கப்பட்டு தமிழ் வளர்க்க உந்து சக்தியாக இயக்கப்படுகிறது.



## புத்தூர் தகவல்களை வெளியிடும் இணையத்தளம்

அச்சுவேலி, ஜூலை 24
புத்தூர் பகுதியின் செய்திகள் மற்றும் தகவல்களை வெளியிடுவதற்கு இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் முகவரி வெளியிடப்பட்டுள்ளது. www.newputhuvai.com என்ற இணைய முகவரியுடன் தொடர்புகளை ஏற்படுத்தி புத்தூர் பகுதியின் தகவல்கள், சமகால செய்திகள் மற்றும் விவரங்களை அறிந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

## நவீன வசதியுடன் நீர்வழங்கல் சபை உதவிப் பொது முகாமையாளர் அலுவலகம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
நவீன வசதிகளுடன் கிளிநொச்சி தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவி பொது முகாமையாளர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.
போருக்குப் பின்னர் மீளப் புனரமைக்கப்பட்ட போதும் கடந்த மூன்று வருடங்களாக மேற்படி அலுவலகம் திறந்து வைக்கப்படவில்லை.
இது குறித்து கிளிநொச்சி அரச அதிபர், யாழ். தேசிய நீர்வழங்கல் சபையின் உயரதிகாரிகள் கொழும்பு தலைமையகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து குறித்த அலுவலகம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
2005 இல் 'நீரப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட கட்டடத்தை கடந்த 16 ஆம் திகதி அமைச்சர் டினேஸ் குணவர்த்தன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (வ-50)

## ஹேமலதா நூலகத்தில் புதிய நூற் பிரிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24
நவாலி ஹேமலதா ஞாபகார்த்த பொது நூலகத்தில் புதிய நூற் பிரிவுகளிலுள்ள நூல்களை ஜி.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தர மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து வருகின்றனர்.
குறிப்பாக வரலாறு, தமிழ், இந்து நாகரிகம் கற்கும் மாணவர்கள் கூடுதல் பயன் அடைந்து வருகின்றனர் என்று நூலக அபிவிருத்தி உதவியாளர் செல்வி அஜந்தினி நடேசன் தெரிவித்தார்.
பத்திரிகைகளின் தொகுப்பு நூல்களை ஆய்வு செய்யும் பல்கலை மாணவர்கள் ஆர்வத்துடன் இந்த நூல்களைப் படித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-41)

# 45 பாடசாலைகளில் தொ.நு.ஆய்வுகூடங்கள்

### பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 24
வடமாகாணத்தில் 45 பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வு கூடங்களுக்கானகட்டத்தொகுதிகளை நிர்மாணிக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.
இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படும் இந்தப் பணியின் முதற்கட்டம் அடுத்த மாதம் நிறைவுபெறும். 675 மில்லியன் ரூபா செலவில் இவை நிர்மாணிக்கப்படுகின்றன என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
உலக வங்கி மற்றும் ஆஸ்திரேலியன் நிதி உதவியிலிருந்து ஆய்வு கூடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாடசாலைக்குமான கட்டடத்தொகுதி நிர்மாணிப்புக்கு தலா 15 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. முதல் கட்டமாக 28 பாடசாலைகளில் ஆய்வு கூடங்களுக்கான கட்டத் தொகுதிகள் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவை அடுத்த மாதம் நிறைவடையும் என்று எதிர்பாக்கப்படுகிறது.
யாழ்.மாவட்டம் கல்வி வலயங்களில் தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், நெடுந்தீவு மகாவித்தியாலயம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், மட்டுவில் சந்திரபுரஸ்கந்த வரோதய மகா வித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம், ஏழாலை மகா வித்தியாலயம், சங்கானைசிவப்பிரகாசவித்தியாசாலை, வசாவிளான் மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயம் என்பனவும்
கிளிநொச்சி மாவட்டத்தில் பாரதி வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம், முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு மகாவித்தியாலயம், பாண்டியன் குளம் மகா வித்தியாலயம், மாங்குளம் மகாவித்தியாலயம், முத்தையன் கட்டு ஆர்.பி., ஜி.ரீ.எம்.பாடசாலை, யோகபுரம் மகாவித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டன.
மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் பியர் ஜீ.ரீ.எம். பாடசாலை, நானாட்டான் மகா வித்தியாலயம், பெரியமடு மகாவித்தியாலயம் ஆகியனவும் தெரிவுசெய்யப்பட்டன.
வவுனியா மாவட்டத்தில் மடுகந்த தேசிய பாடசாலை, தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம், அல் இக்பால் வித்தியாலயம், பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம், ஓமந்தை மத்திய கல்லூரி, நெடுங்கேணி மகாவித்தியாலயம், வீரபுரம் மணிவாசகர் மகாவித்தியாலயம், புளியங்குளம் இந்துக் கல்லூரி ஆகிய 28 பாடசாலைகளில் ஆய்வு கூடம் நிர்மாணிப்புப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.
இரண்டாம் கட்டமாக 17 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு அங்கும் ஆய்வு கூடத்துக்கான நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், யாழ்.சென்.ஹென்றிஸ் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையும், கிளிநொச்சி மாவட்டத்தில் முருகானந்தா மகாவித்தியாலயம், மத்திய கல்லூரியும், முல்லைத்தீவு மாவட்டத்தில் விஸ்வமடு மகாவித்தியாலயம், பாலிநகர் மகாவித்தியாலயமும், மன்னார் மாவட்டத்தில் பாத்திமா முஸ்லிம் மகா வித்தியாலயம், முசலி மகாவித்தியாலயம், எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகாவித்தியாலயமும், வவுனியா மாவட்டத்தில் சைவப்பிரகாச பெண்கள் கல்லூரி, பூவரசங்குளம் மகாவித்தியாலயம், புதுக்குளம் மகாவித்தியாலயமும், யாழ்.மாவட்ட தேசிய பாடசாலைகளான யாழ். இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். (வ-4)

## பளையில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் இயக்கச்சியில் மீட்பு

பளை, ஜூலை 24
பளை நகரப் பகுதியில் மூன்று மாதங்களுக்கு முன்னர் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மூன்று தினங்களுக்கு முன்னர் இயக்கச்சியில் உள்ள வீடொன்றில் பளைப் பொலிஸாரால் மீட்கப்பட்டது.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற போது வீட்டின் அறைக்குள் மோட்டார் சைக்கிள் காணப் பட்டதை அடுத்து அதனை மீட்டனர்.
வீட்டுக்காரரை பொலிஸார் விசாரித்த போது மோட்டார் சைக்கிளை அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தம்மிடம் அடகு வைத்ததாகக் கூறி அதற்கான கடிதத்தையும் காண்பித்தனர்.
பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது, மோட்டார் சைக்கிளை அடகு வைத்தவர் பளைப் பகுதியில் இடம்பெற்ற பல் வேறு திருட்டுக்களின் சம் பந்தப்பட்டு இந்த மாத முற் பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளார் என தெரியவந்தது.
இதனையடுத்து பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து நபரையும் முற்படுத்தினர்.
இந்த நபரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

## காசநோய் அதிகாரி மீண்டும் கடமைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24
தாய்லாந்துக்கு புலமைப் பரிசில் பெற்றுச் சென்ற யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி மீண்டும் கடமைக்குத் திரும்பியுள்ளார்.
அண்மையில் புலமைப் பரிசுக்குத் தெரிவாகி தாய்லாந்துக்கு மருத்துவ அதிகாரி பயணமானதால் பதில் வைத்தியர் மணிவாசகன் கடமை பதில் கடமையாற்றி வந்தார்.
யாழ்.மாவட்ட காசநோய் வைத்தியசாலையில் சுவாச நோய்த் தாக்கத்துக்கு உட்படுவோர் உட்பட பண்ணைப் பகுதியைச் சேர்ந்த நோயாளர்களும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் வைத்தியர் ஒருவர் மட்டும் கடமையில் இருந்ததால் தாமதமாக சிகிச்சைகளைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டது.
எனினும் தற்போது வைத்திய அதிகாரி சி.யமுனானந்தா மீண்டும் கடமையைப் பொறுப்பேற்றுள்ளதால் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் பொது மக்கள் சிரமமின்றி சிகிச்சை பெறலாம்.
கிளினிக் மற்றும் நாளந்த சிகிச்சை முறைகளும் வழமையைப் போன்று நடைபெறும். (வ-14)

# நாய்க்கடிக்கு இலக்காவோர் அதை கொலை செய்ய வேண்டாம்

### வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிப்பு



தென்மராட்சி, ஜூலை 24
வீதிகளில் அலையும் கட்டாக்காலி நாய்கள் அல்லது வளர்ப்பு நாய்களால் கடிபடுவோர் அவற்றினை அடித்துக் கொல்ல வேண்டாம் எனவும் நாயைத் தொடர்ந்து 15 தினங்கள் கண்காணிக்குமாறும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
கட்டாக்காலி நாய்களால் கடிபடுவோர் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னர் அவ்வாறு அடித்துக் கொலை செய்கின்றனர்.
இவ்வாறான செயற்பாட்டால் நாய்க்கு விசர்த் தன்மை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடியாத நிலையில் விசர் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படுகிறது.
அந்தத் தடுப்பூசி மருந்து மூன்று தடவைகள் ஏற்றப்படல் வேண்டும். ஆனால் சிலர் அதனைக் கடைப்பிடிப்பதில்லை. இரண்டு தடவைகளுடன் நிறுத்தி விடுகின்றனர். இதனால் உயிர் ஆபத்து ஏற்படக்கூடிய நிலையை உருவாக்கி விடும். நாய் கடித்தால் அதனைத் தொடர்ந்து 15 தினங்கள் கண்காணிப்பது அவசியம். கடித்த நாய் குறித்த 15 தினங்களுக்குள் இறந்தால் கட்டாயம் மூன்று தடவைகள் தடுப்பூசி மருந்து ஏற்ற வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## துப்பாக்கி வெடித்து விவசாயி சாவு

அம்பாறை,ஜூலை 24
திருக்கோவில், உடும்பங்குளம் வயல் பிரதேசத்தில் வயல் காவலுக்குச் சென்ற விவசாயி ஒருவரின் துப்பாக்கி வெடித்ததில் அவர் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார் என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவில், தங்கவேலாயுதபுரத்தைச் சேர்ந்த வைரமுத்து வசந்தராஜப்பிள்ளை என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மறைத்து வைக்கப்பட்டிருந்த சட்டவிரோதமான உள்ளூர் தயாரிப்பான கட்டுத்துவக்கை எடுக்கும்போது அது தவறுதலாக வெடித்ததால் அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ச)

## யானைகளைத் தடுக்க எல்லையில் மின்வேலி



மட்டக்களப்பு,ஜூலை 24
இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வாங்காமம்,குடிவில் ஆகிய எல்லைக் கிராமங்களில் காட்டு யானைகளின் ஊடுருவலைக் கட்டுப்படுத்த மின்வேலி அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி மக்கள் காட்டு யானைகளின் தொல்லை காரணமாக இரவு வேளைகளில் பாதுகாப்பான இடங்களைத் தேடிச்செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா மின்வேலி அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். (ச)

## மோட்டார் சைக்கிள்களின் பின் ஆசனத்தில் பயணிக்கும் பெண்களுக்கு புதிய நடைமுறை

மட்டக்களப்பு,ஜூலை 24
மட்டக்களப்பு மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள்களின் பின் ஆசனத்தில் இருந்து செல்லும் பெண்கள் இரண்டு பக்கங்களிலும் கால்களை வைத்து அமர்ந்து செல்ல வேண்டும் என்னும் போக்குவரத்து சட்டம் தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள்களில் பின் ஆசனங்களில் இருந்து செல்லும் பெண்கள் ஒரு பக்கமாக அமர்ந்தே இதுவரை காலமும் பயணித்து வருகின்றனர்.

தற்போது மோட்டார் சைக்கிளில் பின் ஆசனத்தில் இருந்து செல்லும் பெண்கள் இரண்டு பக்கங்களிலும் கால்களை வைத்து அமர்ந்து செல்ல வேண்டும்.



இது போக்குவரத்து சட்ட ஒழுங்காகும். இந்த ஒழுங்கை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். (ச)



திருகோணமலை அல் ஹிக்மா பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் சந்தை ஞாயிற்றுக்கிழமை புதியசோனகத் தெருவில் நடைபெற்றபோது பெற்றோரும், மாணவர்களும் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். (ச-40)

# வடக்கு, கிழக்கை ஆளுகின்ற உரிமை தமிழருக்கே உண்டு

### மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

திருகோணமலை,ஜூலை 24
வட கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வீக நிலம் என்ற வகையில் மாகாண சபை உள்ளிட்ட அனைத்தையும் ஆட்சி செய்வதற்குரிய உரிமை தமிழர்களுக்கே உண்டு.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தை தமிழர்கள் ஒருபோதும் ஆட்சி செய்ய முடியாது என்று ஆளும் கட்சியின் தமிழ் அரசியல்வாதி ஒருவர் கூறியுள்ளமை வேதனைப்பட வேண்டிய விடயமாகும்.

இன்று முஸ்லிம் சமூகம் தங்களது அரசியல் வேறுபாடுகளைக் கடந்து தங்களது இனத்துக்காகவும் மதத்துக்காகவும் செயலாற்றிக் கொண்டிருக்கும்போது, தமிழ் அரசியல்வாதிகள் மட்டும் தமிழர்களின் பூர்வீக நிலங்களை இன்னுமொரு சமூகம்தான் ஆட்சிசெய்யும் என்று கூறுவது வேடிக்கையாகவுள்ளது.



வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து இடங்களும் தமிழர்களின் வரலாற்று பூர்வீக நிலங்கள். அதனை காப்பாற்றிக் கொள்வதற்காகவே இன்றுவரை தமிழர்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுத வழியிலும் அகிம்சை வழியிலும் போராடிய தமிழினம் இன்று இராஜதந்திர ரீதியான போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

உலகம் தமிழர்களின் போராட்டத்தை அங்கீகரித்துள்ளது. உலக நாடுகள் தமிழர்களின் பூர்வீக தாயக நிலம் வடக்கு, கிழக்கு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளன.-என்றார். (ச)

## பட்டதாரி பயிலுநருக்கு 5 இல் பயிற்சி ஆரம்பம்

மட்டக்களப்பு,ஜூலை 24
மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களில் இதுவரை திறன் அபிவிருத்திப் பயிற்சிகளை நிறைவு செய்யாதவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 5ஆம்திகதி முதல் 11ஆம் திகதி வரை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது என்று மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்செழியன் தெரிவித்தார்.



இந்த பயிற்சிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின், அறிவுறுத்தல்களுக்கு அமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறுகின்றன. (ச)

## பேய்க்கு கழிப்புச் சடங்கு செய்தவர் சடலமாக மீட்பு

### ஏறாவூரில் பரபரப்பு

ஏறாவூர்,ஜூலை 24
இரவு முழுக்க வீட்டில் காவல் செய்து பேய்க்கு கழிப்புச் சடங்கு செய்தவர் திங்கட்கிழமை வீட்டிற்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவன்கேணியில் இடம்பெற்றுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் களுவன்கேணி சிங்காரத்தோப்பு வீதியைச் சேர்ந்த இளையதம்பி விமலநாதன் (வயது - 35) என்று உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

இவர் ஞாயிறு இரவு முதல் திங்கட்கிழமை காலை வரை தாங்கள் குடியிருக்கும் வீட்டையும் வளவையும் பேய்களின் தொல்லைகளிலிருந்து காப்பதற்காக பேய்களுக்கு கழிப்புச் சடங்கு செய்து காவல் செய்யும் கிரியைகளில் ஈடுபட்டிருந்தார் என்று அவரது மனைவி பிரியதர்சினி (வயது - 29) தெரிவித்துள்ளார்.

**வைத்தியர்கள் இவரை மனநல சிகிச்சை பெறுமாறு ஆலோசனை வழங்கியிருந்தனர் என்று மனைவி தனது சாட்சியத்தில் கூறியுள்ளார்.**

சில நாள்களுக்கு முன்னர் தனது கணவர் உண்ணாமலும் உறங்காமலும் அவஸ்தைப்பட்டார்.

அதனால் வைத்தியர்கள் இவரை மனநல சிகிச்சை பெறுமாறு ஆலோசனை வழங்கியிருந்தனர் என்று மனைவி தனது சாட்சியத்தில் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணையை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் மீது அரசின் நடவடிக்கை இல்லை




மட்டக்களப்பு,ஜூலை 24
நாட்டில் சுமார் 17 பள்ளிவாசல்கள் மத வெறி பிடித்த காடையர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன. ஆனால் இது குறித்து அரசு எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலர் எம்.ரி.ஹசனலி தெரிவித்தார்.

நாட்டில் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் அவற்றை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதனால் முஸ்லிம்கள் தமது மார்க்கக் கடமைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.1,600 கோடி மீதம் மின்சார சபைக்கு



கொழும்பு,ஜூலை 24
கடந்த ஒரு மாத கால இடைவெளியில் மத்திய மலைப்பிரதேசத்தில் எதிர்பார்க்கப்பட்ட மழை வீழ்ச்சி கிடைத்துள்ளதால் நீர்மின் உற்பத்தி உச்சநிலையை எட்டியுள்ளது. அதன் காரணமாக இலங்கை மின்சார சபைக்கு 1,600 கோடி ரூபா வரை பணம் மீதமாகியிருக்கிறது.

கடந்த மாதத்தில் நீர்மின் உற்பத்தி 70 வீதம் வரையில் உயர்வடைந்ததன் காரணமாக எரிபொருள்களுக்காகச் செலவிடப்பட வேண்டியிருந்த 1,600 கோடி ரூபா நிதியை மீதப்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்தார்.

மின்சாரசபையின் அதிகரித்த கடன் சுமையைக் குறைத்துக் கொள்வதற்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்த முடிந்துள்ளது என்று அவர் கூறினார்.

**இலங்கையில் 17 நீர் மின் உற்பத்தி நிலையங்கள் இன்று செயற் பட்டு வருகின்றன. அவற்றின் மூலமாக 1,355 மெகா வோல்ட் மின்சாரம் தேசிய மின்சக்தித் தொகுதியுடன் இணைக் கப்படுகிறது.**

இலங்கையில் 17 நீர் மின் உற்பத்தி நிலையங்கள் இன்று செயற்பட்டு வருகின்றன.

அவற்றின் மூலமாக 1,355 மெகா வோல்ட் மின்சாரம் தேசிய மின்சக்தித் தொகுதியுடன் இணைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# வேட்பு மனு குழுவிலிருந்து சஜித், கரு அதிரடி நீக்கம்

கொழும்பு,ஜூலை 24
வடமேல், மத்திய மற்றும் வடக்கு மாகாண சபைகளுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பு மனுக்கள் குழுவில் இருந்து சஜித் பிரேமதாஸ, கருஜயசூரிய ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.





இந்த நடவடிக்கையை கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க எடுத்துள்ளார்.

இதற்கு முன்னர் இடம் பெற்றிருந்த அனைத்துத் தேர்தல்களிலும் வேட்பு மனு குழு உறுப்பினர்களாக அவர்கள் செயற்பட்டுள்ளனர்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட தீர்மானமொன்றுக்கு அமையவே அவர்களை இந்த முறை வேட்பு மனுக்கள் குழுவில் இருந்து நீக்கியுள்ளார்.

அதி உச்ச விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவான இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இவ்வாறு எந்தவொரு காரணமும் தெரிவிக்கப்படாது குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அந்த இடத்துக்கு தேசியப் பட்டியல் மூலமாக நியமனம் பெற்றுள்ள மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி கண்ட வேட்பாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது கண்டிக்கத்தக்கதாகும் என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (ச-22)



சிங்கப்பூர் மருத்துவமனையில் சிகிச்சையை பெற்றுக்கொண்டு நாடு திரும்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுகொண்டார்.

# பிக்குகளுக்கு தனி நீதிமன்றம் விரைவில்

கொழும்பு,ஜூலை 24
பிக்குகளுக்கு தனி நீதிமன்றம் ஒன்று மிக விரைவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற தேர்தல் விழிப்புணர்வுக் கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பௌத்த விகாரைகள் மற்றும் பிக்குகள் தொடர்பான முறைப்பாடுகள், பிணக்குகள் போன்றவற்றைக் கையாள பொதுநீதிமன்றங்களுக்கு செல்லாமல் இருப்பதற்கு இந்த நீதிமன்றங்கள் உதவும் என்று அவர் தெரிவித்தார்.

**பௌத்த விகாரைகள், பிக்குகள் தொடர்பான முறைப்பாடுகள், பிணக்குகள் போன்றவற்றை இந்த நீதிமன்றம் கையாளும்.**

பௌத்த மதகுருக்கள் கௌரவமிழக்காத வகையில் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு இத்தகைய நீதிமன்றங்கள் வழி வகுக்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# பல்கலைக்கு புதிதாக 60 விடுதிகள்

கொழும்பு,ஜூலை 24
பல்கலைக்கழக மாணவர்களின் தங்குமிட வசதிகளில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க புதிதாக 60 விடுதிகளை நிர்மாணிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக உயர்கல்வி அமைச்சு எஸ்.பி. திஸாநாயக்காவால் முன் வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தங்குமிட வசதிகள் தொடர்பாகப் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே தங்கு விடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

17 பல்கலைக்கழகங்களை உள்ளடக்கும் விதமாக



இந்த விடுதிகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தங்கு விடுதிகளை நிர்மாணிப்பதற்கு செலவிடப்படவுள்ள தொகை 22 கோடி ரூபாவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22)

# பிறப்புகள் அதிகரிப்பு இறப்புகள் குறைவு

## பதிவாளர் திணைக்களம் தகவல்



கொழும்பு,ஜூலை 24
கடந்த ஆண்டில் பிறப்பு மற்றும் திருமணப் பதிவுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

உயிரிழப்புக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்று பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் திணைக்களத்தின் 2012ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரங்களுக்கு அமைய, பதிவாகியுள்ள பிறப்புக்களின் எண்ணிக்கை 2,89,316 ஆகும்.

இதேவேளை 2011 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள பிறப்புக்களின் மொத்த எண்ணிக்கை 270,451 ஆகும்.

அதற்கமைய 2011 ஆம் ஆண்டை விடவும் 2012 ஆண்டில் பிறப்புக்களின் பதிவுகள் 18,865 ஆல் அதிகரித்துள்ளன.

2012ஆம் ஆண்டில் 254,920 விவாகப் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 182,600 ஆக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டில் 94,211 உயிரிழப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 99,631 ஆகும்.

அதற்கமைய 2011 ஆம் ஆண்டை விட 2012 ஆம் ஆண்டில் உயிரிழப்புக்கள் 5,420 ஆல் குறைவடைந்துள்ளன. (ச-22)

# 64 வீதத்தினருக்கு நீரிழிவு ஏற்படும்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 24
2050 ஆம் ஆண்டாகும் போது இலங்கையின் சனத்தொகையில் 64 வீதமானோர் நீரிழிவு நோயாளிகளாக இருக்கக் கூடும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.



நீரிழிவு நோய் ஏற்படாது தவிர்த்துக் கொள்ள அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது என்று அந்த அமைப்புச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த நாட்டின் கிராமப் புறங்கள் சார்ந்த சனத் தொகையில் 10 வீதமானோருக்கும் நகரப் புற சனத்தொகையில் 15 வீதமானோருக்கும் நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளது.

10 வீதம் முதல் 15 வீதம் வரை பாடசாலைப் பிள்ளைகள் நீரிழிவு நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

தவறான உணவுப் பழக்கங்கள், உடற்பயிற்சிகளில் ஈடுபடாதிருப்பது, உளத் தாக்கங்கள் போன்ற காரணங்களால் நீரிழிவு நோய் ஏற்படக் கூடும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (ச-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## படகு அகதிகளை ஒரே தராசில் வைத்து நோக்கலாமா அரசு?

ஆஸ்திரேலியாவில் விரைவில் நடைபெற உள்ள தேர்தலில், அங்கு அகதிகளாகச் சென்று தஞ்சம் கோருபவர்கள் தொடர்பான விவகாரம் பூதாகாரமாக மாறவுள்ளது.
தேர்தலை, தமது அரசின் தஞ்சக் கோரிக்கை தொடர்பான புதிய குடிவரவுக் கொள்கை கடுமையாக்கப்பட்டுள்ளதை பிரதமர் கெவின் ஏத் நியாயப்படுத்தி உள்ளார். அது தேர்தலை முன்வைத்த நிலைப்பாடு என்று கருதலாம்.
மக்களின் மரணங்களில் வியாபாரம் நடத்துபவர்களே அரசின் இலக்கு என்று அவர் வியாக்கியானமும் கூறியுள்ளார். எனினும் அவரது அதிரடி நடவடிக்கையை மனித உரிமை அமைப்புகள் பலவும் வன்மையாகக் கண்டித்துள்ளன.
புதிய உடன்படிக்கையின் பிரகாரம், படகுகள் மூலம் அகதி அந்தஸ்துக் கோரும் பொருட்டு ஆஸ்திரேலியாவுக்குக் கூட்டிச் செல்லப்படுவோர் - சென்றடைவோர் - பப்புவா நியூகினியாவுக்குப் பரிசீலனைக்கு அனுப்பப்படுவர். அகதிகளாக அங்கீகரிக்கப்படுவோர் அங்கேயே குடியமர்த்தப்படுவர். ஏனையோர் அவரவர் நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுவர்.
பப்புவா நியூகினியாவில் குடியமர்த்தப்படுவதற்குக் கைமாறாக பெருமளவு முதலீடுகள் வழங்க ஏற்பாடாகி உள்ளது.
இதேவேளை, ஆறு நாள்களுக்கு முன்னர் நவுறுவில் இடம்பெற்ற கலவரம், படகு அகதிகளின் பிரச்சினையை மீண்டும் அனைத்துலகத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

இந்தக் கலவரம், உலகிலேயே சிறிய நாடான நவுறுவில் முன்னெப்போதும் இடம்பெற்றிராதது. நவுறு மக்களுக்கு இது புதிய அனுபவம். ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாமில் பெரும் பகுதி எரிக்கப்பட்டு விட்டது. இராணுவம் இல்லாத நாடு அது. ஆட்சியாளர்கள் சிறிய பொலிஸ் படையினதும், பொதுமக்களினதும் உதவியுடன் அகதிகளுடன் போராடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது.

தமது நடவடிக்கை ஆஸ்திரேலியா மீது சர்வதேச அழுத்தத்துக்கு வழி ஏற்படுத்தலாம் என்று அகதிகள் கருதியிருக்கக் கூடும். ஆனால், ஆஸ்திரேலியாவின் குடிவரவுக் கொள்கை மேலும் கடினமடையவே இது வழிசெய்யும் என்று எதிர்பார்க்கலாம். படகு மக்களுக்கு ஆஸ்திரேலியா புகலிடம் வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ள குறிப்பிட்ட தொகை ஆஸி மக்களின் அனுதாபத்தையும் நவுறு கலவரம் இழக்க வைத்துவிடலாம் என்று கருதப்படுகிறது.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 15 ஆயிரம் அகதிகள் சட்டவிரோதமாகப் படகுகளில் ஆஸ்திரேலியா சென்றுள்ளனர். இலங்கை, ஆப்கானிஸ்தான், வியட்நாம், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தோர் பெருந்தொகையான பணத்தை முகவர்களிடம் கொடுத்து சிறிய படகுகளில் உயிரைப் பணயம் வைத்து ஆஸ்திரேலியா செல்கிறார்கள். சில வேளைகளில் படகு கவிழ்ந்துபோவதால் இவர்களில் சிலர் கடலுக்குப் பலியாகிறார்கள். இந்த ஆபத்துகளை எல்லாம் கடந்து ஆஸ்திரேலிய கரையை அடைந்தாலும், ஆஸ்திரேலிய அதிகாரிகளால் நவறு தீவுக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இவர்கள் உண்மையான அகதிகளா அல்லது பொருளாதார அகதிகளா என்ற விசாரணை நவுறு தீவிலேயே நடைபெறுகிறது.

கடந்த வெள்ளியன்று கலவரம் ஏற்பட்ட வேளை, நவுறு தீவு அகதி முகாமில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் தங்கியிருந்தனர். தம் மீதான விசாரணைகளை அதிகாரிகள் வேண்டுமென்றே தாமதப்படுத்துகின்றனர் என்றும், முகாமில் தமக்கு வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை என்றும் சமீப நாட்களாக அகதிகள் முறையிட்டு வந்தனர். அகதிகளுக்கு இதுதான் முதலில் வெறுப்பேற்றியிருக்கலாம்.

எதிர்காலக் கனவுகளுடன் ஆஸ்திரேலியா செல்லும் மக்கள் பெரும்பாலும் முகவர்களால் ஆசை வார்த்தை கூறி ஏமாற்றப்படுகிறார்கள். இந்த மக்களுக்கு எஞ்சுவது பண இழப்பும், துயருமும்தான்.

வெளிநாடுகளில் தஞ்சம் கோரும் இலங்கைத் தமிழ் மக்களின் நிலை, அடுத்த பக்கத்தால் நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேறுவதற்கு இயலாத நிலையில், தாம் முன்னர் செய்த தொழில்களை இப்போது செய்யமுடியாத நிலையில், வாழ்வாதரங்களைப் பெறமுடியாத நிலையில் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்ல முயல்கிறார்கள்.

அதனைத் தடுப்பதற்குத் தேவையான வகையில், வடக்கு கிழக்கில் மக்களின் அச்சமற்ற வாழ்வுக்கும் உகந்த வசதிகளுக்கும் ஏற்பாடு செய்வதில் அரசு முழு அளவில் ஆழ்ந்த மனமொன்றில் செயற்படக் கூடாதா?

# வடக்கு மாகாண சபை தேர்தலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்

ஈழப்பிரியன்

அறுபது வருட கால போராட்ட வரலாற்றை அடைய தமிழினத்திற்கு இன்று ஜனநாயக ரீதியில் இருக்கின்ற தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது. ஏனெனில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்பது வெறுமனே ஒரு கட்சியல்ல. அது இன விடுதலைக்கு உழைத்த ஆயிரமாயிரம் தேசிய உணர்வாளர்களுடைய மூச்சில் இருந்து பிறந்த தேசியக்குழந்தை என்பது யாவரும் அறிந்த உண்மை. தற்போதைய காலச்சூழலில் அதிக மானோரின் வாய்களில் உச்சரிக்கப்படும் சொற்றொடர் வடமாகாண சபைத்தேர்தலாகும். இலங்கை அரசமைப்பைப் பொறுத்தவரை மாகாண சபை என்பது அதிகாரம் இல்லாத ஒன்று. பச்சையாகசொல்வதானால் அது உள்ளுடன் இல்லாத மோதகம். அதிகாரம் இல்லாத மாகாண சபைத் தேர்தலுக்கான எதிர்பார்ப்பு அதிகரிப்பதற்கு மூன்று முக்கிய காரணங்களைக் குறிப்பிடலாம்.

1.இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்ட வடகிழக்கானது இலங்கை நீதிமன்றத் தீர்ப்பு மூலம் பிரிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது வடமாகாணத்திற்கான தேர்தல் இதுவாகும்.

2.முப்பது வருடமாக நடைபெற்று வந்த விடுதலைப் போராட்டமானது முள்ளிவாய்க்காலுடன் மௌனிக்கப்பட்ட சூழலில் தமிழர்கள் எத்தகைய நிலைப்பாட்டில் இன்னமும் இருக்கின்றார்கள் என்பதைச் சர்வதேசம் பரீட்சித்துப்பார்க்ககூடிய களம், இத்தேர்தலாகும்.

3.வடக்கு மாகாணசபையை இயன்றளவு வன்முறையின்றி நடத்தி தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்கி விட்டோம் என உலகெங்கிலும் பிரசாரம் செய்வதற்கான வாய்ப்பினை இலங்கை அரசு பெற்றுக்கொள்ள நினைக்கும் தேர்தலாகும். இதுபோன்ற காரணங்களால் வடமாகாண சபை தேர்தல் தொடர்பான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக ஆராய முன்னர், வடக்கும், கிழக்கும் இணைந்து நடத்தப்பட்ட வடகிழக்கு மாகாணசபைத் தேர்தலையும், அத்தேர்தல் நடைபெறுவதற்கு தோற்றுவாயாக இருந்த இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும், தமிழீழ விடுதலைப்புலிகள் அத்தேர்தலை புறக்கணித்தமைக்கான காரணத்தையும் சற்று அலச, இருபத்தாறு வருடங்கள் பின்னோக்கி செல்வது அவசியமாகும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் இலங்கைத்தீவின் மீது இந்தியா ஆதிக்கம் செலுத்தியது அல்லது செலுத்த முற்பட்டது. இச்செயலானது இந்தியாவின் புவிசார் அரசியல், பிராந்திய தேவைகட்கு ஏற்பாடான விடயமாகும். 1983 இற்குப் பின்னர் இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையில் இந்தியா தலையிட்டமை தமிழர்களுக்கு ஒரு நாட்டைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற ஆவலில் அல்ல; அப்படி ஒரு ஆர்வம் இந்தியாவுக்கு இருந்ததுமில்லை இருக்கப்போவதுமில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கான காரணத்தை நோக்குவோமாயின் 1987 மே மாதம் 26 ஆம் திகதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசு ஊரடங்கைப் பிரகடனப்படுத்தி ஒப்பரேசன் லிபரேசன் என்ற இராணுவ நடவடிக்கையை வடமராட்சி மீது ஆரம்பித்தது. இந்த நடவடிக்கை தொடங்கி ஒன்பது நாள்களில் இந்திய அரசு ஐந்து இந்திய விமானங்களின் மூலம் 24 தொன் எடை கொண்ட நிவாரணப் பொருள்களை இராணுவ முற்றுகைக்குள்ளிருந்த வடபகுதி மக்களுக்குப் போட்டது இதற்கு அவர்களால் சூட்டப்பட்ட பெயர் 'ஒப்பிரேசன் பூமாலை' என்பதாகும்.

'ஒப்பிரேசன் லிபிரேசன்' மூலம் உற்சாகமடைந்திருந்த இலங்கை அரசு ஒப்பிரேசன் பூமாலையைக் கண்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தது. இதனைச் சாதகமாகக் கொண்ட இந்திய அரச இராஜதந்திரிகள் தமது பிடிக்குள் இலங்கையைக் கொண்டு வந்தார்கள். ஜே.வி.பியின் கிளர்ச்சியாலும், தமிழ்ப் போராளிகளது போராட்டத்தாலும் குழம்பிப்போயிருந்த ஜே.ஆரின் அரசு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒப்பந்தத்திற்கு இணங்கியே ஒப்பந்தத்தில் ரஜீவுடன் கையொப்பமிட்டது.

ஒப்பந்தம் தமிழ் மக்களுடன் நெருக்கமான தொடர்புடையதாக இருந்த போதிலும், தமிழ்ப் பிரதிநிதிகள் எவரும் இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்படவேண்டும் என்பதைத்தவிர வேறு எவையும் உருப்படியானவை அல்ல.

1987 இல் இலங்கை நாடாளுமன்றம் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தையும் அத்துடன் அமைந்த மாகாண சபைகள் சட்டத்தையும் நிறை வேற்றியது. இந்தச் சட்டங்களின் ஆக்கம் தமிழ்மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதென்று இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக இலங்கை அரசு பிரகடனப்படுத்தியது தேர்தலாகும். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறு இணைக்கப்பட்ட வடகிழக்கிற்கான தேர்தலை நடத்த இருப்பதாக அறிவித்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் இத்தேர்தலை முழுமையாகப் புறக்கணித்தார்கள். அவர்கள் இத்தேர்தலைப் புறக்கணித்தமைக்கு வலுவான காரணமும் இருந்தது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தமிழர் நலனை அடிப்படையாகக் கொண்டோ அல்லது அவர்களது கருத்துக்கள் கேட்கப்பட்டோ கொண்டு வரப்படவுமில்லை, பதின்மூன்றாவது திருத்தத்தில் சொல்லப்படுகின்ற மாகாண ஆட்சி தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வாகப் போவதுமில்லை என்பதே அதற்கான காரணம் ஆகும். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் இத்தேர்தலை பகிஷ்கரிக்க, ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற ஈழமக்கள் புரட்சிகர முன்னணி கட்சி தனது செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கில் தேர்தல் களத்தில் குதித்து வரதராஜப்பெருமாளை முதலமைச்சராக்கியது. தமிழர்களுடைய நாடித்துடிப்பையோ, அதன் தளத்தையோ கண்டுகொள்ள முடியாமல், இந்தியாவின் கைப்பொம்மையாக இயங்கிய மாகாண சபை சிறிது காலத்திலேயே சிதறுண்டு போனது.

இவ்வாறான வரலாற்றைக்கொண்ட மாகாணசபைத்தேர்தல் இன்று இரண்டு மாகாணங்களும் பிரிக்கப்பட்டு கிழக்குக்கான தேர்தல் இரண்டாவது முறையாகவும் நடத்தப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் வெற்றிபெறும் என்பதை ஜனாதிபதி நாசுக்காக கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரைச் சந்தித்த போது கூறியுள்ளார். இது ஒருபுறம் இருக்க மறுபுறம் கூட்டமைப்பு வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டால் வடகிழக்கு மாகாணங்கள் பிரிந்ததை ஏற்றுக்கொள்வதுடன் ஒற்றையாட்சி முறைமையின்கீழ் அதிகாரமில்லா மாகாணசபை முறைமையை அங்கீகரிப்பது போன்ற இரு விடயங்கள் பாதகமாக அமையும் எனப்படுகிறது. இருந்தபோதிலும் வடமாகாண சபையை கிழக்குப்போல் ஆளுங் கட்சிக்கு தாரைவார்த்து விட்டால் முள்ளிவாய்க்காலில் நாம் கொடுத்த பல்லாயிரம் உயிர்களுக்கான நீதி என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டு விடும். இலங்கை அரசு தேர்தலில் வெற்றி பெற்று விட்டால் தமிழ் மக்கள் தங்களுடனே இருக்கின்றார்கள் என்ற மாயத்தோற்றத்தை சர்வதேச நாடுகளிடம் ஏற்படுத்த அது முனையும். என்பதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாகை சூடவேண்டும் என்பது கணிசமான தமிழ்த் தேசிய உணர்வாளர்களுடைய அவாவாகவுள்ளது.

தமிழ்த் தேசிய எண்ணப்பாடுகள் சிதைந்து விடாது தடுப்பதற்கு கூட்டமைப்பு எடுக்கின்ற முடிவுகளுக்கு கணிசமான மக்கள் ஆதரவு தெரிவித்து வருவதை கூட்டமைப்பின் தலைமை கவனத்தில் எடுத்து எதிர்காலத்தில் எடுக்கப்படும் முடிவுகளை மக்கள் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் எடுப்பது அதன் ஜனநாயக பண்புத்தன்மையையும் கட்சி மீதான நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்தும்.

வடமாகாண சபைக்கான உறுப்பினர்கள் தெரிவில் சகல கட்சிகளும் மும்முரம் காட்டிவரும் நிலையில் கூட்டமைப்பும் இத்தேர்தலில் தமிழ்த்தேசியம் தொடர்பான உறுதியான கொள்கையையும் அரசியல் ஞானத்தையும் கணிசமான இளம் வேட்பாளர்களை சமய, சமூக வேறுபாடின்றி இத்தேர்தலில் களமிறக்க வேண்டும். இதன் மூலம் கிடைக்கக்கூடிய ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். கூட்டமைப்பின் வடமாகாண உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதேசம் சார் அபிவிருத்தி, மக்களுடைய துன்ப, துயரங்கள் என்பவற்றில் பங்கு கொள்ளவேண்டும். அத்தகைய நிலை யிலேயே அரசியல் மீதான நம்பிக்கை இன்னும் அதிகமாகும்.

இன்று பத்திரிகைகளில் அதிகம் வருகின்ற பழமொழி வேட்டி கட்ட ஆசைப்பட்ட தமிழர் இப்போது கோவணத்திற்குப்போராட நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதாகும். தமிழர்கள் வேட்டி கட்டத் தகுதியானவர்களே. விடுதலைப்புலிகள் அமைப்பு படைவலுச்சமநிலையை தம்பக்கம் கொண்டு வந்து நிழல் அரசை நிறுவி வடக்குக் கிழக்கை நிர்வகித்து வந்தார்கள். அப்போது அதற்கான சூழலும் எமக்குச் சாதகமாக இருந்தது. இன்று விடுதலைப்புலிகளது மௌனத்துடன் வேட்டிக்கனவு பின்தள்ளப்பட்டுள்ளதே தவிர, அச்சிந்தனை நீங்கிவிடவில்லை. எனவே கூட்டமைப்பு தற்போதுள்ள சர்வதேச,உள்நாட்டு அரசியல் நகர்வுகளை உன்னிப்பாக அவதானித்து வடமாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெறுவதுடன் கிடைக்கின்ற கோவணத்திலிருந்து (மாகாண ஆட்சியிலிருந்து) வேட்டியைப் பெறமுயற்சிக்க வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரத்தில் புதிய பாடப்பிரிவு- தொழில்நுட்பவியல் துறை

ப.இராஜேஸ்வரன்

உலக செயலொழுங்கின் வேகமான மாற்றங்களுக்கு ஏற்பவும், சமூகத் தேவைகளுக்கு ஏற்பவும் திறன் தகைமையுள்ள மாணவர் சமூகத்தை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. வேலை உலகு, தொழில்நுட்ப உலகுக்கு மாணவர்களை அறிமுகப்படுத்த வேண்டிய முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. இத்தகைய பின்னணியில் பாடசாலை மட்டத்தில் உயர்தரப் பிரிவில் "தொழில்நுட்ப பாடத்துறை" என்னும் புதிய பிரிவு மாணவர்களின் தேர்ச்சி நிலை விருத்தியை மையப்படுத்திய வகையில் 2013 இல் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றது.

உயர்தரத்தில் ஏற்கெனவே சுற்றறிக்கை இல 2009/16 இன் அடிப்படையில் நான்கு பிரிவுகள் உள்ளன. இதற்கு மேலதிகமாக இல-25/2013 இல் ஐந்தாவது பாடத்துறையாக தொழில்நுட்பவியல் பாடத்துறை முதற்கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மஹிந்தோதய தொழில் நுட்ப ஆய்வு கூடங்களுடன் கூடிய 200 பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 12 இற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்காக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பாரம்பரியமான கல்வி முறைமைக்குள் இருந்து விடுபட்டு, சமகால எதிர்கால தேவைகளுக்கு பொருத்தமான கல்வி முறைமையை கட்டியெழுப்ப வேண்டிய சூழ்நிலையும், மனித வள உருவாக்கத்துக்கான கேள்வியும் வலுப்பெற்று வருகின்றன. க.பொ.த உயர்தர விஞ்ஞான கணிதப் பிரிவில் 22%, வர்த்தகப் பிரிவில் 27%, கலைப்பிரிவில் 51% என மாணவர்கள் கல்வியை தொடர்வதாக புள்ளி விவர அறிக்கைத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மாறிவரும் உலக ஒழுங்குக்கு ஏற்ப மாணவர் கல்விச் செயற்பாடு ஒழுங்கமைக்கப்படாமைக்கு மேற்படி தரவு எடுத்துக்காட்டாக அமைகின்றது. உயர்தரப் பிரிவில் கலைத்துறையில் மாணவர்கள் சித்தி பெற்றும், பட்டம் பெற்றும் வேலை வாய்ப்பு இன்றியும், வேலையுலகுக்கு பொருத்தப்பாடு அடைய முடியாதவர்களாக உள்ளனர். அதேவேளை ஊழிய சந்தையின் கேள்விக்கு ஏற்ற தேர்ச்சிகளைக் கொண்ட பட்டதாரிகள் இன்மையும், அதேவேளை உருவாக்கப்படாமையும் நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கு தடையாக உணரப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் தொழில்நுட்ப பாடத்துறையை அறிமுகம் செய்வதன் ஊடாக 2016 இல் ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞான கணிதப் பிரிவில் 40 சதவீத அதிகரிப்பையும், கலைப்பிரிவில் 25 சதவீத வீழ்ச்சியையும் ஏற்படுத்துவதற்கு எதிர்வு கூறப்பட்டுள்ளது.

### தொழில்நுட்பவியல் பாடவிதான உள்ளடக்கம்

★ தொழில்நுட்பவியல் பாடவிதானம் தனியொரு பாடவிதான அமைப்பைக் கொண்டமைந்தது.
★ துணைப் பாடங்களை கொண்டமைந்தது.
★ தொழில்நுட்பவியல் துறையை அடிப்படையாகக் கொண்டது.

**குறைந்தளவு தகைமை**

(1) கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் சித்தி

(2) யாதேனும் மூன்று பாடங்களில் திறமைச் சித்தி

ஆகியவற்றில்

**பாடத்துறை (அ)**

1. பொறியியல் தொழில்நுட்பம்
- குடிசார் இயந்திரம்
-மின்னியல் தொழில்நுட்பம்
-போக்குவரத்து
-நிர்மாணிப்பு
-சுற்றாடல் பிரச்சினை சார் துறைகள்

2. தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம்
- இரசாயனம்
-பௌதிகம்
-உயிரியல்
-கணிதம்

3. விதந்துரைக்கப்பட்ட 10 பாடங்களில் ஒரு பாடத்தை தெரிதல்
- பொருளியல்
-புவியியல்
-மனைப்பொருளியல்
-ஆங்கிலம்
-கணக்கீடு
-தொடர்பாடல் ஊடகக் கற்கை
-தகவல் தொழில்நுட்பம்
-சித்திரம்
-வணிகக் கல்வி
-விவசாய விஞ்ஞானம்

**பாடத்துறை (ஆ)**

1. உயிர்த்தொகுதி தொழில்நுட்பம்
- உணவு
-விவசாயம்
-பதப்படுத்தல்
-உயிர் மருத்துவம்

2. தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம்
- இரசாயனம்
-பௌதிகம்
-உயிரியல்
-கணிதம்

3. விதந்துரைக்கப்பட்ட 10 பாடங்களில் ஒரு பாடத்தை தெரிதல்
- பொருளியல்
-புவியியல்
-மனைப்பொருளியல்
-ஆங்கிலம்
-கணக்கீடு
-தொடர்பாடல் ஊடகக் கற்கை
-தகவல் தொழில்நுட்பம்
-சித்திரம்
-வணிகக் கல்வி
-விவசாய விஞ்ஞானம்

மேற்படி பாடவிதானம் இரு வழிமுறைகளில் பிரிக்கப்பட்டு மாணவர்களின் தேவை, விருப்பம், திறமைக்கு ஏற்ப பாடங்களைத் தெரிவு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை உயர்தரத்தில் விதந்துரைக்கப்பட்ட 10 பாடங்களில் புவியியல், தொடர்பாடல் ஊடகக் கற்கை பாடங்களைத் தெரிவு செய்வதற்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் அந்தப் பாடங்களில் தோற்றியிருத்தல் அவசியமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பப் பாடத்துறை அறிமுகம் ஊடாக நாளாந்த வாழ்வுக்கு பயன்படுகின்ற தொழில்நுட்பத் திறன் தகவு நிலைகளை மாணவர்களுக்கு வழங்குதல், பிரச்சினைகளுக்கு தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை மேற்கொள்வதற்கான ஆற்றல்களை உருவாக்குதல், ஊழியர் சந்தை நிலவரங்களுக்கு ஏற்பவும், தேசிய தொழில் தகைமை நியமங்களுக்கு ஏற்ற மாணவர்களை உருவாக்குதலும், அதற்கு ஏற்ப மாணவர்களை ஈடுபடத் தூண்டுதலும் முதன்மை இலக்குகளாக அமைகின்றன.

### உயர்கல்வி மாற்றங்கள்

தொழில்நுட்பப் பாடங்களை ஏற்கனவே தொடர்கின்ற மாணவர்கள் விண்ணப்பிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பப் பாடநெறிகள் வழங்கப்படுகின்றன. எதிர்காலத்தில் தொழில்நுட்பத்துறை தனியொரு கலைத்திட்டமாக வகைப்படுத்தப்பட்டுள்ளமையால் அதற்கு ஏற்ப பல்கலைக்கழக கல்வியில் புதிய பாடநெறிகளை விரிவுபடுத்த வேண்டிய தேவை 2015 இல் உள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டுகின்றது.

ஏற்கனவே தேசிய தொழில்சார் தகைமையை (NVQ) அடிப்படையாகக் கொண்டு டிப்ளோமா, உயர் டிப்ளோமா பாடநெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. டிப்ளோமா பட்டதாரிகளுக்கு பட்டம் வழங்குவதற்கு தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இளைஞர் அலுவல்கள் திறன் விருத்தி அமைச்சு ஊடாகவும் பட்டங்கள் தரப்படுத்தப்படவுள்ளன.


மேலும் பாடத்துறையில் சித்திபெறும் மாணவர்கள் இளைஞர் அலுவல்கள் திறன் விருத்தி அமைச்சினால் உருவாக்கப்படுகின்ற தொழில்நுட்பப் பல்கலைக்கழக கல்லூரிகளில் அனுமதிகளைப் பெற்று பட்டங்களைப் பெற முடியும். இரத்மலானை, இலங்கை, ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, உடுகொடவத்தை மோட்டார் வாகன தொழில் நுட்ப நிலையம், கட்டுநாயக்கா பொறியியல் தொழில்நுட்ப நிறுவகம் கல்வியையும், பயிற்சியையும் பெற வாய்ப்பு அளிக்கப்படும்.

### மதிப்பீடும் கணிப்பீடும்

★ இரு வருட கற்கை பூர்த்தியின் இறுதியில் மூன்று பாடங்களுக்கான அறிவுசார் அடைவு மட்ட பரீட்சை நடத்தப்படும்.
★ பொறியியல் மற்றும் உயிர்த்தொகுதி தொழில்நுட்ப பாடங்களுக்கு அறிவுசார் அடைவு மட்ட பரீட்சைகளின் புள்ளிகள் நூற்றுக்கு 75% எனவும், மிகுதி 25% புள்ளிகள் பயிற்சி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களை கணிப்பிடுவதாக அமையும்.

### முடிவுரை

இலங்கையை அறிவுக் கேந்திரமாக்கும் முயற்சியின் ஓர் வெளிப்பாடாகவே தொழில்நுட்பவியல் பாடத்துறை உணர்த்தப்படுகின்றது. வருடாந்தம் பாடசாலைகளில் இருந்து மூன்றரை லட்சம் மாணவர் விலகுகின்ற அதே வேளை பல்கலைக்கழகங்களுக்கு இருபத்து மூவாயிரம் பேர் மட்டுமே செல்கின்றனர். அவர்களிலும் நூற்றுக்கு முப்பத்தைந்து வீதமானவர்கள் கலைத்துறையைச் சார்ந்தவர்களாக உள்ளனர். கலைத்துறைப் பட்டதாரிகளுக்கு தொழில் உலகில் வேலைவாய்ப்பு வழங்கப்பட முடியாத சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. ஆனால் தொழில்துறைக்கு பொருத்தமான மனித வள உற்பத்தியை வேலை உலகுக்கு ஏற்ப உற்பத்தி செய்ய வேண்டிய தேவை உண்டு. அதன் ஓர் பரிமாணமாகவே தொழில்நுட்பத் துறை பாடவிதான அறிமுகம் ஆகும்.



# மனம் சொல்வதை கேளுங்கள்

இந்த உலகில் வெற்றியை நோக்கி வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் சோதனைகள் ஏற்படும். அப்படிச் சோதனை செய்வதில் முக்கியமான ஒன்றுதான், மனம். ஏனெனில் அந்த மனம் எப்போதுமே முதலில் எதிராகத்தான் நினைக்கும். அவ்வாறு நினைப்பதால், யாராலும் வாழ்வில் நிச்சயம் முன்னேற முடியாது.

எப்போதும் மனதில் நேர்மறையாக யோசித்தால், எந்த ஒரு செயலையும் துணிந்து செய்யலாம். உதாரணமாக, நமது மனம் எதிர்மறையாக நினைக்கும் போது, ஏதாவது ஒரு தோல்வி நடந்தாலும் அதை அவ்வளவு விரைவில் மறக்காமல் இருக்கும். இதனால் எந்தச் செயலைச் செய்யும் போதும் எங்கு தோல்வி கிடைக்குமோ என்று பயந்து இலகுவானவற்றைக்கூட இழக்க நேரிடுகிறது.

வாழ்வில் முன்னேறும் போது நிறையப் பேர் என்னென்னவோ சொல்வார்கள். இதில் அதிகம் நம்மைப் பற்றிச் சொல்பவர்கள் யார் என்று பார்த்தால், குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் அல்லது ஆசிரியர்கள்தான். இவர்கள் சொல்வது நமது நல்லதற்காகவே இருக்கும். ஏன் நாம் எதை விருப்பப்பட்டுச் செய்தாலும் அதில் நிறையத் தடைகளைச் சந்திக்க நேரிடும். இந்த நேரத்தில் மனதை தளர விடாமல், தன் எண்ணத்தில் மட்டும் முழுக் கவனத்தைக் கொண்டு வாழ்வை மேற்கொண்டால், வெற்றியை நிச்சயம் அடையலாம்.

எப்போதும் மற்றவர்கள் கூறுவதை கேட்காமல், உங்கள் உள்ளம் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் உள்ளம் என்ன சொல்கிறதோ, அதை செய்யுங்கள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நடப்பதால், வெற்றியை அடைய முடியாது. ஆகவே உங்கள் மனம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு, அதன்படி நடக்க வேண்டும். உதாரணமாக, உங்களுக்கு ஏதேனும் ஒரு புதிய விடயங்களைச் செய்யும் போது, மற்றவர்கள் முடியாது என்று நினைப்பதை கூட, நீங்கள் முழு கவனத்தோடு, செய்து முடிப்பீர்கள்.

எந்த நேரத்திலும் நீங்களே முடிவெடுங்கள். இதுவரை சிறுவயதில் உங்களுக்காக உங்கள் வீட்டில் இருக்கும் பெற்றோர்கள் முடிவெடுப்பார்கள். இப்போது நீங்கள் வளர்ந்து விட்டீர்கள். இந்த நேரம் தான் நீங்கள் சுயமாக உங்கள் முடிவுகளை எடுக்க வேண்டிய தருணம். எப்போதும் எதையும் செய்ய முடியவில்லை என்று மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்காமல், பொறுப்புணர்வோடு இருக்க வேண்டும். வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால், நினைத்தால் மட்டும் போதாது, சுயமாக முடிவு எடுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

இது தான் மிகவும் முக்கியமான ஒன்று. மேலே சொன்னது போல், வாழ்க்கையில் முன்னேறும் போது தோல்விகளைச் சந்தித்துத் தான் ஆக வேண்டும். அதற்காக அந்த தோல்விகளையே மனதில் வைத்துக் கொண்டு வாழ்க்கையில் இருக்க கூடாது. ''தோல்வி தான் வெற்றியின் முதல் படி''. தோல்விகளைச் சந்திக்கச் சந்திக்க தான் மனம் தெம்பாக, அனைத்தையும் எதிர்த்து நின்று, தைரியமாகச் செல்ல முடியும். இதனால் வெற்றியையும் எளிதில் அடைய முடியும். இன்றைய காலத்தில் நிறைய மக்கள் சோம்பேறித்தனத்துடன், கவனகுறைவோடு, எதைப் பற்றியும் கவலை இல்லாமல் இருக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்கு எந்த ஒரு நினைப்பும் இல்லை. இதனால் அவர்கள் எந்த ஒரு பெரிய பாராட்டையும் பெறப் போவதில்லை. ஆனால் தோல்வியடைந்துவிட்டால் மட்டும், அதை நினைத்து மனதை தளரவிட்டு, வாழ்க்கையை வீணாக்குகிறார்கள். ஆகவே அவ்வாறு இல்லாமல், மனதை எப்போதும் சுறுசுறுப்பாக வைப்பதோடு, அடைய வேண்டிய இலக்கை மனத்தில் கொண்டு சுறுசுறுப்பாக செயல் பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# இந்தியாவில் மாற்றமொன்று வந்தால் ஈழத்தமிழருக்கு நல்ல காலம் பிறக்கும்

## சுவிஸில் வைத்து ஸ்ரீ ஸ்ரீரவிசங்கர் குருஜி தெரிவிப்பு

இந்தியாவில் பெரிய மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும். அப்படி மாற்றம் ஏற்படும் போதுதான் இலங்கைத் தமிழர்களுக்கு நல்ல வழி பிறக்கும்.''

வாழும்கலை அமைப்பின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீரவிசங்கர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

ஐரோப்பாவுக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த அவர் கடந்தவாரம் சுவிஸிக்கு வருகை தந்தார். அங்கு, செங்காளன் மாநிலத்தில், சென்மார்க்கிறேத்தன் ஸ்ரீகதிர் வேலாயுதசுவாமி ஆலயத்துக்கு வருகை தந்த ஸ்ரீஸ்ரீரவி சங்கர் குருஜிக்கு வரவேற் பும் பாதபூசையும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் சுவிஸ் நாட்டவர்கள் பெருமளவில் கலந்துகொண்டு அவரது ஆசிகளைப் பெற்றனர்.

அங்கு வைத்து செய்தியாளர்களுக்கு அவர் அளித்த செவ்வி வருமாறு :-

கே:- ஐரோப்பாவில் புலம் பெயர்ந்துள்ள ஈழத்தமிழர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப:-தமிழ்க் கலாசாரத்தை நன்றாக பாதுக்கப்பதில் ஈழத்தமிழர்கள் காட்டும் ஆர்வத்தையிட்டு சந்தோஷம் அடைகிறேன். உலகத்திலேயே மிகச் சிறந்த கலாசாரமாக தமிழர்களின் கலாசாரம் உள்ளது. எமது கலாசாரத்தின் தத்துவத்தையும் பொருளையும், கடவுள் வழிபாட்டையும் எடுத்துக்காட்டும் ஞானநூல்கள் எம்மிடம் உள்ளன. அந்த நூல்களை பாராயணம் செய்தல், ஆலயங்களை அமைத்து வழிபாடு செய்தல் ஆகியவற்றில் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆர்வமாக இருப்பதையிட்டு சந்தோஷம் அடைகிறேன். அவை மேலும் வளர ஆசி கூறுகிறேன்.



கே:- இலங்கைப் பிரச்சினைக்கு இந்தியா மற்றும் சர்வதேசத்தின் உதவியுடன் தீர்வுகிட்டும் என நம்புகிறீர்களா?

ப:-இந்தியாவில் மாற்றம் உண்டாகவேண்டும். அப்படி ஒருமாற்றம் உண்டாகும் எனக் கருதுகிறேன். அப்படி இந்தியாவில் மாற்றம் ஏற்பட்டால், இலங்கையில் தமிழர்களுக்கு நல்லதொரு வழி பிறக்கும். அதேநேரம் இலங்கையில் தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாது போய்விட்டது. மக்களுக்காக எல்லோரும் ஒன்றாகச் செயற்பட்டால், உண்மையில் அது வெற்றியைத் தரும்.

தமிழர்களுக்கிடையில் ஒற்றுமையின்மையே அவர்களது வெற்றிக்கு தடையாக உள்ளது. ஆகவே எல்லோரும் ஒன்றுபட்டு செய )படவேண்டும்.

தமிழ்நாட்டில் ஊழல்கள். அதனால் தமிழர் பிரச் சினையை வைத்துபோட்டி அரசியல் இடம்பெற்றது. ஆனால் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஊழல் காரணமாக இந்திய அரசியலில் போட்டிகள் நிலவுகின்றன. ஊழல் ஒழிந்து ஒற்றுமை ஏற்பட வேண்டும். உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு முடிவு ஏற்படவேண்டும்.

அப்போது இலங்கைத் தமிழர்களுக்கும் லாபம் ஏற்படும்.

கே:- ஈழத்தமிழர்களுக்கு உதவுவதற்காக என்ன திட்டங்களை முன்னெடுத்துள்ளீர்கள்?

ப:-பல திட்டங்களை முன்னெடுத்துள்ளோம், இரண்டு அநாதை இல்லங்களை நடத்திக்கொண்டிருக்கிறோம். போரால் மனம் நொந்து போனவர்களை இயல்பு நிலைக்கு கொண்டு வர பல திட்டங்களை அங்கு முன்னெடுத்துள்ளோம். அங்கு இன்றும் பல திட்டங்களை செய்ய வேண்டியுள்ளது. அந்தத் திட்டங்களை செயற்படுத்த விருப்பமும் இருக்கிறது.(ஒ)

## நில அளவையாளர் நாயகமாகப் பதவியேற்பு



இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் 45 ஆவது நில அளவையாளர் நாயகமாக கலாநிதி கனகரத்தினம் தவலிங்கம் நாளை 25 ஆம் திகதியில் இருந்து பதவியேற்கவுள்ளார்.

சுமார் 40 ஆண்டுகள் அரச சேவையில் கடமையாற்றி வரும் இவர் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். இவர் 1973 ஆம் ஆண்டு தபால திணைக்களத்தில் உதவித் தபால் அதிபராகச் சேர்ந்து, 1977 இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பட்டம் பெற்று, 1979 இல் இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் உதவி நில அளவை அத்தியட்சகராக இணைந்து, பின்னர் மேலதிக நில அளவை நாயகமாகப் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ஞ)

## புதிய அங்கத்தவர்களை கூ.சங்கங்கள் இணைக்க வேண்டும்

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சகல கூட்டுறவு நிறுவனங்களும் புதிதாக அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கு கூடிய கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சகல கூட்டுறவுச் சங்க விற்பனை கிளை நிலையங்கள் ஊடாக இந்தப் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு கிளை விற்பனை நிலையம் குறைந்தது நூறு அங்கத்தவர்களையாவது புதிதாக இணைத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கென கிளை நிலையங்களில் இதற்கான விழிப்புணர்வு அறிவுறுத்தல்களை கிளை முகாமையாளர்கள் மக்களுக்கு வழங்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களில் புதிதாக அதிக அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதன் மூலம் சங்கங் களின் கிளையில் மக்களின் விழிப்புணர்வை மேலும் அதிகரிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ந-17)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளன.

இன்று புதன்கிழமை காலை 9-11 மணிவரை அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30-1.30 மணிவரை அரியாலை திருமகள் சனசமூக நிலையத்திலும்,

நாளை வியாழக்கிழமை காலை 9-11 மணி வரை நாயன்மார் கட்டு பாரதி சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30-1.30 மணி வரை நாயன்மார்கட்டு அம்பாள் சனசமூக நிலையத்திலும்-

26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை9-11 மணி வரைஅரியாலை சுஜாபோட்போ நிலையம் முன்பாகவும், முற்பகல் 11.30-1.30 மணி வரை அரியாலை கனகரட்ணம் மகாவித்தியாலயம் முன்பாகவும்-

29 ஆம் திகதி காலை 9-11 மணிவரை அரியாலை கலைவாணி சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30-1.30 மணிவரை அரியாலை ஆள்காட்டி வீதி அருளம்பலம் வீதிச் சந்தியிலும்-

30 ஆம் திகதி காலை 9-11 மணிவரை இராஜேஸ்வரி வீதி நிறைபார்க்கும் மையத்திலும், முற்பகல் 11.30-1.30 மணி வரைஅரியாலைபெரிய பாலம் ஆசீர்வாதப்பர் வீதியிலும்-

31 ஆம் திகதி காலை 9-11 மணிவரை கொழும்புத் துறை பாண்டியன்தாழ்வு வைரவர் கோயிலடியிலும், முற்பகல் 11.30-1.30 மணிவரை கச்சேரி கிழக்கு ஒழுங்கை ரவி பார் முன்பாகவும்-

ஓகஸ்ட் 1ஆம் திகதி காலை 9-11 மணிவரை அரியாலை முள்ளி வீதியிலும், முற்பகல் 11.30-1.30 மணிவரை பெண்டிக்கோஸ்சபை வீதியிலும் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன. (ந)

## கிண்ணத்தை வென்றது சுந்தரலிங்கம் இல்லம்



கொழும்புத்துறை, ஜூலை 24

அரியாலை சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட இல்ல மெய்வன்மைப் போட்டியில் சுந்தரலிங்கம் இல்லம் 846 புள்ளிகளைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக உடற்கல்விப் போதனாசிரியர் செல்வி சுரேந்தினி சிதம்பரநாதன் வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். (ந-135)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை மனனப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 24

வண்ணை- சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத் திக் கழகம், சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டி பாலர் பிரிவு, கீழ்ப் பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெறும்.

பாலர் பிரிவுக்கு ''நத்தார்படை ஞானன்பசு'', ''பொன்னார் மேனியனே'' ஆகிய திருமுறைகளும், கீழ்ப்பிரிவுக்கு ''பித்தா பிறைசூடி பெருமானே'',''மற்றுப்பற்று எனக்கு இன்றி நின் திருப் பாதமே'' ஆகிய திருமுறைகளும் மனனம் செய்யவேண்டும்.

திருமுறை மனனப்போட்டி ஓகஸ்ட் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 27 ஆம் திகதி ஆகும்.

பரிசில்கள் ஓகஸ்ட் 13 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை அன்று வழங்கப் படும்.

திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புவர்கள் சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் [illegible] அறிவித்துள்ளார். (ந)



தனங்களப்பு பெரும்படை கண்ணகை அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகத்தின் போது.... (ந-9)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்பு பரிஷ் பிரிவுக்குட்பட்டபுதிய கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றுள்ளது.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சின்னத்துரை மகேந்திரன் தலைமையில் உப-விதிக்கமைய புதிய நிர்வாகிகள் ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-அச்சலிங்கம் ஸ்ரீஸ்பரலிங்கம், உப தலைவர்- சுப்பையா சாந்தகுமார் (மாரீசன் கூடல்), செயலாளர்- திருமதி அல்பிரட் ஜெனிற்றா (சில்லாலை), உறுப்பினர்கள்- பொ.நாகராசா (மாதகல்), க.சுப்பிரமணியம் (பண்டத்தரிப்பு), க.பத்மநாதன் (வடலியடைப்பு). (ந-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் நிலைய கட்டுமானம் கிளிநொச்சியில் துரிதம்

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி ரயில் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி நகரின் பிரதான ரயில் நிலையத்தில் கட்டடங்கள் அமைத்தல், தண்டவாளங்களை பொருத்தல் என்பன தற்போது இடம்பெறுகின்றன.

இந்த மீள் கட்டுமானப் பணிகளில் இந்தியப் பணியாளர்களும் சில உள்ளூர்ப் பணியாளர்களும் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது ஓமந்தை வரை வந்து செல்லும் யாழ்தேவி புகையிரதம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் கிளிநொச்சி வரை தனது பயணத்தை மேற்கொள்ளுமெனக் கூறப்பட்ட நிலையில் இந்தப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

மேலும் பரந்தன், ஆனையிறவு, பளை, கொடிகாமம் ஆகிய பகுதிகளிலும் இத்தகைய பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (க-426)

# வசதிகளை உருவாக்குமாறு யூனியன்குளத்தில் கோரிக்கை

அக்கராயன், ஜூலை 24

கிளிநொச்சி யூனியன்குளம் கிராம மக்கள் தமது கிராமத்தில் அடிப்படை வசதிகளை உருவாக்கித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீள்குடியமர்வின் பின்னர் இந்தக் கிராம மக்கள் மோசமான போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர். கிராம வீதிகளில் அமைந்துள்ள பாலங்கள் உடைந்த நிலையில் காணப்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் தமது கிராமத்துக்கான பஸ்சேவைகள், வீட்டுத் திட்டங்கள் ஆகியனவற்றை ஏற்படுத்தி வழங்குமாறும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் யூனியன்குளம் பாடசாலையை அபிவிருத்தி செய்தல் உட்படப் பல கோரிக்கைகள் இவர்களால் விடுக்கப்பட்டுள்ளன. (க-18)

## மூன்று திருட்டுச் சம்பவங்கள்

வவுனியா, ஜூலை 24

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் அடுத்தடுத்து மூன்று திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஓமந்தை வேப்பங்குளம் அரச உத்தியோகத்தர்களுக்கான வீட்டுத்திட்டப் பகுதியிலேயே இந்த திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வாளி, கப்பி, சிமெந்து, இரும்புக் கம்பிகள், கதவு நிலைகள், கூரைமரங்கள் உட்படப் பல்வேறு பொருள்கள் திருட்டு போயுள்ளன. மின்சாரம் இந்தப் பகுதிக்கு வழங்கப்படாதுள்ளமை திருடர்களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. திருட்டு இடம்பெறும்போதுதான் பொலிஸார் அங்கு செல்வதாகவும் தெரிய வருகின்றது.

இந்த வீட்டுத் திட்டத்தில் மின்சாரம், வீதி அமைப்பு வேலைகள் என்பன இதுவரை நிறைவேற்றப்படாத நிலையில் காணப்படுகின்றன. இது தொடர்பாக இங்குள்ளவர்கள் எழுத்துமூலமாக உரிய அதிகாரிகளுக்கு முறையீடு செய்துள்ள போதிலும் இதுவரை எதுவிதமான சாதகமான பதிலும் கிடைக்கவில்லையெனவும் இதனால் இங்கு குடியமர்ந்த குடும்பங்கள் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதைப் புறக்கணிக்க போவதாகவும் தெரியவந்துள்ளது. (க-402)

# அரச காணி ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த தீவிரமுயற்சி

## பொதுத் தேவைக்கு அதை வழங்கக் கோரிக்கை

மாங்குளம், ஜூலை 24

கனகராயன்குளம் வடக்கில் அமைந்துள்ள அரச காணியை அந்தப் பகுதியில் சேவையாற்றிய முன்னாள் கிராம சேவகர் தமக்குச் சொந்தமாக்க முற்படுவதைத் தடுத்து பொதுத் தேவைக்கு அதனை ஒப்படைக்குமாறு அந்தப் பகுதி பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.


கனகராயன்குளப் பகுதியில் ஏ-9 வீதியில் இந்தக் காணி அமைந்துள்ளது. கனகராயன்குளம் வடக்கிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம மாதர் அபிவிருத்திச் சங்கம் கால்நடை வளர்ப்போர் சங்கம், மூத்த பிரஜைகள் குழு போன்ற பொது அமைப்புக்களே இந்தக் காணி தொடர்பான வேண்டுகோளை விடுத்துள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னைய காலப் பகுதியில் கடமையாற்றிய கிராம சேவகர் இந்த அரச காணியில் தமது அலுவலகத்தை அமைத்தார்.

ஆனால் அவரின் சேவையில் திருப்தி காணாத பொதுமக்கள் இவரை இடமாற்றுமாறு வேண்டுகோள் விடுத்தனர். இதனால் இவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இவர் இந்தக் காணியைத் தமது மனைவியின் பெயருக்கு மாற்றுவதற்கு முயற்சி செய்துள்ளார்.

இதனை அறிந்த பொது அமைப்புக்கள் இந்தக் காணியை பொதுத் தேவைக்கென சுவீகரித்துத் தருமாறு வடமாகாண ஆளுநர், வவுனியா மாவட்ட அரச அதிபர், வவுனியா வடக்கு பிரதேச செயலர் மற்றும் பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-422)



சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தீர்த்த உற்சவம் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. வசந்த மண்டபப் பூசைகளை அடுத்து சுவாமி வீதியுலாவந்து தீர்த்தக் கேணியை அடைந்ததும் அங்கு விசேட அபிசேகங்கள் இடம்பெற்றன.

தீர்த்த உற்சவம் நிறைவு பெற்று ஈஸ்வரர் ஆலயத்தை வந்தடைந்ததும் அங்கு தான்தோன்றி ஈஸ்வரருக்கும், பூலோகநாயகிக்கும் திருக்கல்யாணம் இடம்பெற்றது. பின்னர் கொடியை இறக்கி வைக்கும் நிகழ்வும் ஆலயத்தில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சுவாமி பூங்காவனத் தேரில் வெளிவீதியை வலம் வந்தார்.

ஒட்டுசுட்டான் 64 படைப் பிரிவினரால் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. எஸ்.திலககாந்தனால் எழுதப்பட்ட அருள்மிகு தான்தோன்றி ஈஸ்வரர் பாடல் நூல் ஆலய முன்றலில் வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டது. கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-435)

## நெல் அறுவடை ஆரம்பம்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வயல் நிலங்களில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

கடந்த காலபோகத்தின் போது பெரும் அழிவுகளை எதிர்கொண்ட விவசாயிகள் சிறுபோகத்தில் நம்பிக்கையுடன் அறுவடையில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அறுவடை இயந்திரம் மற்றும் வேலையாள்கள் நெல் அறுவடையில் ஈடுபடுவதையும் காணமுடிகின்றது.

இதேவேளை இங்குள்ள வயல் நிலங்களில் யானை, பன்றி ஆகியவற்றின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர். (க-18)

# காத்தார் சின்னக்குளம் கிராம வீதிகள் மோசமான நிலையில்

வவுனியா, ஜூலை 24

வவுனியா காத்தார் சின்னக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள வீதிகள் மோசமான நிலையில் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தினமும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றன.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்து வந்த நூற்றுக் கணக்கான குடும்பங்கள் கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் குடியமர்ந்தன. இவர்களுக்கு அரசு உதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் இங்கு காணப்படும் வீதிகள் மோசமாகச் சேதமடைந்து முட்கள் நிறைந்த பகுதியாகக் காணப்படுகின்றன. மேலும் புழுதி நிறைந்து காணப் படுவதால் இந்த வீதியைப் பயன்படுத்தும் காத்தார் சின்னக்குளம், களப்பனிச்சங்குளம் பாடசாலை மாணவர்களின் வெள்ளை நிறச் சீருடைகள் அழுக்கடைவதைக் காணமுடிகின்றது.

மேலும் ஓட்டோ, சைக்கிள் உட்பட ஏனைய வாகனங்களில் பொதுமக்கள் பயணிக்கும்போது கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-402)

## ஆலயத்தில் திருப்பணி வேலைகள்

வவுனியா, ஜூலை 24

வவுனியா வேப்பங்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் இடம்பெறுகின்றன.

பல ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தில் பெருமளவு மக்கள் வழிபாடுகளை மேற் கொண்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

முழுமையான திருப்பணி வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அதன் முதற்கட்ட வேலைகள் தற்போது இடம்பெறுகின்றன.

தற்போது ஆலயத்தின் நுழைவாயில் கதவுகள் இடப்பட்டுள்ளதோடு ஏனைய பகுதிகளுக்கும் கதவுகள் போடப்பட்டுள்ளன.

இந்தத் திருப்பணி வேலைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-421)

# மண் அகழ்வு காரணமாக பூநகரி உவர் நீர் தடுப்பணைக்கு பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 24

பூநகரிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக உவர் நீர்த் தடுப்பணைகள் பாதிக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள விவசாய நிலங்களுக்குள் உவர் நீர் புகுவதைத் தடுக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள உவர் நீர்த் தடுப்பு அணைகளை அண்டிய பகுதிகளில் சட்டவிரோதமான மணல் அகழ்வு பெருமெடுப்பில் இடம்பெற்று வருகின்றது.

இத்தகைய சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக உவர் நீர்த் தடுப்பு அணைகள் பாதிக்கப்படுவதோடு எதிர்காலத்தில் கடல் நீர் உட்புகுந்து விவசாய நிலங்கள் உவரடையும் அபாய நிலை தோன்றியுள்ளது.

எனவே இனியும் தாமதிக்காது சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நல்லூர்ப் பகுதியிலேயே சட்டவிரோத மணல் அகழ்வினால் உவர் நீர்த் தடுப்பு அணைகள் பாதிக்கப்படும் சாத்தியக் கூறுகள் அதிகளவில் காணப்படுவதாகவும் தெரிய வருகின்றது. (க-6)

# விசுவமடு பொதுச் சந்தை கால்நடைகளின் உறைவிடம்

## வேலிகள் அமைக்கப்படாததால் இந்த அவலம்

வவுனியா, ஜூலை 24

விசுவமடு பொதுச்சந்தையின் சுற்றுப்புற வேலிகள் அமைக்கப்படாததால் கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதாக சந்தை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் கீழ் உள்ள விசுவமடு பொதுச் சந்தை போதிய வசதிகள் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது. அத்துடன் குறித்த சந்தையின் சுற்றுப்புற வேலிகள் எவையும் அமைக்கப்படாததால் சந்தை திறந்த நிலையில் பாதுகாப்பற்றதாகக் காணப்படுகின்றது.

அத்துடன் பகல் இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள், சந்தையின் வர்த்தக நிலையங்களுக்குள் புகுந்து சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் தாம் நட்டத்தை எதிர்கொள்வதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். தாம் இந்தக் கால்நடைகளால் தொடர்ந்து சிரமங்களை எதிர்கொள்வதால் சந்தைக்கு சுற்றுவேலியை அமைத்துத் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிடைக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்கவேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். மற்றவர்கள் பிரச்சினையில் தலையிடுவதால் வீண் பழிச்சொல் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். விருந்தினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

**சிங்கம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**கன்னி:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

## நாளை

ஆடி-09 வியாழக்கிழமை 25.07.2013
திதி: திருதியை மா. 06.44 வரை
நட்சத்திரம்: சதயம் பி.இ. 04.27 வரை
சுபநேரம்: 07.32 - 09.02 வரை
இராகுகாலம்: 01.32 - 03.02 வரை

**துலாம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பணவரவு உண்டு. சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**தனுசு:** மனநிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உறவுகளின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிட்டும். உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். முன்கோபம் விலகும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்:** சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். யாரும் உங்களை புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கும்பம்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**மீனம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 7 | | | | | | 1 |
| | 6 | | 8 | | | 2 | | 4 |
| 3 | 9 | 4 | | | 5 | | | 7 |
| 5 | | | 4 | | 2 | | | 8 |
| | | 2 | | 5 | | 4 | | |
| 4 | | | 3 | | 8 | | | 9 |
| 7 | | | 2 | | | 8 | 3 | 6 |
| 2 | | 3 | | | 6 | | 4 | |
| 6 | | | | | | 1 | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 1 | 7 | 2 | 3 | 6 | 9 | 8 |
| 3 | 2 | 8 | 9 | 4 | 6 | 7 | 5 | 1 |
| 6 | 9 | 7 | 1 | 8 | 5 | 3 | 4 | 2 |
| 9 | 8 | 6 | 2 | 7 | 4 | 1 | 3 | 5 |
| 5 | 1 | 2 | 3 | 6 | 8 | 4 | 7 | 9 |
| 7 | 3 | 4 | 5 | 1 | 9 | 8 | 2 | 6 |
| 8 | 6 | 3 | 4 | 5 | 2 | 9 | 1 | 7 |
| 2 | 7 | 9 | 6 | 3 | 1 | 5 | 8 | 4 |
| 1 | 4 | 5 | 8 | 9 | 7 | 2 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந் தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரை யான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிர பல்யமானது.


# முதலாமாண்டு நினைவஞ்சலி

அமரர்
## செல்லையா சிவபாதசுந்தரம்
(முன்னைநாள்கட்டட ஒப்பந்தகாரர்–மீசாலை)

அப்பா! அகிலத்தில் ஆயிரம் உறவு இருந்தென்ன
அப்பா! உங்கள் உறவு போலாகுமா?
அரவணைத்து பாசமூட்டினீர்கள்
ஆற்ற வேண்டிய கடமையெல்லாம் புரிந்தீர்கள்
அறுபத்தைந்து வயதிற்குள்
அளப்பரிய சாதனை பல புரிந்து
அழகாக நீங்கள் கட்டிய கட்டடங்களே
உங்கள் முகவரிகள்
அகல் விளக்காய் ஒளி தந்து
அணைந்து விட்ட அப்பாவே!
ஆண்டாண்டு போனாலும்
அகலாது உங்கள் நினைவு
ஆணிவேர் இழந்து தவிக்கின்றோம்
இன்னும் பிறப்புண்டேல் நீங்களே எம்
அப்பாவாக இறைஞ்சுகின்றோம் இறைவனை.

(31082)(3.5.6)

அன்னை மடியில்
27 – 02 – 1947

விநாயகர் திருப்பாதத்தில்
03 – 08 – 2012



மீசாலை கிழக்கு, மீசாலை. குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 24
அரியாலை பிரப்பன்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் ஒகஸ்ட் 8 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 9 ஆம் திகதி தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். (ந)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 24
வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி யும் சங்காபிஷேகமும் நாளை வியாழக் கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். முற்பகல் 11.30 மணிக்கு சங்காபிஷேக மும் நடைபெறும்.
மாலை 6.30 மணிக்கு விநாயகப் பெருமன் மணவாளக் கோலராய் பூந்தண்டிகையில் வீதியுலா வருவார். (ந)

★ ★ ★

சுழிபுரம், ஜூலை 24
ஆடிச் செவ்வாயை முன்னிட்டு பிரதி செவ் வாய்க் கிழமை தோறும் வழக்கம்பரை அம்மன், சுழிபுரம் பத்திரகாளி, கம்பனை துர்க்கை அம்பாள் ஆகிய ஆலயங்களில் விசேட அபிஷேக வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. (ந-28)

# நெடுந்தீவில் பசுமைத் திட்டம்

## கரையோரங்களில் சவுக்கு நடுகை

நெடுந்தீவு, ஜூலை 24
நெடுந்தீவுப் பிரதேசத்தில் பசுமைத் திட்டத்தின் கீழ் உவர்காற்றைத் தடுக்கும் முக மாக கரையோரப் பகுதியில் சவுக்கு மரங்களை நடு வதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.
இந்தப் பிரதேசத்தில் கரை யோர பகுதியில் சுமார் பதி னான்கு கிலோ மீற்றர் நீளத் துக்கு சவுக்கு மரங்கள் நடப் படவுள்ளன.
உவர் காற்றினால் பிரதேசத் தின் விளை பயிர்ச் செய்கை பெரிதும் பாதிக்கப்படுகின் றன. அத்துடன் சுற்றுச் சூழலும் காற்றின் தாக்கத் தினால் பாதிப்புக்கு இலக்கா கின்றது.
இதனைத் தடுக்கும் முகமாக கரையோர பகுதியில் சவுக்கு மரங்களை நாட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதேசமயம் நெடுந்தீவைப் பசுமை நிறைந்த பிரதேச மாக மாற்றும் திட்டத்தின் கீழ் ஏரிகள், தரவைகள் போன்ற பொது இடங்களில் நிழல் மரங்களை நடவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
குறிப்பாக மருது, நாவல், பூவரசு, வேம்பு போன்ற நிழல் மரங்களை பிரசேத்தில் அதிகளவில் நடவும் நட வடிக்கை எடுக்கப்பட்டு இருப் பதாக விவசாயத் திணைக் களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ந-17)

## நேர்முகப் பரீட்சை

இலங்கை கல்வியியலாளர் சேவை தரம்-III க்கு ஆள்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக்கிழமை தொடக்கம் கொழும்பு கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு நேர்முகப்பரீட் சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
நிராகரிக்கப்பட்ட விண் ணப்பதாரர்கள் அடிப் படைத் தகைமையை பூர்த்தி செய்திருப் பின் உரிய காரணத் தைக்காட்டி மேன் முறையீடு செய்து நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய அனுமதியைப் பெறு வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இலங்கை கல்வி யியலாளர் சேவை யில் நியமனம் பெறு பவர்கள் ஆசிரியர் கலாசாலை மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரை யாளர் பதவிகளில் அமர்த்தப்படுவார் கள். (ந-11)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



பாடசாலை வீதி, தாவடிதெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த
ஜெயந்தன் - ஜெயறஜினி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**ஹனிஷ்**
இன்று (24.07.2013) புதன்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை யாழ்ப்பாணம் - நாச்சிமார் கோயிலடி, இராமநாதன் வீதியில் உள்ள ராஜாகிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.
இவர் நயினை நாகபூசணி அம்பாளின் திருவருளால் பல்கலைகளும் கற்று செல்வச் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென உளமார வாழ்த்துவோர்.
அன்பு
அப்பா, அம்மா,
அம்மம்மா, மாமாமார்கள்,
அத்தைமார்கள், மச்சான் மார்கள், மச்சாள்மார்கள்
மற்றும் அப்பம்மாமார்கள்,
அம்மம்மா
பெரியப்பாமார்கள், பெரி யம்மாமார்கள் மற்றும் சகோதரர்கள்.
(29851)(6.3.45)

## சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம் 2013



**பூங்காவனத் திருவிழா**

பாலை வனத்து உச்சிப் பகல் வழியாம் துயர மிகு உலக வாழ்வில்
காலை வைத்து வழி நடந்து செல்வதற்குக் கதியின்றி
நாளைநிலை அறியாது நலிவுறும் நம்மை ஆள என்றே
சோலை வசந்த பாங்கான பூங்காவனத்தில் வந்து
அமர்ந்தாய் செங்கற் படையானே *ஆக்கம்:* சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :
பூங்காவனத் திருவிழா உபயகாரர்கள்.

## வயாவிளான் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா

பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள புனித யாகப்பர் ஆலய திருநாள் திருப்பலி நாளை (25.07.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொண்டாடப்படவுள்ளதால் இதற்கான பாதுகாப்பு அனுமதி ஒழுங்குகளை அருட்திரு வணபிதா அன்ரனி பாலா அடிகளார் ஒழுங்கு செய்துள்ளார். திருவிழாத் திருப்பலிக்குச் செல்லும் பங்கு மக்கள் மற்றும் பக்தர்களும் ஆலயத்துக்குச் செல்வதற் கான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் யாழ். சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்துக்கு முன்பாகவும், கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தி லும் மற்றும் பருத்தித்துறை புனித அந்தோனி யார் ஆலயத்திலும் காலை 7.30 மணிக்கு ஒன்று கூடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பலாலிதெற்கு,
சென்ஜேம்ஸ் வீதி, வயாவிளான்.
ஆலய ஏற்பாட்டுக்குழுவினர்.
(31093) (45.3.6)

## சேவைநலன் பாராட்டு

60 ஆவது அகவை பூர்த்தியும் 30 ஆண்டுகள் சேவை நிறைவும்
20.07.1953 - 20.07.2013

*மணிவிழா நாயகன்*
**நவரத்தினம் மகிழ்ராஜா**
(கிராம உத்தியோகத்தர் - சங்கானை மேற்கு)



வளம் கொழிக்கும் யாழ் மண்ணில்,
கலை வளர்க்கும் சங்கானை மேற்குப் பதிதனில்!
முப்பது வருடங்கள் முகமலர்ச்சியுடன் சேவையாற்றி!
இன்று அகவை அறுபது தனில் கால்பதிக்கும்
எங்கள் மகிழ்ராஜாவே!
எங்கள் கிராமத்தில் ஆலின் விழுதாய்
மக்களைத் தாங்கிய தொண்டனே!
காலமகள் கோலமிட்ட பெருவாழ்வுதனில்
தன்னலமற்ற பணிதனில்,
மக்களது வறுமைத் தணிப்பில்
பசுமைப் புரட்சியாளனாய் திகழ்ந்தவனே!
இயற்கையதன் சீற்றமதில் கரைபுரண்டோடும்
மக்கள் துயரமதில்,
துயர்துடைத்துக் காத்துநின்ற எங்கள் காவலனே!
மீளாத் துயரமாம் மீள்குடியமர்வு
தொடுவானத்திற்கப்பால்.......... !
காத்திருந்த எங்களைக் குடியேற்றிய நாயகனே!
சமூக ஜோதியாய் தங்கள் சேவைகள்
மேன்மேலும் தொடர,இறைவனைப் பிரார்த்தித்து
வாழ்த்துகிறோம்!வாழ்க பல்லாண்டு!
வாழ்க பல்லாண்டு!!

Best Wishes

அன்புடன் எங்கள் நாயகனைப் பாராட்டி வாழ்த்துவோர்:
சங்கானை மேற்கு
சங்கானை மேற்கு
ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் நகைமாடம், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60ஆவது பிறந்தநாள் வாழ்த்து

மணிவிழா
(24.07.2013)



**கந்தசாமி பிறேமச்சந்திரன்**

இன்று (24.07.2013) புதன்கிழமை தனது 60ஆவது அகவையில் மணிவிழா காணும் நாயகன் கந்தசாமி பிறேமச்சந்திரன் அவர்களைக் கொண்டலடி விநாயகர் ஆசியுடன் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

தலையாளி,
கொக்குவில்.

வாழ்த்துபவர்கள்:
அம்மா, மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.
(29856)(10,6,3)

## மாணவருக்கு ஊட்டச் சத்து மாத்திரைகள்

தென்மராட்சி, ஜூலை 24

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் ஊட்டச்சத்து மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாணவர்களிடையே காணப்படும் போஷாக்கின்மை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில், சுகாதார அமைச்சினால் மாணவர்களுக்கு ஊட்டச்சத்து மாத்திரைகள் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளினால் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

வல்வெட்டித்துறை, ஜூலை 24

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் தனது 60 ஆம் ஆண்டு நிறைவையொட்டி (மணி விழா) வெளிக் கழகங்களுக்கிடையே நடத்தும் போட்டிகளுக்கு விண்ணப்பிக்க இயலும். படகு ஓட்டப்போட்டி, கட்டு மரப்போட்டி, நீச்சல்போட்டி, நெடுந்தூர மரதன் போட்டி மற்றும் விநோத உடைப்போட்டி போன்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் வட மாகாண விளையாட்டுக் கழகங்கள், நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பதிவு செய்யலாம் என தெரிவித்துள்ளனர். (ந-34)



இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களை அழைத்து வரும் பாலர் பாடசாலை மாணவர்களைக் காணலாம். (ந)

## கைதடியில் திருட்டுப் போகும் ஆடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கைதடியில் வெவ்வேறு இடங்களில் இருந்து இதுவரை 7 இற்கும் மேற்பட்ட ஆடுகள் திருடப்பட்டுள்ளன என்று பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.


மேய்ச்சலுக்காகக் கட்டி வைத்த ஆடுகள் மற்றும் மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடப்படும் ஆடுகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த ஆடு ஒன்றை அண்மித்துச் சென்ற ஒருவர் அந்தப் பகுதியில் ஆள் நடமாட்டத்தை அவதானித்து தூரத்தே நின்றிருந்தவருக்கு தகவல் கொடுத்துள்ளார். அந்த இடத்துக்கு டிப்பர் ரக வாகனத்தில் வந்தவர்கள் ஆட்டைத் தூக்கி டிப்பருக்குள் போட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் ஆட்டைத் தூக்குவதைக் தூரத்தே தோட்டத்தினுள் நின்றிருந்த ஒருவர் அவதானித்து அந்த இடத்துக்குச் செல் வதற்கு முன்னர் டிப்பர் வாகனம் சென்றுவிட்டது என்று அந்த விவசாயி தெரிவித்துள்ளார்.

மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகள் காணாமல் போயிருந்த நிலையில் அவை திருடப்படுகின்றன என்பது பின்னரே தெரியவந்துள்ளது. அதனையடுத்து பிரதேச வாசிகள் தமது கால்நடைகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்வதற்கு தயங்குவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ந-4)

---

### 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



வையத்துள் அறிமுகம்
30.09.1946

தெய்வத்துள் சங்கமம்
17.07.2011

அமரர் நாகலிங்கம் செல்வராசா

திதி: அபரபக்க துதியை (24.07.2013)

பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய்
எமையெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே
காலச்சக்கரம் உருண்டோடினும்
உங்களது பசுமையான நினைவுகள்
கணப்பொழுதும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

74, பொன்னம்பலம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

மனைவி, மகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்

---

### ஆறாம் மாத நினைவலைகள்

திருமதி
இளையதம்பி இலட்சுமி



திதி: அபரபக்க துதியை - 24.07.2013

மண்ணில்
14.11.1914

விண்ணில்
28.01.2013

அன்பின் விருட்சமாய் நின்று
அறநெறிகள் புகட்டினாயே!
தனிமரமாய் நின்றெம்மைத்
தரணியிலே சிறக்க வைத்தாய்
ஆறுமாதம் ஆனாலும் ஓயவில்லை
உன் நினைவலைகள்!
எம் இதயக் கோயிலில் - என்றும் நீ
தெய்வமகள் இலட்சுமியம்மா!

மீசாலை கிழக்கு,
மீசாலை. (C/2722) (45.6.3)

குடும்பத்தினர்.

---

### 13ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
அம்பலவாணர் குலசேகரம் J.P.

(இளைப்பாறிய நூலகர் - சாவகச்சேரி
றிபேர்க் கல்லூரி,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

தோற்றம்
26.08.1937

மறைவு
24.07.2000

என்றும் உங்கள் நினைவுடன்....
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

---

### எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில்
07.04.1919

விண்ணுலகில்
22.07.2005



திருமதி அருந்தவஈஸ்வரி இரகுநாதன்

திதி: ஆடிமாத அபரபக்க துதியை (24.07.2013)

உங்கள் வழிகாட்டலில் என்னை
என் காலில் நிற்க வைத்த தெய்வமே!
எட்டாண்டுகள் அல்ல எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவால் வாடும் அன்பு மகள்

உடையார் வீடு,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

செல்வி செந்திற் செல்வம்
இரகுநாதன் (இளைப்பாறிய அதிபர்),
உற்றார், உறவினர், நண்பர்கள்.

---

### 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26.03.1965

உதிர்வு
24.07.1983



நீலிப்பந்தனை காரைநகரைச் சேர்ந்த
அமரர்
விஜயரத்தினம் விஜயராஜ சேகரன் குமாரஸ்ரீ

புத்தபிரான் ஞானம் பெற்ற பூரணையில்
பள்ளிக்குச் செல்கையில் பதினெட்டு வயதில்
நிராயுதபாணியாய் வீழ்த்தப்பட்ட அபிமன்யு!
மிருகப்பலி மறுத்த கருணைத்தெய்வத்தின் பெயரால்
மனிதப்பலியானாய் மானிப்பாய் வீதியோரம்
மனிதத்தின் மரணத்தின் சாட்சியான விஜயமைந்தனே!
மரணம் உடலுக்கே....
மாண்புடையோர் எண்ணங்களுக்கல்ல!
என்றும் உன் நீங்கா நினைவுகளுடன்

சகோதர சகோதரிகள்:
கலாநிதி வீரமங்கை யோகரத்தினம்,
வி.பிறேமதாஸ்குமாரஸ்ரீ
வீரமனோகரி கோபிச்சந்திரன்
வி.அருள்முகன் சாயிபாபா
கலாநிதி வி.ஜோன் மனோஹரன் கென்னடி

நீலிப்பந்தனை, காரைநகர். (39901)(10,6,3)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
10.04.1941

மறைவு
24.06.2013

எமது குடும்பத்தலைவர்
அமரர் தம்பன் மாணிக்கன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (24.07.2013) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (30993) (45.6.3)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

---

### விண்ணக வாழ்வில் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
அன்ரன் குடாபண்டா ரணவீர

மண்ணுலகில்
29*06*1950

விண்ணுலகில்
23*06*2013



வான் வீட்டில் நிரந்தரமாய்
நீங்கள் வசித்தாலும்
அவனியில் எம்முடன் இருந்து
அன்பு மழை பொழிந்து
பாசக்கரங்களால் அரவணைத்து
எமை வளர்த்த பப்பியின்
இனிய நினைவுகளை
என்றும் மறவோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:

ஞானையார் லேன்,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## விநாயகமூர்த்தி சிவநேசம்



வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது 66/2, அம்மன் வீதி, கந்தர்மடம் - யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி சிவநேசம் நேற்று முன்தினம் (22.07.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - யோகம்மா தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான புனிதவதி, துரைராசா மற்றும் தர்மலிங்கம் (கொழும்பு), செல்வரஞ்சிதம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலகவதி (தயா), புஸ்பராஜா (பிரான்ஸ்), தனேஸ் வரி, கருணாகரன் (கனடா), ரஞ்சனேஸ்வரி (கனடா), முரளிதரன் (லண்டன்), ஆகியோரின் சிறியதாயும் மற்றும் பிறேமச்சந்திரன் (கனடா), பாலச்சந்திரன் (கனடா), தர்மசந்திரன் (கனடா), லக்ஷமசந்திரன் (கனடா) ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிியைகளுக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

66/2, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: தி. சிவபாதசுந்தரம் (பிரின்ஸ்)
தொ.பே: 021 222 1853,
071 856 1233

(சி.29902) (45.6.3)

## திருமதி சரஸ்வதி கந்தையா

(செல்லமணி- ஓய்வுபெற்ற ஆசிரியை கணேசவித்தியாசாலை- சித்தன்கேணி)



வட்டு.கிழக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தையா 19.07.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (ஆசிரியர்) அவர்களின்அன்பு மனைவியும், கலாஜினி (ரஞ்சி), ராகினி (பிரான்ஸ்), சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பராசக்திவேல் (சித்தப்பா), தங்கத்துரை (பிரான்ஸ்), விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமியும், கார்த் திகா (பிரான்ஸ்), விதுஷா, திலக்ஷா, பிரவீணா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2013) [illegible] 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, [illegible] யாற்று இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் [illegible] கொள்ளவும்.

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.
T.P- 021 300 7968

(சி/11007)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னையா கதிர்காமு



நாவற்காடு, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கதிர்காமு (22.07.2013) திங்கட்கிழமை நாவற்காடு, வரணியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - வீராசிப் பிள்ளை தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம், தில்லைநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராமச்சந்திரன் ( நில அளவை உதவியாளர், யாழ்ப்பாணம்), இராமநாதன் (வரணி), இராமலிங்கம் (வரணி), இராசலட்சுமி (லண்டன்), இராசேந்திரம் (பிரான்ஸ்), இராசகாந்தன் (பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவவதனி, சாந்த லட்சுமி, குணேசன் (லண்டன்), குமுதினி ஆகியோரின் அன்பு மாமனும், ராமராஜன், ரசித்தா, பிரதீபா, பிரசாந், பிரணவன், சியானி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2013) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்காடு, வரணி.
0779491015

(31091)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## சீரற்ற காலநிலை நீடிக்கும்

காற்றுடன் கூடிய கடும் மழை இன்று புதன்கிழமை வரை நீடிக்கும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. தென்மேல் பருவக் காற்றுக் காரணமாக [illegible] வ, [illegible] க [illegible] த் [illegible] ளி [illegible] ம் [illegible] ப் [illegible] ச)

## கண்ணீர் அஞ்சலி

பொலநறுவை,மன்னம்பிட்டிய பகுதியில் விபத்துக் குள்ளானதில் மரணத்தைத் தழுவிய எங்கள் நேசத்துக்குரிய மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களான


- ★ சுந்தரம் உதயகுமார்
- ★ S. தீபலக்ஷன்
- ★ மேனகா பாஸ்கரன்
- ★ பேரின்பம் சபேஷன்

ஆகியோரின் இறப்பு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. இந்த இழப்பால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சமுர்த்தி முகாமையாளர் சங்கம்,
யாழ் மாவட்டம்.

(29905)
(10,16,14)

## [illegible] கண்ணீர் அஞ்சலி



[illegible] வண்ணை
[illegible] காளி அம்பாள் ஆலய
[illegible] ர் சபை தலைவர்
[illegible] ஜயகுமார்
[illegible] ரின் அன்புத் தந்தை

### மதியாபரணம் இராஜரட்ணம்


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

வண்ணை
ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய
தொண்டர் சபை

(29905) (10,16,14)

## [illegible] ண அறிவித்தல்

### [illegible] பரணம் இராஜரட்ணம் (கிளாக்கர்)



[illegible] ம், கொட்ட [illegible] பிடமாகவும் [illegible] வீதி, ஆனைப் [illegible] பிடமாகவும் [illegible] யாபரணம் [illegible] கடந்த [illegible] னிக்கிழமை [illegible] ர்ந்தார்.

[illegible] காலஞ்சென்ற [illegible] பாபரணம் - [illegible] ம்பதியரின் [illegible] ம் காலஞ் [illegible] யர் குருசாமி (திருநெல்வேலி)- [illegible] தி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நவமணியின் (பேபி) அன்புக் கணவரும் இராஜகுமார், ஜெயக்குமார் (கனடா), விஜயகுமார், சாந்தினி, ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும்ராணி, கீதா (கனடா), நளாயினி, ஜெயதிலக்க, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற செல்வமணி மற்றும் நவமணி, யோகேஸ்வரி, செல்வராஜாவின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இராஜசிங்கம் சதாசிவம் மற்றும் கிருஸ்ணபிள்ளை, காலஞ்சென்ற வனிதா, தனபாலசிங்கம் சோமாவதி மற்றும் கணகாம்பிகை, மன்னவராஜன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சிந்துஜா, கண்ணன், தீபன், மோகன், சந்தியா, அபிலஷா, அனுஷா, ஆர்த்திகா, தீபன்ராஜ், பிரதீபன், நிதுஷா, தனுசன், கேசவன், சாம்பவி, ஐங்கரபவன், நந்தினி, அபிசாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2013) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 3 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] துறை வீதி,
[illegible] பந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/11015)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24/07/2013

# முன்னேஸ்வரருக்கு இன்று கொடியேற்றம்

கொழும்பு,ஜூலை 24
சிலாபம் - முன்னேஸ்வரம் முன்னை நாதப் பெருமான் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.



திருவிழாக் காலங்களில் நாட்டிலிருந்து வருகை தரும் அடியார்களின் நன்மை கருதி போக்குவரத்துச் சேவைகள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர் ஏற்பாடுகள் என்பனவற்றுடன் புதிய வாகன தரிப்பிட வசதிகளும் ஏற்படுத்தப்படும்.
பாதுகாப்பை முன்னிட்டு விசேட தற்காலிக பொலிஸ் நிலையமும் வழமை போல் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திரு விழாவும், மறுநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ச)

---

கொழும்பில் இருந்து வருகை தரும் உயிர்த்த ஆண்டவர் சமூகத்தைச் சேர்ந்த

## சகோ. லலித்பெரேரா

குழுவினரால் நடத்தப்படும்.




## இறை தியான குணமாக்கல் வழிபாடுகள்

26.07.2013 வெள்ளி பி.ப. 3மணி முதல் 6மணி வரை
**கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயம்**

27.07.2013 சனி-காலை 9.00 மணிமுதல் மாலை 5.00மணிவரை
**முல்லைத்தீவு புனித பேதுரு ஆலயம்**

28.07.2013 ஞாயிறு-காலை 9.00 மணிமுதல் மாலை 5.00மணிவரை
**இரணைமாதாநகர் செபமாலை அன்னை ஆலயம்**

இறைவனின் வல்லமையால் நோய், பிணிகள், கஷ்டங்கள், கவலைகள், அனைத்திலும் இருந்து விடுதலைபெற்று புதுவாழ்வு வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இறைதியானக்குழுவினருடன் இணைந்து
மறைக்கோட்ட முதல்வர், பங்குத்தந்தையர்கள்,
கிளி- முல்லை மறைக்கோட்டம்.

---

## உடற்பயிற்சி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்

கிரிக்கற், கால்பந்து, வலைப்பந்து மற்றும் அனைத்து விளையாட்டுக்களையும் பயிற்றுவிக்கக் கூடிய டிப்ளோமாதாரிகள் மற்றும் அனுபவமுள்ள உடற் பயிற்சியாளர்கள் தேவை.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவைபுரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

உணவு தங்குமிடம் என்பன வழங்கப்படும். சம் பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 30.07.2013**
**தொடர்புகளுக்கு:**
**தி.இராசநாயகம்**
**தலைவர்**
**மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**

(சி/11013)
(10,16,14) தொலைபேசி இல: 077 0604950, 021 4923118

---

## பனை அபிவிருத்திச் சபை
## கிளிநொச்சி-ஊற்றுப்புலம் மாதிரிப் பனந்தோட்டம்.

மேற்படி பனம் பண்ணையில் 15' விட்டமும் 15' ஆழமும் உடைய கிணறு ஒன்றும் 25' நீளமும் 22'× 6'' அகலமும் கொண்ட பண்ணைக் கட்டடம் (மலசல கூடமும் அடங்கலாக) ஒன்றும் அமைப்பதற்கான, தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து (இத்தாற் பதிவுடைய) கூறுவிலைகள் கோரப் படுகின்றன.

இதற்கான விரிவான கூறுவிலை விண்ணப்பங்களை ஆடிமாதம் 25 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரை பனை அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திலோ அல்லது யாழ்ப்பாணம், கண்டி வீதியிலுள்ள தேசிய வீடமைப்புச் செயலக கட்டடத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகத்திலோ பெற்று, பூரணப்படுத்தி ஆவணி 7ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கிடைக்கக் கூடியதாக தலைவர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர், பனை அபிவிருத்திச் சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C/11012)(3.6.11)

---

### க்கு உண்டு

சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். இடம்: A.K.R. கமம், கரடிப் போக்குச் சந்தி, கிளிநொச்சி. அறைகள்-05, ஹோல்-2, கார் கராஜ்-01,
(D.R.C 6 வருடங்களாக இயங்கிவந்த வீடு)
தகவல்களுக்கு: 077 44 66 802 (37490) (10,18,14)

---

## தவறிவிட்டது

T. நிதர்சன் ஆகிய எனது 792723047 V இலக்க NIC லைசன்ஸ் ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கைதடி பிள்ளையார் கோயிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து தவவும். (சன்மானம் வழங்கப்படும்)

(28906) T.P: 077 907 9888

---

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

---

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக பொன்விழா நிகழ்வை முன்னிட்டு
**அமரர் நல்லையா பரமேஸ்வரி**
ஞாபகார்த்தமாக நடத்தப்படும்

## மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி

எமது மேற்படி கழகத்தால் நடத்தப்படும் மரதன் ஓட்டப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் ஆண் வீரர்கள் எமது அலுவலகத்தில் காலை 9 மணிக்கும் பி.ப.2 மணிக்கும் இடையில் தங்கள் பெயர் விவரங்களை 30.07.2013 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இந்த மரதன் ஓட்டப் போட்டியானது 03.08.2013 சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

**பதிவுசெய்யும் வீரர்கள் காலை 5.30 மணிக்கு முன் நிலைய முன்றலில் சமூகம் தரவும்.**

சம்பியன் லேன், (சி/11019) நிர்வாகம்,
கொக்குவில். கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்.

---

## இது திசைகாட்டியில் மட்டுமே சாத்தியமாகும்

உணவு இருப்பிடம் இலவசம்-
ரிக்கட் இலவசம்-

கல்லூரியின் பெயர்-
sal inter national college
மலேசியா

**10**
பேருக்கே வாய்ப்பு

**கற்கை நெறி 2 மாதங்கள்**
**ஆண்கள் O/L, வயது:- 21-25**

வெறும் 375000 மட்டும் செலுத்தி மலேசியாவில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறியில் மாதாந்தம் 40000 சம்பாதிக்கலாம்(எழுத்து மூலமான உறுதிப்பாட்டுடன்)

சர்வதேச தரத்திலான சான்றிதழ் வழங்கப்படும்.
உடன் பயணம்
எல்ல நாட்களிலும் திறந்திருக்கும்

திசை காட்டி(பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



---

## வெற்றி நாயகர்களுக்கு நன்றி நவில்கின்றோம்




சமுர்த்தி என்னும் தீபம் மூலம்
எம் வாழ்வுக்கு
ஒளியேற்றி வைத்த



**அங்கஜன் இராமநாதன்**
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்
பிரதான அமைப்பாளர்-யாழ். மாவட்டம்)
அவர்களுக்கு
எமது மனமுவந்த நன்றியினைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
புதிதாய் நியமனம் பெற்ற
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்
உடுவில் பிரதேசம்.

(29903)(10,16,14)

---

## பதவி வெற்றிடம்

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள வர்த்தக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் விவரங்களோடும் மற்றும் கடல் கடந்து வாழும் உறவுகளின் பரிசுப் பொருள்களை உங்கள் இல்லம் நாடி வந்து சேர்க்கும் (Yarlolai.com & Giftsjaffna.com)என்ற நிறுவனத்துக்கு கீழ்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.

Administration Assistant (Male)
- Smart and Energetic
- Good educational background
- Hand on experience in MS Office
- Internet and Social Media
- Must Have Motor bike with valid driving licence.

Receptionist (Female)
- Good Communication skill knowledge on MS office packages knowledge of graphic designing is added advantage.

Delivery Boy

ஆர்வமுள்ளவர்கள் தங்களுடைய விவரங்களை admin@yarlolai.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது facebook.com/ yarlolai இன் ஊடாகவோ அனுப்பி வைக்கவும்.

**மேலதிக விவரங்களுக்கு**
(37638)
0774449394 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### கோத்தாவின் படத்துடன் தேர்தல் சுவரொட்டிகள்

வடமாகாண சபைக்கு முதல் முறையாகத் தேர்தல் இடம்பெறவுள்ளது. நாளை முதல் இதற்கான வேட்பு மனுத் தாக்கல்கள் ஆரம்பமாகவுள்ளன. இந்த நிலையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் ஒருவர் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளார்.

இதில் குறித்த வேட்பாளரின் படம் மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் படங்களுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் படமும் பொறிக்கப்பட்டுள்ளது.

அரச அதிகாரியான பாதுகாப்பு அமைச்சின் செயலரின் படம், அரசியல் கட்சியின் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றபோதும் குறித்த சுவரொட்டிகள் இன்னமும் அகற்றப்படவில்லை. யாழ். நகரின் பல பகுதிகளிலும் சர்வ சாதாரணமாக இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. (த-5)

### ரயில் நிலையத்துக்குஆனையிறவில் அடிக்கல்

தினராகக் கலந்து கொண்டு அடிக்கல் நட்டு புதிய ரயில் நிலையத்துக்கான நிர்மாணப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

போரின் காரணமாகச் சேதமடைந்த வடபகுதிக்கான ரயில் பாதை புதிதாக விஸ்தரிக்கப்பட்டு நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் வடபகுதியின் முக்கிய கேந்திர நிலையமான ஆனையிறவில் சகல வசதிகளுடனும் கூடிய ரயில் நிலையம் அமைக்கப்படவுள்ளது. இலங்கையில் வடமாகாணத்தைத் தவிர ஏனைய எட்டு மாகாணங்களிலுள்ள பாடசாலை மாணவ, மாணவிகள் , ஆசிரியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட சுமார் 15 மில்லியன் ரூபா செலவிலேயே புதிய ரயில் நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கடந்த 23 வருடங்களுக்கு முன்னர் ஆனையிறவு ரயில் நிலையம் அமைந்திருந்த அதே யிடத்திலேயே புதிய ரயில் நிலையமும் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதன் நிர்மாணப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவுபெறும். இன்றைய நிகழ்வில் எட்டு மாகாணங்களினதும் ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-5)

### இந்தோனேஷியக் கடலில் நேற்றுக் கவிழ்ந்தது படகு

மூலம் தப்பி உள்ளனர் என்றும் தெரியவருகிறது. நேற்று நள்ளிரவு வரை கிடைத்த தகவலின்படி இதுவரை 3 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். குறித்த படகில் 28 குழந்தைகள் இருந்தனர் என்றும் அவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

படகில் பயணித்தவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 180 பேரும், ஆப்கானைச் சேர்ந்த 28 பேரும் இருந்தனர். இவர்கள் சென்ற படகு இந்தோனேஷியாவில் இருந்து புறப்பட்டு 4 மணி நேரத்தின் பின்னர் பெரிய அலையால் தூக்கி எறியப்பட்டு பாறை ஒன்றுடன் மோதியது. அதில் சேதமடைந்தே படகு கவிழ்ந்தது. இது குறித்து தகவல் அறிந்த இந்தோனேஷிய கடற்படையினர் உடனடியாக மீட்புப் பணிக்காக சம்பவம் நடைபெற்ற இடம்நோக்கி விரைந்துள்ளனர். நேற்று நள்ளிரவு வரை இந்த விபத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த உறுதியான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. (ங -5)

### மாணவரை போதைக்குள் தள்ளிவிடும் சதி அம்பலம்

பில்சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள், பொலிஸில் முறைப்பாடு செய்வதற்கு தயங்குகின்றனர். முறைப்பாடுகள் செய்தால் தமக்கு ஏதாவது உயிர் அச்சுறுத்தல்கள் ஏற்படும் என்பதாலேயே அவர்கள் அவ்வாறு தயங்குவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் நகர்ப்புறப் பாடசாலைகள் மாத்திரமல்ல, கிராமப்புறப் பாடசாலை மாணவர்களும் இந்தப் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைச் சீரழிப்பதற்காக நன்கு திட்டமிட்டு இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதாகப் புத்திஜீவிகள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (த-5)

### விதவைப் பெண்கள் விவரம் யாழில் திரட்டும் இராணுவம்

வடமாகாண சபைத் தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் நிலையில், இராணுவத்தினர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உடுவில் ஆலடி வைரவர் கோயிலடிக்குச் சென்ற மானிப்பாய் இராணுவ அதிகாரிகள், மக்களிடம் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

விதவைப் பெண்கள், வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்கள் தொடர்பான குடும்ப விவரங்களையே அவர்கள் பதிவு செய்துள்ளனர்.

தேர்தலை இலக்கு வைத்தே இராணுவத்தினர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5-14)

### தேர்தல் விதிகளை மீறி நேற்றும் காணிக் கச்சேரி

ரென அதனை நிறுத்துமாறு முல்லைத்தீவு அரச அதிபர் உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து காணிக் கச்சேரிக்கு வந்திருந்த முஸ்லிம் மக்கள், பிரதேச செயலக ஊழியர்களுடன் முரண்பட்டுக் கைகலப்பு வரை நிலைமை சென்றதைத் தொடர்ந்து மீண்டும் காணிக் கச்சேரி நடத்தப்பட்டுள்ளது.

தேர்தல் விதிமுறை மீறலான இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு மக்களால் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு தெரியப்படுத்தப்பட்டும் இதனை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கடந்த வாரம் புத்தளத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கு காணிக் கச்சேரி நடத்தப்பட்டது.

வடக்கு மாகாணசபைக்கான வேட்பு மனுக் கோரல் அறிவிக்கப்பட்ட பின்னர் காணிக் கச்சேரி நடத்துவது தேர்தல் விதிமுறைகளை மீறிய செயற்பாடாகும்.

இதனால் காணிக் கச்சேரிகளை நிறுத்துமாறு தேர்தல்கள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் குறித்த நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான என்.வேதநாயகன் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் நேற்றுக் காலையும் காணிக் கச்சேரி அங்கு நடத்தப்பட்டுள்ளது. இதில் பங்கெடுப்பதற்காக புத்தளத்தைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் வந்திருந்தன.

மேற்படி தேர்தல் விதிமுறையை மீறிய செயற்பாடு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட மக்களால், தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும், முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று நண்பகல் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ந.வேதநாயகனால் காணிக் கச்சேரியை நிறுத்துமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த முஸ்லிம் மக்கள் கரைதுறைபற்று பிரதேச செயலக ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் நிலைமை கைகலப்பு வரை சென்றது. இதனையடுத்து மீண்டும் காணிக்கச்சேரியைத் தொடருமாறு அரச அதிபர் கூறியுள்ளார்.

தேர்தல் விதிமுறையை மீறிய இந்தச் செயற்பாட்டை முற்றாக தடுத்து நிறுத்த தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-5)

### நாளை முதல் வேட்புமனு தாக்கல்

திரம் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.15 மணி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். 25 ஆம், 26 ஆம், 29 ஆம், 30 ஆம், 31 ஆம் திகதிகள் வரையே இந்த நடைமுறை பின்பற்றப்படும்.

ஓகஸ்ட் முதலாம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மதியம் 12 மணிவரையே வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மூன்று மாகாணங்களிலும் உள்ளடங்கும் 10 மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்ட செயலகங்களில் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு தனியான இடமொன்று அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

**தேவை** அரைக்கும் ஆலை, ரயர் வேக்ஸ், மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு என்பவற்றில் அனுபவம் உள்ளவரும், பழகவிரும்புபவரும் தொலை தொடர்பு நிலையம் மாவறுத்தல், பொதியிடல் என்பவற்றுக்கு பெண் உதவியாளர்களும் தேவை. தொடர்பு:- பிருந்தா மில்ஸ், இல. 18, நல்லூர் ரோட், யாழ்ப்பாணம், T.P. 077 99 12304

### தேர்தலில் சர்வதேசக் கண்காணி...

வருமாறு,வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஐரோப்பிய குழுவிடம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளுகின்ற அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு ஏற்ற அரசியல் தீர்வை இந்த அரசு முன் வைக்கத் தயாராக இல்லை.

இன்று தமிழ்ப் பிரதேசங்களில் ராணுவ ஆதிக்கத்தை பலப்படுத்தி, ராணுவ ஆட்சியையே நடத்துகின்றது அரசு. சொந்த நிலங்களை இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்க மறுத்து ராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. இன அடையாளங்களையும் அரசு அழித்து வருகின்றது. நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் கூட சுதந்திரமாக நடைபெறுமா என்ற அச்சமான சூழலே இங்கு காணப்படுகின்றது.

எனவே சர்வதேசத் தேர்தல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெளிவாக விளக்கினோம்.இலங்கையில் தேர்தல் ஆணையம் கூட ஜனாதிபதியின் கீழ் உள்ளது. பொலிஸ், நிதி ஆணைக்குழுவும் ஜனாதிபதியின் கீழ்தான் உள்ளன. இதனால் சுதந்திரமான தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் எங்களுக்கு உள்ளது. இது குறித்து ஐரோப்பிய நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தினோம் –என்றார்.

இதேவேளை பிரிட்டன் நாடாளுமன்ற குழுவினர் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனைச் சந்தித்து அந்த மாவட்டத்தில் அபிவிருத்தி நிலைகள் குறித்து கேட்டறிந்தனர். அதன் பின்னர் முகமாலைப் பகுதியில் 'ஹலோட்ரஸ்ட்' நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டனர்.

இந்தக் குழுவினர் இன்று இறுதிப்போர் நடைபெற்ற முள்ளிவாய்க்காலுக்கு செல்லவுள்ளதுடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடிமர்ந்த மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6 -5)

## பணியாளர் தேவை

கீழே குறிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் தேவை.
(மிலே னியம் உல்லாசப் பயணிகள் விடுதி)
01. சமையலாளர் 02. காவலாளி 03. உணவு பரிமாறுநர்
04. சிட்டை எழுதுநர் 05. சமையல் உதவியாளர்.
குறிப்பு:- நேரில் வந்து இன்று(24.07.2013) காலை 8.30 இருந்து 12.00 மணி வரை சந்திக்கவும்.

76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.(கம்பஸ்வீதி, இராமநாதன் வீதி)

தொலைபேசி: 021 222 5876, 077 6016310

## மரண அறிவித்தல்



### தம்பிமுத்து சுந்தரலிங்கம்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சுந்தரலிங்கம் நேற்று (23.07.2013) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து -தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை -பாக்கியம் தம்பதியரின் மருமகனும், தெய்வேந்திரராணியின் அன்புக் கணவரும், சுபாசினி (பிரான்ஸ்), சுபாஸ்கரன் (பிரான்ஸ்), சதீஸ்கரன் (இலங் கை ), றஜீவ்கரன்(பிரான்ஸ்),ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன், பாலினி, சோபானா, அமிலா ஆகியோரின் அன்பு மாமனும், கரிஸ், கிசாந், சாருஜா, டிலக்சி, லக்சிகா, ஜதுரா, சாரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ராசய்யா, காலஞ்சென்ற ரத்தினம், பொன்னுத்துரை, காலஞ்சென்ற தில்லைராசா மற்றும் இராசதுரை, லோகேஸ்வரநாதன், நல்லைநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.07.2013) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நக்கா லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

**தகவல்:**
தெய்வேந்திரராணி(மனைவி)- 021 2231072,
சுபாசினி (மகள்) - 0033 0148381824,
சுபாஸ்கரன் (மகன்) - 0094071907
சதீஸ்கரன் (மகன்) - 0094077 9254067
றஜீவ்கரன்(ஜீவன், மகன்)- 0033 0951564918

## மரண அறிவித்தல்



### திருமதி சிவகுருநாதன் சிவபாக்கியலட்சுமி
(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்)

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் சிவபாக்கியலட்சுமி நேற்று (23.07.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை -சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுவாமிநாதன் சிவகுரு நாத னின் அன்பு மனைவியும், மயூரனின் அன்புத் தாயும், பாலசிங்கம் சிவமலர், சுந்தரேசன் சிவபாக்கியம்(நெசவு ஆசிரியர்), சிதம்பரப்பிள்ளை சிவராசா, குணேசன் சிவயோகம், சிதம்பரப்பிள்ளை விக்னேஸ்வரன், சிதம்பரப்பிள்ளை ஜெகதீஸ்வரன் (இத்தாலி), சந்திரசேகரம் சிவராணி(இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.07.2013) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உசன்,
மிருசுவில். 077 3755447

**தகவல்:**
சி. மயூரன்(மகன்),
சு. சிவபாக்கியம்(சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24/07/2013

## இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை, ஜூலை 24
பருத்தித்துறை குரும்பை கட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 2.30 மணி
வதிரி கலைமகள் விளையாட்டுக் கழகம் எதிர் திருநாவலர் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4 மணி
கரணவாய் விளையாட்டுக் கழகம் எதிர் இமையாணன் விளையாட்டுக் கழகம். (ற-34)

## அராலி பாரதி, செனிஸ்ரார் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 24
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் அராலி பாரதி விளையாட்டுக்கழகம், வட்டுக்கோட்டை செனிஸ்ரார் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணிக்கும், அராலி பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக்கழகம் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அராலி மாவத்தை விளையாட்டுக்கழக அணிக்கும் வட்டுக்கோட்டை செனிஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டுக்கோட்டை செனிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(ற-23)

### மட்டுவில் வளர்மதி கரப்பந்து தொடர்

## ஆவரங்கால் மத்தி, ஜொலிபைற்ஸ் சம்பியன்களாகத் தெரிவாகின

யாழ்ப்பாணம், ஜூலை 24
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றண.

'ஏ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியும், 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் அச்செழு ஜொலிபைற்ஸ் விளையாட்டுக்கழக அணியும் வெற்றி பெற்று சம்பியன்களாகத் தெரிவாகின.

முதலில் இடம்பெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது.

சிறந்த வீரனாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த செருபன் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் அச்செழு கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்செழு ஜொலிபைற்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அதில் அச்செழு ஜொலிபைற்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

சிறந்த வீரனாக அச்செழு ஜொலிபைற்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சுஜீவன் தெரிவானார். (ற-23)

### மட்டுவில் வளர்மதி உதைபந்துத் தொடர்

## அரியாலை ஐக்கியத்தை வீழ்த்தியது அன்ரனிஸ்



யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம், மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும், பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றதை அடுத்து வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்கான 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அதில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண்களுக்கான தலையணைச் சண்டைப் போட்டியில் உற்சாகமாக மோதிக்கொள்ளும் இளைஞர்கள். (ற-23)

## விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
சரவணை நாகபூசணி அம்மன் விளையாட்டுக் கழகம் தனது 8 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறும் ஆரம்ப நாள் நிகழ்வில் காலை 6.30 மணிக்கு சைக்கிளோட்டப் போட்டியும், முற்பகல் 9 மணிக்கு கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளன.

மறுநாள் காலை 9 மணிக்கு கயிறு இழுத்தல் போட்டியும், பிற்பகல் ஒரு மணிக்கு மாட்டு வண்டிச் சவாரியும் இடம்பெறவுள்ளன.

மாட்டு வண்டிச் சவாரி வ[illegible] மாகாண ரீதியாக நடத்தப்படவுள்ளதுடன், ஏனைய போட்டிகள் தீவகத்துக்குட்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்படவுள்ளன.

பங்குபற்றவிரும்புவோர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## ஜொனியன்ஸை வீழ்த்தி விக்ரோறி அபாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் பாலகிருஷ்ணன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண ''20/20'' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் விக்ரோறி விளையாட்டுக் கழக அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

கடந்தவாரம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்ரோறி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.


இதில் கபில்ராஜ் 18 ஓட்டங்களையும், ரட்ணம் 24 ஓட்டங்களையும், லவேந்திரா ஆட்டம் இழக்காமல் 38 ஓட்டங்களையும் அகிலன் ஆட்டம் இழக்காமல் 67 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் விக்ரோறி விளையாட்டுக் கழக அணி சார்பாக நகுலன், தனுஜன் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

161 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்ரோறி விளையாட்டுக்கழக அணி 16.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் சசி 27 ஓட்டங்களையும் கணேஸ் 63 ஓட்டங்களையும் கஜேந்திரன் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். (ற-23)

## வாகை சூடியது ஓல்ட்கோல்ட்ஸ்



யாழ்ப்பாணம், ஜூலை 24
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் பாலகிருஷ்ணன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான '20/20' கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் ஆட்டமொன்றில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

[illegible]துஷன் 32 ஓட்டங்களை [illegible] ஆட்டம் இழக்காமல் 44 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் பிரசாந் 2 இலக்கினையும் திலீபன், கோபி தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

192 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி 19.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 193 ஓட்டங்களை பெற்றது.

அதில் திலீபன் 64 ஓட்டங்களையும் நிரோஷன் 43 ஓட்டங்களையும் குகன் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் உமாதரன், முரளி, தீபன் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர். (ற-23)

## மென்பந்து கிரிக்கெட்டுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
இணுவில் கலையொளி மன்றம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கணேஸ்வரியம் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்களை தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோஞ்ஞே குற்றவாளியே

## 13 வருடங்களின் பின்னர் குற்றப்பத்திரிகை தாக்கல்




கடந்த 13 ஆண்டுகளுக்கு முந் தைய கிரிக்கெட் சூதாட்ட வழக் கில் குற்றப்பத்திரிகை தாக் கல் செய்யப்பட்டது. அதில் மறைந்த தென்னாபி ரிக்க வீரர் குரோஞ்ஞே குற்ற வாளியாக சேர்க்கப்பட்டார். 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியா, தென்னா பிரிக்கா அணிகள் மோதிய ஆட்டத்தில் சூதாட்டத்தில் ஈடு பட்டுனர் என்ற குற்றச்சாட்டில் தென்னாபிரிக்க அணியின் அப்போதைய அணித்தலை வர் குரோஞ்ஞே மற்றும் கிப்ஸ் உட்படப் பலர் புதுடில்லி பொலிஸாரிடம் சிக்கினர்.

ஆரம்பத்தில் குற்றச்சாட்டை மறுத்த குரோஞ்ஞே பின்னர் அணி தொடர்பாக தகவல் களை தெரிவிக்க ரூ. 18 லட் சம் பெற்றதை ஒப்புக் கொண் டார். அதையடுத்து அவ ருக்கு கிரிக்கெட் ஆட்டங் களில் பங்கேற்க வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்து ஒன்றில் குரோஞ்ஞே உயிரிழந்தார்.

தற்போது பிரீமியர் லீக் தொட ரில் இடம்பெற்ற சூதாட்டம் தொடர்பாக ஸ்ரீசாந்த், சண் டிலா, அங்கித் சவான் உட்பட 29 பேரை புதுடில்லிப் பொலிஸார் கைது செய் துள்ளனர். குறித்த வழக்கு களை விசாரிக்கும் புது டில்லி பொலிஸ் ஆணையா ளர் நீரஜ் குமார் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகின்றார்.

அதையடுத்து இதற்கு முன், இரண்டு வழக்குகளிலும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் பணிகள் முழுவீச் சில் நடக்கின்றன. இந்நிலை யில் குரோஞ்ஞே வழக்கில் நேற்றுமுன்தினம் புதுடில்லி நீதிமன்றில் 70 பக்க குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டது. அத்துடன் போன் பதிவு கள், வங்கி பரிவர்த் தனை,குரல் மாதிரி சோதனை விவரங்கள் என தனியாக 2 ஆயிரம் பக் கங்கள் அடங்கிய இணைப் பும் உடன் தரப்பட்டது.

அந்த அறிக்கையில் குரோஞ்ஞே மற்றும் தரகர்களான கிரு ஷண்குமார், சஞ்சீவ் சாவ்லா, ராஜேஷ் கல்ரா உட்பட மொத் தம் 6 பேர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். கிரிக் கெட் வீரராக குரோஞ்ஞே மட்டுமே இடம் பெற்றுள் ளார். நிக்கி போயே, கிப்ஸ் பெயர் இருந்தாலும் போதிய ஆதாரங்கள் இல்லாததால் குற்றவாளிகளாக சேர்க்கப் பட வில்லை. அத்துடன் இந் திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் அசாருதீன் உட்பட எந்த இந்திய வீரர்களின் பெய ரும் அதில் இடம்பெற வில்லை. ஆட்டத்தில் சூதாட்டம் நடந் ததற்கு போதிய ஆதாரம் இருந்தது. அதில் பல வீரர் கள் சிக்கினர். தென்னா பிரிக்காவில் நடந்த விசார ணையில் மோசமாக விளை யாட தலா ரூ. 18 லட்சம் பெற்றதை கிப்ஸ், போயே ஆகியோர் ஒப்புக் கொண் டிருந்தனர். எனினும் மர ணம் அடைந்த குரோஞ்ஞே மட்டும் தான் குற்றவாளி யாக சேர்க்கப்பட்டுள்ளார். இது 13 ஆண்டுகளாக இழு பட்டு வரும் வழக்கை முடி வுக்கு கொண்டு வரும் பொலி ஸாரின் முயற்சியாகவே தெரி கிறது. (ற)




# பிக்பாஷ் தொடரில் முரளிதரன்

பிக்பாஷ் லீக் தொடரில் மெல் பேர்ண் றெனிகேட்ஸ் அணி சார்பாக முத்தையா முரளி தரன் மீண்டும் இவ்வருட மும் பங்குபெறவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

41 வயதான முத்தையா முரளிதரன், கடந்தாண்டு மெல்பேர்ண் றெனிகேட்ஸ் அணி சார்பாக சிறப்பான பெறுபேறுகளை வெளிப் படுத்தியிருந்தார். அவ்வணி சார்பாக 11 இலக்குகளைக் கைப்பற்றி, அதிக இலக்குக ளைக் கைப்பற்றியவராகக் காணப்பட்டார்.

இந்நிலையிலேயே இவ்வாண் டும் அவ்வணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்ற முத்தையா முரளிதரன் ஒப் பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஆஸ்திரேலியாவில் புதிதாக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி யுள்ள சுழற்பந்து வீச்சாள ரான பாவத் அஹமட்டுடன் இணைந்து அவர் விளை யாடவுள்ளார்.

மெல்பேர்ண் றெனிகேட்ஸ் சார்பாக டெஸ்ட் பந்து வீச் சாளர்களான பீற்றர் சிடில், ஜேம்ஸ் பற்றின்சன் ஆகி யோரும் விளையாடவுள்ள னர்.

இதில், ஜேம்ஸ் பற்றின்சன் உபாதைக்குள்ளாகி, ஆஷஷ் தொடரிலிருந்து வெளியேற் றப்பட்டுள்ள நிலையில், பிக்பாஷ் லீக் தொடருக்கு முன் னதாக அவ்வுபாதையி லிருந்து குணமாகிவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. பிக்பாஷ் லீக் தொடர் எதிர் வரும் டிசெம்பர் 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.(ற)

# பற்றின்சன் ஆஷஸில் இல்லை

இங்கிலாந்தில் இடம்பெற்று வரும் ஆஷஷ் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பற்றின்சன் இனிமேல் பங் கெடுக்க மாட்டார் என அறி விக்கப்பட்டுள்ளது.

அவருக்கு ஏற்பட்டுள்ள முதுகு உபாதை காரணமாகவே அவர் பங்கெடுக்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி யின் முடிவின் பின்னர் ஜேம்ஸ் பற்றின்சன் தனது இடுப்பு, முதுகுப் பகுதிகளில் வலியை உணர்ந்ததாகவும் அதன் காரணமாக நேற்றைய தினம் ஸ்கான் பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டதா கவும் தெரிவிக்கப்படுகிறது. ஸ்கான் பரிசோதனைகளின் முடிவில் அவருக்கு உபாதை ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக் கப்பட்டதன் காரணமாக அவர் இங்கிலாந்தில் இடம்பெற வுள்ள எஞ்சியுள்ள 3 டெஸ்ட் போட்டிகளிலும் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப் படுகிறது.

இம்முறை ஆஷஷ் தொட ரில் 2 போட்டிகளிலும் பங்கு பற்றி 7 இலக்குகளைக் கைப் பற்றியுள்ள ஜேம்ஸ் பற்றின் சன், துடுப்பாட்டத்தில் ஓரளவு சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தார்.(ற)



# இனியும் வாய்ப்புண்டு - கிளார்க்

ஆஷஷ் கிண்ண கிரிக்கெட் தொடரை தமது அணி தற் போது வெற்றிகொள்வதற் கான வாய்ப்புக்கள் இன்ன மும் உள்ளது என்று ஆஸ்தி ரேலிய அணித்தலைவர் மைக் கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

தொடரின் இரண்டாவது போட்டியிலும் ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந் துள்ள நிலையில், மைக்கல் கிளார்க் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இதனைத் தாம் தெரிவித்த போது பலர் நகைத்தனர் என் றும் எனினும் அந்த நிலை யிலேயே தற்போதும் தாம் உள்ளார் என்றும் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி வீரர்க ளைப் போன்று ஆஸியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்க ளில் ஒருவரேனும் அரைச் சதம் ஒன்றைப் பெற முயற் சிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மூன்றாவது டெஸ்ட் கிரிக் கெட் போட்டியில் வெற்றி பெற சிறப்பாக செயற்பட வேண்டிய தேவையுள்ளது என்று தெரிவித்துள்ள கிளார்க், மூன்றாவது போட்டிக்கு முன்ன தாக சசக்ஸ் அணிக்கெதி ரான பயிற்சியாட்டத்தில் ஈடு படவுள்ளதாகவும் தெரிவித் தார். (ற)



# மழையால் வென்றது இலங்கை

தென்னாபிரிக்க அணியுட னான இரண்டாவது போட் டியை டக்வேர்த் லூயிஸ் முறையின் துணையோடு 17 ஓட்டங்களால் வென்றது இலங்கை.

நேற்று கொழும்பு பிரேம தாச மைதானத்தில் நடை பெற்ற இந்தப் போட்டி யில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெ டுத்தாட தீர்மானித்தது.

ஆரம்பத்திலேயே உபுல் தரங்கவை (3) இழந்தாலும் டில்சானும் சங்ககாரவும் பொறுப்போடு ஆடி அணியை மீட்க முயன்றனர். ஆயி னும் அவர்களின் இலக்கு கள் வீழ்த்தப்பட இலங்கை அணி சரிவை நோக்கிச் சென்றது. எனினும் ஒரு முனையில் இலக்குகள் சரிந்தாலும் மறுமுனை யில் அணித்தலைவர் சந் திமால் போராட்டத்தை வெளிப்படுத்தினர். இலங்கை அணி 49.2 பந் துப் பரிமாற்றங்கள் நிறை வில் 9 இலக்குகளை இழந்து, 223 ஓட்டங்களைப் பெற் றிருந்த போது மழை குறுக்கிட்டது.

இலங்கை அணி சார்பில் டில்சான், சந்திமால் ஆகி யோர் தலா 43 ஓட்டங் களையும், சங்ககார 37 ஓட்டங்களையும் பெற்ற னர். பந்து வீச்சில் மோர்னி மோர்கல் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

மழை காரணமாக தென்னா பிரிக்க அணி 29 பந்துப் பரிமாற்றங்களில் 176 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என நிர்ணயிக்கப் பட்டது. ஆயினும் இலங் கையின் பந்துவீச்சாளர் களின் அபார திறனால் தென்னாபிரிக்க அணி தடுமாறத் தொடங்கியது. 21 ஆவது பந்துப் பரிமாற் றத்தில் மீண்டும் மழை குறுக்கிட்டது. தொடர்ந் தும் மழை நீடித்ததால் டக்வேர்த் லூயிஸ் முறைப் படி வெற்றி தீர்மானிக்கப் பட்டது.அந்த முறைப்படி 21 ஆவது பந்துப் பரிமாற் றத்தில் 122 ஓட்டங்களை பெற்றாலே தென்னாபிரிக்கா வென்றிருக்க முடியும். ஆனால் அந்த அணி 5 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. இதனால் 17 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்ட நாயகனாக இலங்கை அணித் தலைவர் சந்திமால் தெரிவு செய்யப்பட்டார். (ங)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A/L 2015**
**தொழில்நுட்பவியல் பாடநெறிகள்**
* Engineering Technology
* Bio-Systems Technology
* Science for Technology
புதிய பிரிவுகள் ஆரம்பம்
15 வருட அனுபவம் வாய்ந்த பிரபல விரிவுரையாளர்களின் ஒன்றிணைந்த சேவையில்
பதிவுகளுக்கு முந்துங்கள்
Mind Vision Technology CAMPUS
No-4, Clock Tower Lane, Jaffna.
077 933 93 53

**இதுவல்லவோ புதுமை**
பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி, ஹொலன்ட், இத்தாலி

10 நாள்களில் சட்டரீதியாகச் செல்ல சட்ட ஆலோசனை
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:021 221 9016 - 021 568 9090

## அறிவித்தல்

**காலஞ்சென்ற சட்டத்தரணி செ.இராமலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட உறுதிகளை ஒப்படைத்தல்.**

காலஞ்சென்ற மல்லாகம் சட்டத்தரணி செ.இராமலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட சில உறுதிகள், வழக்குகள் தொடர்பான ஆவணங்கள் உரிமையாளர்களால் இன்னும் பெற்றுக்கொள்ளப்படாமல் உள்ளன. அத்தகையோர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி உறுதிகளைப் பெற்றுக் கொள்ள கீழ்க்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி எண்**
**0773230033**
(29907)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**காணி குத்தகைக்கு**
யாழ்ப்பாணம், கண்டி வீதி, இல.346, (அரஸ்கோ கம்பனிக்கு முன்னால்) 9 பரப்பு வெற்றுக்காணி குத்தகைக்கு விடப்படும். தொடர்புகளுக்கு:- 0776365791- 021 222 7878


## Rank List-Chemistry

NEW SCIENCE HALL

வெக்டர் பொ.வேலாயுதம் ஆ.மகாதேவன் ஆகியோரின் ஞாபகார்த்த மாதாந்தத் தொடர் போட்டிப்பரீட்சை.
வெற்றி நிச்சயம் - 1

Sivathiran **2014 - A/L** Dias

| NO | FULL NAME | SCHOOL NAME | DISTRICT | STREAM | MEDIUM | MARKS | RANK |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ABIRAMY SOTHITHASAN | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 90 | 1 |
| 2 | P.DARUKEESAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | E.M | 87 | 2 |
| 3 | MATHUMAI THEVAMANOHARAN | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 83 | 3 |
| 4 | PAVALAKANTHAN PIRATHEES | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 82 | 4 |
| 5 | KETHEESWARAN KOWSHIKAN | J/ARUNODAYA COLLEGE | JAFFNA | BIO | T.M | 82 | 4 |
| 6 | N.THANUSHANTH | UVARMALI VEVAKANANDA COLLEGE | TRINCO | - | T.M | 81 | 6 |
| 7 | T.ARUNAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 80 | 7 |
| 8 | MUTHULINGAM ANUJAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 80 | 7 |
| 9 | NARMATHA THIRUGNANASELVAN | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 79 | 9 |
| 10 | SHYTHAKY JEYARAJAH | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 79 | 9 |
| 11 | I.MAYURATHAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 79 | 9 |
| 12 | M.SHEETHARAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 78 | 12 |
| 13 | ABIVARSHI KANAGARAJAH | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | MATHS | T.M | 77 | 13 |
| 14 | MAHENDREN SUTHARSAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 76 | 14 |
| 15 | B.GUNAVARAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | E.M | 75 | 15 |
| 16 | MAHENTHIRAN BUVENTHIRAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | E.M | 75 | 15 |
| 17 | M.THARUSHIHAN | MANIPAY HINDU COLLEGE | JAFFNA | BIO | E.M | 74 | 17 |
| 18 | KULENTHIRARAJAH KOBISHANTH | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | E.M | 73 | 18 |
| 19 | JAANAKY RAJARATNAM | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 72 | 19 |
| 20 | CHANTHIRAKUMAR THANASEYAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 72 | 19 |
| 21 | C.MAHINTHAN | J/ST.JOHNS COLLEGE | JAFFNA | BIO | T.M | 72 | 19 |
| 22 | C.THILAKSI | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | MATHS | E.M | 71 | 22 |
| 23 | R.NIROJAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 71 | 22 |
| 24 | THARSHIKA SATHIYATHASAN | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 70 | 24 |
| 25 | R.SAKEEPAN | - | TRINCO | - | T.M | 70 | 24 |
| 26 | KIRUSHNAPILLAI PIRIYANGAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 70 | 24 |
| 27 | KIRSHIKA.K | KOKUVIL HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 70 | 24 |
| 28 | P.DENESHAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | E.M | 69 | 28 |
| 29 | KUGANATHAN KOWSIKAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | E.M | 69 | 28 |
| 30 | ANOSHA.I | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | MATHS | E.M | 69 | 28 |
| 31 | NIVETHIKA BASKARAN | J/CHUNDIKULI GIRLS COLLEGE | JAFFNA | BIO | T.M | 69 | 28 |
| 32 | NITHUSHA | J/CHUNDIKULI GIRLS COLLEGE | JAFFNA | BIO | T.M | 69 | 28 |
| 33 | RAJAHRAM THADCHAYINI | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 69 | 28 |
| 34 | ANOYA.T | KOKUVIL HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 69 | 28 |
| 35 | KANAGARAJAH PAVALAYAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 68 | 35 |
| 36 | THADSAJINI VIGNESWARAN | KOKUVIL HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 68 | 35 |
| 37 | T.PIRANAVI | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 68 | 35 |
| 38 | S.MOHAMED AHSAAN | - | TRINCO | - | T.M | 68 | 35 |
| 39 | M.MIROSHAN | KOKUVIL HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 67 | 39 |
| 40 | SANMUGARATHINAM SIVAKANTHAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 67 | 39 |
| 41 | V.KOKULAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 67 | 39 |
| 42 | GANESWARAN GABILAN | J/HARTELY COLLEGE | JAFFNA | MATHS | T.M | 67 | 39 |
| 43 | P.VAIGUNTHAN | J/HARTELY COLLEGE | JAFFNA | MATHS | T.M | 67 | 39 |
| 44 | M.AATHMIKA | J/HINDU LADIES COLLEGE | JAFFNA | MATHS | E.M | 66 | 44 |
| 45 | KUMARARATNAM UMASUTHAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 66 | 44 |
| 46 | MIKUNTHAN THUMILAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 66 | 44 |
| 47 | JATHUSHNA ARUNAKIRIVASAN | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 66 | 44 |
| 48 | V.SHARMIYA | T/SRI SHANMUGA LADIES COLLEGE | TRINCO | - | T.M | 66 | 44 |
| 49 | E.BANUVARAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 66 | 44 |
| 50 | ASHOKUMAR THIRUVENTHAN | JAFFNA HINDU COLLEGE | JAFFNA | MATHS | T.M | 65 | 50 |
| 51 | K.VARATHEES | KNILINOCHCHI CENTRAL COLLEGE | KILINOCHCHI | MATHS | T.M | 65 | 50 |
| 52 | SHAWYA GAJARAHANAN | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 65 | 50 |
| 53 | SARANGA SABHANAYAKAM | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 65 | 50 |
| 54 | VENEKA LOGENTHIRAN | KOKUVIL HINDU COLLEGE | JAFFNA | BIO | T.M | 65 | 50 |
| 55 | ROSANYA MAKADAVEN | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 65 | 50 |
| 56 | ARCHCHANA SIVARASA | J/VEMBADI GIRLS HIGH SCHOOL | JAFFNA | BIO | T.M | 65 | 50 |
| 57 | M.N.WASEEM FAIROAJ | - | TRINCO | - | T.M | 65 | 50 |
| 58 | S.LAKSHIKA | T/SRI SHANMUGA LADIES COLLEGE | TRINCO | - | T.M | 65 | 50 |



# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை கணேசரத்தினம்

*(கப்பல் அங்கிள்)*

பூநகரி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கணேசரத்தினம் (கப்பல் அங்கிள்) அவர்கள் 21.07.2013 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-மலர்மணி (பூநகரி-நல்லூர்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா-மனோன்மணி (இருபாலை-கோப்பாய்) தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், சுரேஸ்கண்ணா (சுரேஸ்-கனடா), சுதர்சினி (சுஜா-ஆஸ்திரேலியா), சுவர்ணி (சுபா-லண்டன்), சுகந்தினி (சுமி-கிளிநொச்சி) ஆகியோரின் அருமைத் தந்தையும், பத்மநாதன் கனகராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை-கிளி/மத்திய கல்லூரி), காலஞ்சென்ற கணேசராசா ஆகியோரின் அன்பு சகோதரரும், விஜிதா (கனடா), காலஞ்சென்ற தவச்செல்வன் (ஆற்றாளன்) மற்றும் மகிந்தன் (லண்டன்), டெனிஸ் ஜெரோ (கிளிநொச்சி) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் வேலுப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சதாசிவம், ஆறுமுகம், அம்பிகையம்மா ஆகியோரின் பெறாமகனும், திருமதி பொ.நாகரத்தினம், காலஞ்சென்ற கிருஷ்ணநாதன் ஆகியோரின் மருமகனும், பத்மநாதன் (கிளிநொச்சி), கமலாம்மா, ராசாத்தி, காலஞ் சென்ற வேல்முருகன் ஆகியோரின் மைத்துனரும், பாமினி (நோர்வே), ஷாலினி (இந்தியா), நிவேதினி, சஞ்ஜீவன் (மலேசியா), கேஜினி ஆகியோரின் பாசமிகு மாமனும், காமிதன் (கனடா), சமிட்ஷா (கனடா), அக்ஷயா (கனடா), தமிழினி (ஆஸ்திரேலியா), பிறைஜினி (ஆஸ்திரேலியா), சதீஸ் (லண்டன்), மதீஸ் (லண்டன்) ஆகியோரின் செல்லப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநகரில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (24.07.2013) பி.ப 3 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 61, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.**
**பத்மநாதன் - 077 071 1894**
**கனகராணி - 077 255 5479**

(சி/10590) (10.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தன்னைக் காயப்படுத்திக் கொள்ளாமல் எந்த மனிதனும் முன்னேற முடியாது. ஏனெனில் கல்லும் அவனே; சிற்பியும் அவனே.

–அலெக்ஸி கேரல்

# புதன் பொய்கை

A

உதயன் | ஜூலை 24 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# அமெரிக்கப் படைகளின் பயிற்சிகளின் பின்னணி

இலங்கை உட்பட ஐந்து தெற்காசிய நாடுகளில் அமெரிக்க சிறப்புப் படையினர் நிலைகொண்டுள்ளதாக அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகனின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்

■ மில்லர்

திருகோணமலையில் இலங்கை அரச படைகளின் சிறப்புப் படைப்பிரிவுகளுடன் இணைந்து அமெரிக்க சிறப்புப் படைப்பிரிவினர் நடத்தும் பயிற்சிகள் முடிவுக்கு வந்துள்ளன. திருகோணமலை டொக்யார்ட்டில் உள்ள இலங்கை கடற்படையின் சிறப்பு படகு அணியின் தலைமையகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி, கடந்த 2ஆம் திகதி ஆரம்பமானது. அமெரிக்க கடற்படையின் சிறப்புத் தாக்குதல் அணியான சீல் மற்றும் சிறப்பு படகு அணிகள், அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த 10 அதிகாரிகள், 'பிளாஸ் ஸ்ரைல்' என்ற இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றனர். இவர்கள் இலங்கை கடற்படையின் சிறப்பு படகு அணி, அதிவேகத் தாக்குதல் படகு அணி, சுழியோடிகள், துரித நடவடிக்கை மற்றும் மீட்பு அணிகள் மற்றும் இலங்கை விமானப்படையின் சிறப்புப் படைப்பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த படையினருக்கும் பயிற்சிகளை அளித்துள்ளனர். மனிதாபிமான உதவி, இடர் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகளையே அமெரிக்க சிறப்புப்படையினர் அளித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தின் சிறப்புப் படைப்பிரிவுகள் இந்தப் பயிற்சியில் சேர்க்கப்படவில்லை.

இலங்கை இராணுவம் இறுதிப் போரில் உரிமை மீறல்களை செய்துள்ளதாகவும் அதற்கு எதிராக ஐ.நா வின் மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா பிரேரணை சமர்ப்பித்து இலங்கையை போர்க் குற்றவாளியாக்கப் போகின்றது என்பது இன்று யாவரதும் எதிர்பார்ப்பு. அதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

இலங்கை இராணுவத்துக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தும் என்று எதிர்பார்க்கின்ற தரப்பினருக்கு தெரியாத ஒரு செய்தி இலங்கை படைகளுக்கு பயிற்சி கொடுப்பதன் ஊடாக நிரூபிக்கப்படுகின்றது. அதாவது இலங்கை இராணுவத்துக்கு அமெரிக்க இராணுவம் வழங்கும் இராணுவப் பயிற்சிகள் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பீடத்தின் படை அதிகாரிகள் குழுவொன்று வவுனியா பிரதேசத்தில் இலங்கை படையினருக்கு பயிற்சிகளை அளித்துள்ளது. பூ ஓயாவில் உள்ள இலங்கை இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு முகாமில் இந்த கூட்டுப்பயிற்சி இடம்பெற்றுள்ளது.

5 நாள் வரை இடம்பெற்ற இந்தப் பயிற்சியில், இலங்கை இராணுவத்தின் பொறியியல், மருத்துவப் படைப் பிரிவு மற்றும் ஆயுத தளபாட தொழில்நுட்பப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமான இலங்கைப் படையினர் பங்கேற்றனர்.அமெரிக்காவின் 18ஆவது மருத்துவப் படைத்தலைமையகம், பசுபிக் விமானப்படை, பசுபிக் பிராந்திய பொதுசுகாதார தலைமையகத்தின் மிருக மருத்துவ நிபுணர்கள், 8ஆவது அரங்க உதவித் தலைமையகத்தின் வெடிபொருள் நிபுணர்கள் இலங்கை படையினருக்குப் பயிற்சிகளை அளித்துள்ளனர். இது தவிர இலங்கை இராணுவத்திற்கு இன்றும் ஆயுத தளபாடங்களை வழங்கிக் கொண்டிருக்கும் அமெரிக்கா, போர் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது இலங்கை இராணுவத்தின் ஆயுதக் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்தது என்பதை மக்கள் மனதில் நிறுத்தினால் இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமுள்ள உறவு பற்றி தெரிந்து கொள்ளலாம். அத்துடன் இன்று கொண்டு வரப்படுகின்ற பிரேரணைகள் போர் மீறல்கள் பற்றியவை அல்ல என்பதையும் இலங்கையில் தான் பதித்துள்ள காலை நிரந்தரமாக வைத்துக் கொள்வதற்கானது என்பதையும் அறிந்து கொள்ளலாம்.





இலங்கை உட்பட ஐந்து தெற்காசிய நாடுகளில் அமெரிக்க சிறப்புப் படையினர் நிலைகொண்டுள்ளனர் என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகனின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். பயங்கரவாத எதிர்ப்பு ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தினால் பணிகள் நிலைகொள்ளச் செய்யப்பட்டுள்ளன என்று அக்கட்டளைப் பீடத்தின் அட்மிரல் றொபர்ட் வில்லார்ட் தெரிவித்தார். நேபாளம், பங்களாதேஷ், இலங்கை, மாலைதீவு, இந்தியா ஆகிய [illegible] களில் பசுபிக் உதவி அணிகள் [illegible] விசேட படையினர் நிலைகொண்டுள்ளதாக அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையொன்றின்போது அவர் கூறினார்.

2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் மோதல் மற்றும் அரசியல்ரீதியில் பலமான நிலையில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு அமெரிக்கா இலங்கைக்கு உதவியதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் அண்மையில் தகவல் வெளியிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதியன்று கடற்புலிகளால் இலங்கை கடற்படையினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில்5படையினர்கொல்லப்பட்டதுடன் 15 பேர் வரை காணாமல் போயினர். இதனையடுத்து அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு தகவல் அனுப்பியுள்ள அப்போதைய அமெரிக்கா தூதர் றொபட் ஓ பிளேக், விடுதலைப்புலிகளை தோற்கடிக்கவும் அவர்களின் போர்க் கட்டுமாணங்களை கண்காணிக்க விசேட ரேடார் கருவியை வழங்க அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அத்துடன் விடுதலைப் புலிகள் தோற்கடிக்க முடியாத அளவில் மிகவும் வலிமையாக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தமையை பிளேக் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, குறித்த ரேடாரை இய[illegible] பயிற்சிகளை வழங்க அமெரிக்காவின் குழு ஒன்றும் இலங்கைக்கு அனுப்பப்படும் என்றும் பிளேக் தமது தகவலில் தெரிவித்திருந்தார். அத்துடன் விடுதலைப் புலிகளின் தாக்குதல் படகுகளை அழிப்பதற்கான புஸ்மாஸ்ட்டர் என்ற ஆயுதத்தை வழங்க, அப்போதைய இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை வாஷிங்டனுக்கு அனுப்புமாறும் பிளேக் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய விடம் கோரியிருந்தனர் என்று விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கை விடயத்தில் அமெரிக்கா காட்டிவரும் அதிக அக்கறை குறித்து இப்போது பல மட்டங்களிலும் பேச்சு எழுந்துள்ளது. திடீரென அமெரிக்கா இலங்கை விடயத்தில் காட்டும் இந்தக் கடும்போக்கு சர்வதேச மட்டத்திலும் இலங்கைக்குப் பெரும் தலையிடியையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. அமெரிக்காவின் சொல் கேட்டு இப்போது ஐரோப்பிய நாடுகளும் இலங்கையுடன் கடும் போக்காக நடந்துகொள்கின்றமை பெரும் சிக்கலை உண்டுபண்ணியிருக்கிறது.

அமெரிக்காவினதும் ஐரோப்பிய நாடுகளினதும் இந்தக் கடும் போக்குக்குக் காரணம் இல்லாமல் இல்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் சரி, இலங்கையின் மனித உரிமை விடயத்திலும் சரி இந்த நாடுகளால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் இலங்கை மிகச் சாதாரணமாக எடுத்து உதாசீனம் செய்து கிண்டலடித்து வருகின்றமையே இந்த நாடுகளின் அழுத்தம் இலங்கை மீது அதிகரிப்பதற்குக் காரணம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதல் அவரது அமைச்சர்கள் மற்றும் அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் அமெரிக்காவையும் ஐரோப்பிய நாடுகளையும் பற்றி வெளியிடும் கருத்துக்கள், முன்வைக்கும் விமர்சனங்கள் ஆகியனவும் இந்தக் கடும் போக்குக்கு மற்றொரு காரணம் எனலாம். குறிப்பாகத் தீர்வு விடயத்தில் மேற்குலக நாடுகள் வழங்கும் ஆலோசனைகளை முன்மொழிவுகளை இலங்கை அரசு தட்டிக்கழித்து வருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட அண்மைக்கால தமது உரைகளில், இனப் பிரச்சினைக்கான தீர்வை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடியாது. உள்நாட்டிலேயே தீர்வு எட்டப்பட வேண்டும். அதை எப்படி எட்டுவது என்பது எமக்குத் தெரியும். பயங்கரவாதத்தைத் தோற்கடித்த எமக்கு தீர்வை எட்டுவது பற்றிக் கற்பிக்க யாரும் முற்படக்கூடாது. அதற்கு நாங்கள் செவி சாய்க்கமாட்டோம் என்று கூறிவருகிறார். இதே கருத்துக்களையே அமைச்சர்களும் அடிக்கடி வெளியிடுகிறார்கள். அரசின் இந்த விடாப்பிடி மேற்குலக நாடுகளின் தலைமைகளை பெரும் விசனத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவுக்கு இலங்கை அரசின் இந்த தட்டிக் கழிப்பு அடியோடு பிடிக்கவில்லை. அதனால்தான் அது இப்போது தன் வேலையை காட்டத் தொடங்கியிருக்கிறது. அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் அதன் அரசியல் சித்தாந்தமும் இதுவென்றே சொல்லலாம். அதாவது தனது சொல்லைக் கேட்டு அதன்படி நடந்துகொள்ளாத நாடுகள் மீது பொருளாதாரத் தடை மற்றும் அரசியல் ரீதியான பலமான அழுத்தங்கள் ஆகியவற்றை பிரயோகித்து அந்த நாடுகளைத் தன் வழிக்குக் கொண்டு வரும் பொறிமுறையில் அமெரிக்கா கை தேர்ந்துள்ளது. அதற்கும் மேலாக முரண்டு பிடிக்கும் நாடுகளை தனது படைகளைக் கொண்டு அடக்குவதற்கான அதிகார பலமும் அதனிடம் உள்ளது.

தனது இந்த நடவடிக்கைக்கு ஏனைய மேற்குலக நாடுகளையும் இணங்க வைக்கும் தந்திரமும் அமெரிக்காவுக்கு நன்கு தெரியும். இதனால் அமெரிக்க எதை எடுத்தாலும் அதற்கு பெரும்பாலான மேற்குலக நாடுகள் கை உயர்த்திப் பச்சைக் கொடி காட்டிவிடும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபணுக்களும் உடல்பருமனை தூண்டுகின்றன


ஒபேசிட்டி (Obesity) எனப்படும் அதிகப்படியான உடல் பருமனுக்கு பின்னணியில் இருக்கும் குறிப்பிட்ட மரபணுக்களை லண்டன் ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

உலக அளவில் ஆறில் ஒருவருக்கு அளவுக்கு அதிகமாக உடல் பருமனாகும் ஆபத்திருப்பதாக சர்வதேச மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய அதிகப்படியான உடல் பருமன் காரணமாக மாரடைப்பு உள்ளிட்ட உயிர்கொல்லி நோய்கள் முதல், டயபட்டீஸ் எனப்படும் ஆயுள் முழுவதும் நீடிக்கும் நீரிழிவுநோய் வரை பல்வேறு வகையான நோய்கள் மற்றும் ஆரோக்கிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

உலக அளவில், குறிப்பாக பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளிலும், இந்தியா போன்ற வேகமாக பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் அதிகரித்த உடல் பருமன் என்பது மிகப் பெரும் சுகாதாரப் பிரச்சினையாக மாறி வருகிறது.

அதிகரித்த உடல்பருமன் என்பதன் பின்னணியில் மரபணுக் காரணிகள் இருப்பதாக ஏற்கெனவே சில ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எப்.டி.ஓ. என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் குறிப்பிட்ட மரபணுவின் சில வகைகள் இருப்பவர்களுக்கு மற்றவர்களைவிட வயிறு பெரிதாக இருப்பதாக ஏற்கெனவே ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் இந்த மாற்றமடைந்த எப்.டி.ஓ. மரபணுவுக்கும் வயிறு பெரிதாக இருப்பதற்கும் என்ன தொடர்பு என்பது இதுவரை சரியாகக் கண்டுபிடிக்கப்படாமல் இருந்து வந்திருக்கிறது.

தற்போது லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் இருக்கும் ஆய்வாளர்கள் இந்த தொடர்புக்கான காரணியை கண்டறிந்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். மனிதர்களின் பசியைத் தூண்டும் நொதிமத்தின் பெயர் க்ரெலின். பசியைத்தூண்டும் இந்த க்ரெலின் என்கிற நொதிமத்தை இந்த எப்.டி.ஓ. என்னும் மரபணுக்கள் சுரக்கின்றன. சிலருக்கு இது அதிகம் சுரப்பதுதான் அவர்களை அதிகம் சாப்பிடத்தூண்டுவதாகவும், அதன் விளைவாக அவர்கள் அதிக



பருமனும் உடல் எடையும் உள்ளவர்களாக மாறுவதாகவும் இந்த ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

மரபணுக் காரணிகள் தவிர கொழுப்புச் சத்துள்ள உணவும் முக்கிய பிரச்சினை.

மனிதர்கள் அனைவரிடமுமே மரபணுக்கள் இருக்கின்றன. மனிதக் கரு உருவாகும் போது தந்தையிடமிருந்து ஒருபகுதி எப்.டி.ஓ. மரபணுவும், தாயிடமிருந்து ஒருபகுதி எப்.டி.ஓ. மரபணுவும் குழந்தைக்குக் கொடுக்கப்படுகிறது. இதில் ஏதாவது ஒரு பகுதி எப்.டி.ஓ. மரபணுவில் குறைபாடு இருந்தால் பெரிய பிரச்சினையில்லை. ஒருவேளை தாய் தந்தையிடமிருந்து

**மரபணுக் காரணிகள் தவிர கொழுப்புச் சத்துள்ள உணவும் முக்கிய பிரச்சினை. மனிதர்கள் அனைவரிடமுமே மரபணுக்கள் இருக்கின்றன. மனிதக் கரு உருவாகும் போது தந்தையிடமிருந்து ஒருபகுதி எப்.டி.ஓ. மரபணுவும், தாயிடமிருந்து ஒரு பகுதி எப்.டி.ஓ. மரபணுவும் குழந்தைக்குக் கொடுக்கப்படுகிறது.**

குழந்தைக்கு அளிக்கப்படும் இரண்டு எப்.டி.ஓ. மரபணுக்களின் பகுதிகளுமே குறைபாடு உடையவையாக இருந்தால் இரண்டு குறைபாடுடைய எப்.டி.ஓ. மரபணுவின் பகுதிகளுடன் பிறக்கும் குழந்தைக்கு இயற்கையிலேயே பசியைத் தூண்டும் க்ரெலின் நொதிமம் அதிகம் சுரக்கும் என்பதால் அந்த குழந்தைகள் கூடுதலாக சாப்பிடக்கூடிய இயல்புடன் இருக்கும். இதுவே பிற்காலத்தில் அதிக உடல் எடை பிரச்சினையாக மாறும் என்றும் இந்த ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.


இவ்வாறானவர்களுக்கு, பசியைத்தூண்டும் நொதிமமான க்ரெலின் சுரப்பை குறைக்கவல்ல புரோட்டீன் சத்து அதிகம் இருக்கும் உணவுகள் சாப்பிடக்கொடுப்பது அவர்களின் உடல் எடையை குறைக்க உதவும் என்றும் இவர்கள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த ஆய்வின் முடிவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கூறும் சென்னையில் இருக்கும் உணவியல் நிபுணர் கௌசல்யாநாதன், புரதச்சத்து அதிகம் உள்ள உணவை சாப்பிடுவதன் மூலம் தேவைக்கு அதிகமான உடல்பருமனுடன் இருப்பதைக் கட்டுப்படுத்தலாம் என்று யோசனை தெரிவித்தார். ★

---

# மனம்

துஷி



அலைந்து அலைந்து களைத்துக் கிடக்கிறது மனித மனம். எதற்காக என்றே தெரியாத, காட்டு நாய்த்தனம்...! வன்மம், கோபம், ஏமாற்றம், விரக்தி, ஆசை, கவலை, இன்பம், சோகம், மகிழ்ச்சி என்றெல்லாம் மாறி மாறி மோதிய அலையில், மனதின் ஓரங்களில் அப்பிக் கிடக்கிறது உப்புப்பாளங்கள். அடித்தவனை கடிக்கப்பார்க்கும் ஆவேசம் – அறியாமல், காலை மிதித்தவனை நசுக்கி வைக்கும் மிருகரோஷம் மண்டிக் கிடக்கிறது. இதிலிருந்து எப்படி விடுபடப் போகிறான் மனிதன்?

விடுபடுவதையோ, விரயப்படுவதையோ உணராத உன்மத்த மனம்... 'சுய அறிதல்' இன்றி, மனம் இன்றி கரைந்து கொண்டிருத்தலைத் தடுத்துக் கரை சேர வழி காணவே இருப்பது பிறவிப்பயன்.!

இந்த உலகின் தூய்மை அழிந்து கொண்டே போகிறது. பொய்மையும், பொய்யான, போலியான வேடமும், எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியிலும், மனிதன் களங்கப்படவே செய்கிறான். மனநிம்மதியை, அமைதியை இழந்து அல்லல்படுவதற்குக் காரணம் ஆசை, பேராசை. இதில் இருந்து விடுபட்டாக வேண்டும். அவனை விடுவிக்கும் ஆற்றல் வேறு எந்த சக்திக்கும் இல்லாத நிலையில் 'தியானம்' ஒன்றே ஆற்றல்மிக்கதாக விளங்குகிறது. அழிகின்ற உடல் அழிவற்ற 'ஆன்மா'.


ஒவ்வொரு மனிதனுள்ளும் ஓர் ஆன்மா. இதனை உணர்வதன் மூலமே அவன் இருளிருந்து மீள முடியும். இதன்மூலமே அவன் தன்னை உணர முடியும். அன்பு அழிந்து சகோதரத்துவம் ஒழிந்து மனிதநேயம் குறைந்து மனிதனையே மனிதன் நம்ப முடியாத நிலையில் மனிதனை மனிதன் கொல்வதில்– வக்கர சுகம் காண்பதில் வளர்ந்து கொண்டிருக்கிறான்.

ஐம்புலன்களும் கட்டவிழ்ந்து அலைகிறது. அதற்கு அடிமையாகி இழுத்த இழுப்புக்கெல்லாம் இணங்கிக் கிடக்கிறான். பேராசையின் விளைவால் தனது ஒவ்வொரு குற்றத்தையும் நியாயப்படுத்துகிறான். இதிலிருந்து விடுபட, தீய செயல்– தீய எண்ணங்களில் இருந்து 'விடுதலை' பெற வேண்டும். அதற்கு தியானம் அவசியம். இதனை அடைய பொருள் சார்ந்த இந்த உலக நிலை உதவாது. தியானமே அதனைக் கைகொள்ள, மேற்கொள்ள மிகச்சிறந்த வழியாகும். சக்தி முழுவதும் ஒன்று திரட்ட வேண்டும். மனிதனுள் வாழும் தீமையை ஒழித்தால் துன்பம் தொலையும். துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்று அறிதல் வேண்டும்.

'நான் யார்?' என்று உன்னையே கேட்டுப்பார் என்கிறது சமயத் தத்துவம். நான் யார் என்று ஆராய்ந்து மனிதன் துன்பங்களை வெல்லும் போராட்டத்துக்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். 'நான்' என்பது கண் முன் தெரியும் புறத்தோ[illegible] அல்ல. ஆடை அணிந்[illegible] பார்வைக்கு இரம்மியமாய் காணும் புறநிலை அல்ல. அதற்கும் அப்பால் ஊடுருவிப் பார்த்தால் ஐம்புலன்களின் அவலத்துக்குக் கட்டுப்படாமல் தலைவிரித்து ஆடாமல் பதவி அந்தஸ்து பொருள் சார்ந்த வாழ்வு என்கிற தீயவைகளை வென்று நிற்கும் நிலையே 'நான்'.


அந்த 'நான்' ஒரு பிரகாசமான தெய்வீக ஒளி. அந்த ஒளி நிலையிலிருந்து வல்லமைமிக்க பரமாத்மாவுடன் தொடர்பு கொள்வதே மனிதனின் இருளை நீக்கும். தன்னைப் பற்றிய உண்மை நிலையை உணரவைக்கும். ஒவ்வொருவரும் ஓர் 'ஆன்மா' என்ற உணர்வை ஓங்கச் செய்தல் வேண்டும். அத்தகையதொரு மன வளத்தை அடைய வேண்டுமானால், சலசலப்புமிக்க இந்த சமுதாயப் புற ஆவே சங்களிலிருந்து மனதை ஒதுக்கி வைக்க ஒரே வழி தியானம்தான். ★


**" பேராசையின் விளைவால் தனது ஒவ்வொரு குற்றத்தையும் நியாயப்படுத்து கிறான். இதிலிருந்து விடுபட, தீய செயல்- தீய எண்ணங்களில் இருந்து 'விடுதலை' பெற வேண்டும். அதற்கு தியானம் அவசியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகள் கூட கைகொடுக்கும் நேரம் வரும்...



கவலை எப்போது தோன்றும்? கவலைகளுக்கான காரணங்கள் எவை? எதிர்பார்த்தது நடக்காத போது, பிரியமானவர்கள் பிரியும் போது, யாராவது திட்டும் போது இப்படி குறிப்பிட்ட விடயங்களுக்கு மட்டுமா கவலை ஏற்படுகிறது? இல்லை; எண்ண முடியாத காரணங்களைக் கொண்டு புதுப்புது வடிவில் எதிர்பாராத விதமாக கவலைகள் வந்து கொண்டே இருக்கும். கவலைகளுக்கான காரணத்தை பட்டியலிட்டு முடிக்கவே முடியாது.

இந்தக் கவலைகளை மறக்க எதாவது மருந்து இருக்கிறதா? தலைக்கு சிறிது போதையை ஏற்றிப் பார்க்கலாமா? தனியாக ஒரு இடத்தில் அமர்ந்து பார்க்கலாமா? இல்லை கூட்டத்தோடு கூட்டமாக ஒரு சினிமாவைபார்க்கலாமா? என்னசெய்ய? என்ன செய்தால் கவலையை மறக்க முடியும்? எல்லாவற்றையும் செய்து பார்த்தேன்; சிறிது நேரம் ஓடி மறைந்தவன் மீண்டும் வந்து விடுகிறானே?

இந்த கவலைகளை எல்லாம் வலை வீசி பிடித்து வெளியே விட என்ன வழி, தியாணம் செய்யலாமா? இறைவனைத் தேடலாமா! எதைச் செய்தாலும் கவலை வருகிறதே! எந்த வழியைத் தேடினாலும் கவலை வருகிறது, எதையும் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. எல்லாம் தலையெழுத்து என்று நினைத்துக் கொண்டால் மட்டும் சிறிது ஆறுதல் கிடைக்கிறது.

கவலை என்பது எல்லோருடைய வாழ்விலும் தவிர்க்க முடியாத ஒன்றாகி உள்ளது, எந்தக் கவலையும் சாக வைக்குமே தவிர வாழ வைக்காது. வேண்டாதவர்களைப் புறக்கணித்துத் தள்ளுவதைப் போல கவலைகளையும் புறக்கணித்து விட வேண்டும்.

ஒவ்வொரு முறையும் விஷச் செடியைப் போல கவலை முளைத்துக் கொண்டேயிருக்கும், அது முளைப்பதை சில வேளைகளில் தவிர்க்க முடியாமல் போக லாம். தவிர்க்க முடியவில்லை என்றாலும் பரவாயில்லை. அதை முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும். இல்லையென்றால்எம்மைஉயிரோடு வைத்து எரித்துக்கொண்டிருக்கும். சந்தோஷமான நல்ல விடயங்களில் நாம் புகுந்து கொண்டால் எம்மில் உருவாகும் மகிழ்ச்சி அலைகள் கவலையை அழித்துவிடும். இருட்டை ஒளியால் நீக்குவதைப் போல கவலையை மகிழ்ச்சியால் நீக்க வேண்டும். வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது என்று எண்ணுவதைவிட, இனி நாளை நல்லதே நடக்கும் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். உறுதியான நம்பிக்கையும் எதையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் இருந்தால் ஏன் கவலை வரப்போகிறது?

வீடு, வாசல், சொத்து, சுகம் என்று மண்ணில் எல்லாமே கவலையைத் தருகின்றன. மாளிகையை மண்ணில் கட்டினால் கவலை வரலாம், மனதில்கட்டிணால் கவலை வருமா! கவலை, மகிழ்ச்சி என்ற இரண்டு வகை மண்ணும் மனதில் தான் இருக்கிறது இதில் எந்த மண்ணை எடுத்து எப்படி வடிவமைக்கிறோமோ அப்படித்தான் வாழ்க்கையும் அமையும், இதில் மகிழ்ச்சியோடு கவலைகளையும் சரியாக எடுத்து வடிவமைத்தால் கவலைகள் கூடக் கைகொடுக்கும்.

இருட்டை ஒளியால் நீக்குவதைப்போல கவலையை மகிழ்ச்சியால் நீக்க வேண்டும். வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது என்று எண்ணுவதைவிட, இனி நாளை நல்லதே நடக்கும் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். உறுதியான நம்பிக்கையும் எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் இருந்தால் கவலை ஏன் வரப்போகிறது.

# இமயமலைப் பனிப்பாறைகள் வேகமாக உருகும் ஆபத்து

காட்டுத் தீ காரணமாக இமயமலையில் உள்ள பனிப்பாறைகள் வேகமாக உருகக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், இமயமலைப் பகுதியில் பருவநிலை மாற்றம் தொடர்பாக ஆய்வு செய்தனர். அது குறித்து விஞ்ஞானிகள் தங்கள் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இமாச்சல பிரதேசத்தில் பஸ்பா பனிப் பகுதிகளில் விஞ்ஞானிகள் குழுவினர் ஆய்வு செய்தனர். 2009ம் ஆண்டு கோடை காலத்தில் இங்குள்ள வனப்பகுதிகளில் பெருமளவில் காட்டுத் தீ ஏற்பட்டது. இதில் பல உயிரினங்களும், தாவரங்களும் அழிந்தன.


2001-2012 ஆம் ஆண்டு வரை பஸ்பா பகுதியில் பனிக் கட்டிகள் உருகியதை விட, காட்டுத் தீ ஏற்பட்ட 2009 ஆம் ஆண்டில் அதிகளவில் பனிக்கட்டிகள் உருகின. காட்டுத் தீயால் ஏற்படும் காபன், காற்றில் கலந்து வெப்பமயமாவதன் மூலம் பனிப் பாறைகளை வேகமாக உருகச் செய்துவிடும். இமாச்சல பிரதேசம், காஷ்மீர், உத்தரகாண்ட் மாநிலங்கள் இமயமலை பகுதிகளில் அமைந்துள்ளன. இந்த மாநிலங்களில் உள்ள வனப் பகுதிகளில் மே, ஜூன் மாதங்களில் கோடை வெப்பம் காரணமாக பெரியளவில் காட்டுத் தீ ஏற்படுகிறது. இதனால், இந்த பகுதிகளில் இமயமலையின் பனி படர்ந்த இடங்கள் வேகமாக உருகிவிடும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

காட்டுத் தீயால் ஏற்படும் காபன், காற்றில் கலந்து வெப்ப மயமாவதன் மூலம் பனிப் பாறைகளை வேகமாக உருகச் செய்துவிடும்.



மேலும், இமாச்சல பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் மலைப் பகுதிகளில் வசிக்கும் பெரும் பாலான மக்களுக்குப் பனிப் பாறைகளும், பனிபடர்ந்த பகுதிகளும் தான் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளன. காட்டுத் தீ காரணமாக பனிப் பகுதிகள் வேகமாக உருகினால் எதிர்காலத்தில் இந்த மக்களின் குடிநீர் ஆதாரம் முற்றிலும் அழிந்து, அங்கு வாழவே முடியாத சூழ்நிலை உருவாகும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புற்றுநோய் திசுக்களை அகற்ற புதிய கத்தி



ஒரு புதிய கத்தி போன்ற கருவி புற்றுநோய் அறுவை சிகிச்சை மேற்கொள்ள மிகவும் பயனுள்ளதாகக் கருதப்படுகிறது.

புற்று நோய் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்போது, புற்றுநோய் பாதித்த திசுக்களை மட்டும் துல்லியமாக அகற்ற ஒரு புதிய வகை கத்தியை பிரிட்டன் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.


பொதுவாக புற்று நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள மின்சாரத்தால் இயங்கக்கூடிய ஒரு கத்திபோன்ற கருவி பயன்படுத்தப்படும். இந்தக் கருவியைக் கொண்டு மருத்துவர்கள் புற்று நோய் பாதித்த திசுக்களை அகற்றும் போது, அவை பொசுங்கிவிடும்.

அப்போது ஒரு விதமான புகை வெளியாகும். அது மட்டுமின்றி அவ்வாறு அறுவை சிகிச்சை செய்யும்போது, புற்று நோய் தாக்கிய திசுக்களை மட்டும் துல்லியமாக அறுவை சிகிச்சை செய்து அகற்றுவது என்பது இயலாத காரியமா கவே இருந்து வந்தது.

இதனால், அறுவை சிகிச்சை செய்த போதிலும், அந்த நோயா ளிக்கு மீண்டும் புற்று நோய் தாக்கும் அபாயமும் இருந்தது. மேலும், திசுக்களின் மாதிரிகளை சோதனைச் கூடத்தில் பரிசோதிப்பதற்கு குறைந்தது அரை மணி நேரமாவது தேவைப்பட்டது.

ஆனால், தற்போது பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பான ஒரு புதிய கத்தி போன்ற கருவி புற்றுநோய் அறுவை சிகிச்சை மேற்கொள்ள மிகவும் பயனுள்ளதாகக் கருதப்படுகிறது.

# பூமியின் நேரம் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை அதிகரிப்பு




பூமியின், துருவங்களில் ஏற்படும் மாறுபாட்டால், ஒரு நாளுக்கான நேரம், ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிகரித்து வருவகிறது என்று பிரிட்டன் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

பிரிட்டனின், லிவர்பூல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள், பூமியின் துருவங்களில் ஏற்படும் நிகழ்வுகள் மற்றும் அதனால் ஏற்படும் மாற்றங்கள் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

1962 ஆம் ஆண்டு முதல், 2010 ஆம் ஆண்டு வரை ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில், பல புதிய தகவல்கள் வெளியாகி உள்ளன. அதன்படி, ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை, பூமியின் ஒரு நாளுக்கான நேரம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமி, அதன் சுற்றுப் பாதையில் சுற்றி வரும்போது, தன்னைத் தானே சுற்றுவது வழக்கம். இவ்வாறு, தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள, தற்போது, 24 மணி நேரம் ஆகிறது. இது, 3,000 லட்சம் ஆண்டுகளுக்கு முன், 21 மணி நேரமாக இருந்தது.

ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை, பூமியின் ஒரு நாளுக்கான நேரம், மெல்ல அதிகரித்து வந்துள்ளது. இந்த மாற்றம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.



# மூளைக்குப் புத்துணர்ச்சி அளிக்கும் குடிதண்ணீர்

மூளைக்கு புத்துணர்ச்சி அளிக்க வேண்டும் என்று விரும்பினால் எந்த உயர் பானங்களையும் தேடி அலைய வேண்டாம், குடிதண்ணீரே போதும். ஏதேனும் மிகப்பெரிய தேர்வை எழுதப்போகும் போதும், நேர்முகத் தேர்வுக்குச் செல்லும் போதும், உங்கள் மூளை சோர்வாக இருப்பதாக உணர்ந்தால், உடனடியாக 3 கப் குடிதண்ணீர் குடித்துப் பாருங்கள். நிச்சயம் உங்கள் மூளை புத்துணர்ச்சி அடையும். நாக்கு வறண்டு தண்ணீர் தேவைப்படும் போது தாகம் உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் மூளைக்கும் ஏற்படுகிறது. அதனால் எப்போதும் தாகம் எடுக்கும் அளவுக்கு விடாமல், அவ்வப்போது குடிதண்ணீர் குடித்துக் கொண்டிருப்பதால் உடலை உற்சாகமாக வைத்துக் கொள்ளலாம்.




# தூங்கியவாறே பறக்கும் அல்பட்ரோஸ் பறவைகள்

அல்பட்ரோஸ் பறவைகள் மிகத் திறனுடன் காற்றோட்ட வேறுபாடுகளைப் பயன்படுத்தி அலுப்பின்றி வெகு தொலைவு பறக்க வல்லவை.


ஆல்பட்ரோஸ் பறவைகள் கடலிடையே உள்ள சிறு தீவுகளில் பெரும் கூட்டமாக வாழ்கின்றன. ஆல்பட்ரோஸ் பறவைகள் இணையாக வாழ்நாள் முழுவதும் ஒன்றாகவே இணை பிரியாமல் வாழ்கின்றன. அல்பட்ரோஸ் தென்முனைப் பெருங்கடலிலும் வட பசுபிக் பெருங்கடலிலும் காணப்படும் கடற் பறவையினமாகும்.

பூமியின் தெற்குப் பகுதியில் உள்ள கடல் பகுதிகளில்தான் ஆல்பட்ரோஸ்கள் வசிக்கின்றன. இறங்காமல் ஏறத்தாழ ஐந்து வருடங்கள் தொடர்ந்து பறப்பதற்கு இவற்றால் முடியும்.

இந்தப் பறவைகள் பெரிய இறக்கைகளைக் கொண்டிருக்கின்றன. ஒரு பகுதி இறக்கை, ஏறத்தாழ மூன்று மீற்றர் நீளமுடையது. இந்த இறக்கைகளை இருபுறமும் விரித்தால், மணிக்கணக்காகவோ அல்லது நாள்கணக்காகவோ இவற்ற ல் ஆகாயத்தில் அப்படியே பறக்க முடியும். கடலில் உள்ள மீன்கள்தான் இவற்றின் உணவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடைந்த பானை

ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

தண்ணீர் எடுத்துவர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப் பானைகளை நீளமான ஒரு தடியின் இரண்டு முனைகளிலும் தொங்கவிட்டு, தடியை தோளில் சுமந்து செல்வான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாத பானைக்குத் தன் திறன் பற்றிப் பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும்.


இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. கேலி பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்து

''ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் மனம் வருத்துகின்றேன். உங்களுக்கும் தினமும் என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைச் சுமையை அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரி செய்யுங்களேன்'' எனக் கேட்டது.

அதற்கு விவசாயி, ''பானையே! நீ ஒன்று கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழி நெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்'' என்றான்.

இதைக் கேட்ட பானை மனம் வருத்துவதை நிறுத்திவிட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்படாமல் தன் வேலையைச் சரிவரச் செய்யத் தொடங்கியது.

# புவியின் அமைப்பு




★ உட்கோளவகத்தினுள் மக்மா குழம்பு காணப்படும்.
★ மக்மா குழம்பின் வெப்பநிலை 5000°c
★ புவியோட்டின் இரு வகைகள் சீயல் படை, சிமாப்படை ஆகும்.
★ சீயல் படையின் பிரதான பாறை கருங்கல் ஆகும்.
★ கோளவகம் ஆனது புவியோட்டில் இருந்து 2900 km ஆழத்தில் காணப்படும்.


(விட்டம் 34[illegible] km)

வி.பிரசாத், தரம் -10ஏ,
யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

# பலருக்கு தெரியாத அதிசயம்


சிந்து சிவதாஸ்,
சுதுமலை.

## கிரிஸ்டல் குகை



பெர்முடாவில் உள்ள கிரிஸ்டல் குகை கேஸ்டல் ஹார்பருக்கு அருகில் உள்ளது. இது சுமார் 500 மீற்றர் நீளமும் 62 மீற்றர் ஆழமும் உடையது. மேலும் இந்தக் குகை சுண்ணாம்பு பாறையுடன் அழகான கிரிஸ்டல் குளங்களுடன் கண்ணைக் கவரும் வகையில் காணப்படுகிறது.


## வேவ் பாறை





ஆஸ்திரேலியாவில் அலை பாய்வது போன்ற வடிவில் பாறை ஒன்று உள்ளது. இதைப் பார்க்கும்போது திடீரென அலை பாய்வது போலவும் திடீரென அலை பாயாமல் நிற்பது போலவும் தோன்றுகிறது.

## பாறைக் காடு



புவியில் உள்ள அதிசயங்களில் ஒன்று பாறைக் காடு. இதுவும் மடகஸ்காரின் மேற்கு கடற்கரையின் அருகில் அமைந்துள்ளது. இந்த காட்டில் உள்ள பாறையின் வித்தியாசமான அமைப்பில் யுனெஸ்கோ நிறுவனம் இந்த இடத்தை உலக பாரம்பரிய தளமாகக் கருதுகின்றது.

## நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்




ஆத்திசூடி - ஔவையார்
பெரியபுராணம் - சேக்கிழார்
இராமாயணம் - வான்மீகி
மகாபாரதம் - வியாசர்
தேம்பாவணி - வீரமா முனிவர்
மகாவம்சம் - மகாநாம
சத்தியசோதனை - மகாத்மா காந்தி
நளவெண்பா - புகழேந்தி
பாஞ்சாலி சபதம் - சுப்பிரமணிய பாரதியார்
நற்சிந்தனை - யோகர் சுவாமிகள்

ஜே.டினோஜ், தரம் -10
யா/ நல்லூர் இந்து தமிழ்
பெண்கள் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பயன்படுத்திய காசுகள்

■ நிலா



மனித நாகரிகத்தின் தொடக்கக் காலத்தில் உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரு பொருளை வாங்குவதற்கும், விற்பதற்கும் பண்டமாற்று முறைதான் இருந்து வந்தது. இந்த முறையில் ஒருவர் தம்மிடமிருந்த நெல்லைக் கொடுத்து மற்றொருவரிட மிருந்த பருப்பை வாங்கினார். பிறிதொருவர் தம்மிடமிருந்த மீனைக் கொடுத்துப் பால், தயிர் போன்றவற்றைப் பிறரிடமிருந்து வாங்கினார். இந்த முறையில் மிகுதியான பொருள்களைப் பண்டமாற்றம் செய்கையில் அவர்களுக்கு இடர்பாடு ஏற்பட்டது.

ஆதலால் ஒரு பொருளை மையப் பொருளாகக் கொள்ளத் திட்டமிட்டனர். தொடக்கத்தில் மாடு அந்த மையப் பொருளாக இருந்தது. இந்தக்காலக்கட்டம் அரப்பன்நாகரிக காலமாக இருக்கலாம். அரப்பன் களிமண் முத்திரைத் தகடுகள் கூட அந்தக்காலக் காசுகளாக இருக்கலாம். ஏனெனில் அரப்பன் களிமண் தகடுகளில் காளை உருவம்தான் மிகப் பெரியதாகக் காணப்படுகிறது.

மாடு மிகுந்த அளவில் பொருள்கள் வாங்க மட்டுமே பயன்பட்டது. குறைந்த அளவில் பொருள்கள் வாங்குவதில் இடர்பாடு ஏற்பட்டது. ஆதலால் - சோழிகளை - மையப் பொருளாகப் பின்னாளில் பயன்படுத்தினர்.

சோழிகளைக் கொண்டு குறைந்த அளவில் பொருள்கள் வாங்குவது எளிதாக இருந்தது. இந்த முறையில் உயர்ந்த மதிப்பில் பொருள்களை வாங்க வேண்டுமானால் மூடை மூடையாகச் சோழிகளைத் தருதல் வேண்டும். அது மட்டுமன்றி சோழிகள் எளிதில் உடைந்து போகக்கூடிய தன்மை கொண்டவை. இவ்வாறாக இருக்கும் நேரத்தில் உலோகம் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது.

ஆதலால் உலோகத் தகட்டை மையப் பொருளாகக் கொள்ள முடிவெடுத்தனர். அவ்வுலோகத்திலும் செம்பு மற்றும் தங்கத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். இரண்டுமே கடினமான பொருள்கள். ஆகையால் இவை அவர்களுக்கு நன்கு பயன்பட்டன. செப்புத் தகட்டைச் சாதாரண பொருள்கள் வாங்குவதற்கும் தங்க உருண்டைகளை மதிப்பு மிகுந்த அறிய பொருள்கள் வாங்குவதற்கும் பயன்படுத்தினர். தங்க உருண்டைகள் வேப்பம்பழம் வடிவிலும் நெல்லிக்கனி வடிவிலும் நிறத்திலும் இருந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இந்தக் காசுகள் மக்கள் கூட்டு வாழ்க்கை நடத்தியபோது பயன் படுத்தப்பட்டவை.

பின்னர் தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்தபோது தங்களுக்கென சில குலச்சின்னத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அந்தக் குழுக்கள் வெளியிட்ட காசுகளில் ஒவ்வொரு குழுவும் தங்கள் உண்மையை நிலைநாட்ட தங்களது குலச்சின்னத்தைச் செப்புத் தகட்டிலோ அல்லது வெள்ளித் தகட்டிலோ முத்திரையாகப் பதித்து வெளியிட்டனர். அப்பொழுதுதான் அவை தங்கள் பகுதிகளில் பயன்படுத்தப்படும் உரிமை பெறும். அத்தகைய காசுகள் முத்திரை பதிக்கப்பெற்ற காசுகள் என்று காசு இயல் வல்லுநர்களால் அழைக்கப்படுகின்றன.

அனைத்துக் குழுத்தலைவர்களுக்கும் தலைவனாக ஒருவன் உருவானான். அவனே வேந்தன் என்று அழைக்கப்பட்டான். அவ்வாறு உருவானவர்களே தமிழக மூவேந்தர்கள். அந்த மூவேந்தர்களும் தங்களுக்கென சில காசுகளை வெளியிட்டார்கள் . அவை சதுரச் செப்புக் காசுகள் என்று வழங்கப் பெறுகின்றன.

சேரரது காசில் ஒரு பக்கம் யானை உருவமும் மறுபக்கம் வில் அம்பு உருவமும் அல்லது பனை மரம் உருவமும் இருக்கும். சோழரது காசில் ஒரு பக்கம் யானை உருவமும், மறுபக்கம் புலியினது உருவமும் காணப்படும். பாண்டியரது காசில் ஒருபக்கம் யானை உருவமும் மறுபக்கம் மீன் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும். குறுநில மன்னரான மலையமான் காசில் ஒரு பக்கம் குதிரைச் சின்னமும் மறுபக்கம் ஆற்றின் சின்னமும் காணப்படும்.

குறுநில மன்னரான அதியான் காசில் ஒரு பக்கம் நீண்ட கழுத்தையுடைய குதிரைச் சின்னமும் மறுபக்கம் ஆற்றின் கரைகள் சின்னமும் காணப்பெறும்.

மேற்குறிப்பிட்ட சதுரச் செப்புக் காசுகளின் காலம் இற்றைக்குச் சற்றே குறைய இரண்டாயிரத்து 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும்.

> “ குறுநில மன்னரான அதியான் காசில் ஒரு பக்கம் நீண்ட கழுத்தையுடைய குதிரைச் சின்னமும் மறுபக்கம் ஆற்றின் கரைகள் சின்னமும் காணப்பெறும்.

இதற்கு அடுத்தகட்ட வளர்ச்சி செப்புச் சதுர மற்றும் ஈய முட்டை வடிவக் காசுகளில் பண்டைத் தமிழ் எழுத்தில் மன்னர் பெயர் பொறித்து வெளியிடப்பட்டவை ஆகும். இதுவரை பாண்டிய மன்னன் பெருவழுதி பெயர் பொறிக்கப்பட்ட காசும், அதிய மன்னன் - சேந்தன் அதினன் னெதிரான் - பெயர் பொறிக்கப்பட்ட காசும் தெரிய வந்துள்ளன. அவை கி.மு 4-3 ஆம் நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்டவை.

காசு வெளியிடுவதில் இதற்கு அடுத்ததாக மன்னன் தலை உருவத்தோடு, மன்னரது பெயர் பொறிக்கப்பட்டு வெளியிடப் பெற்றிருப்பவை காணப்படுகிறது.

முதல் வகைக் காசில் ஒரு பக்கம் வாயிலில் நிற்கும் மன்னன் உருவமும் அவனைச் சுற்றிப் பண்டைத் தமிழ் எழுத்தில் கொல்லிப் புறை என்ற மன்னன் பெயரும் காணப் படுகின்றன. மறுபக்கம் வில் அம்பு உருவம்.

இரண்டாம் வகைக் காசில் மாக்கோதை என்று மன்னன் பெயர் பண்டைத் தமிழ் எழுத்தில் தலைப்பிலும் அதற்குக் கீழே மன்னனது தலை உருவமும் காணப் படுகிறது.

மூன்றாம் வகையில் குட்டுவன்கோதை என்று மன்னன் பெயர் பண்டைத் தமிழ் எழுத்தில் தலைப்பிலும் அதற்குக் கீழே மன்னனது தலை உருவமும் காணப்படுகிறது.

மூன்றுவகைக் காசுகளிலும் கோதை, பொறை, என்ற சேர அரசர்களின் பெயரொட்டுக்கள் காணப்பெறுவதால் இவை சேரர் காசுகள் என்பது தெளிவாகிறது. இந்தக்காசுகளின் காலம் இற்றைக்கு 2,200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்

**மலையமான் காசுகள் !!**


திருக்கோவலூர் மலையமான் என்பவன் சங்ககால குறுநில மன்னர்களுள் ஒருவன். இவனது வம்சத்தினர் மலையமான் வம்சத்தினர் எனப்பட்டனர். இவர்கள் வெளியிட்ட செப்பு மற்றும் இரும்புக் காசுகள் கிடைத்துள்ளன. அதில் இவர்கள் ஆண்ட திருக்கோவலூர் ஊரின் பொன்னையாறு, மூன்று மலைகள் மற்றும் ஒரு பாதையும் காணப்படுகிறது. இவற்றின் காலம் கி.பி. 100 - 300 ஆகும்.

கடையெழு வள்ளல்களில் ஒருவனான காரி சங்ககாலத்தில் இந்த ஊரை ஆண்ட மன்னர்களில் ஒருவன். இது விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

இப்போது நாம் பயன்படுத்தும் காசுகள் பல காலங்களையும் பல நாகரிகங்களை தாண்டி வந்து உள்ளது என்று நினைக்கும் போது சற்று வியப்பாகவே உள்ளது.

---

# மனிதனின் காது யானையளவுக்கு பெரிதாகும்



மனித உடலின் வளர்ச்சி 21 வயதோடு நின்று விடுகிறது. கடைசிவரை வளர்வது காது மட்டுமே. ஆயிரம் வருடம் வரை உயிர் வாழ்ந்தால் எமது காது ஒரு குட்டி யானைக் காது அளவுக்கு இருக்கும்

ஒரு சராசரி மனிதனின் உடலில் இருக்கும் ரோமங்களின் எண்ணிக்கை சுமார் 5 லட்சம். உடலில் ரோமங்கள் இல்லாத இடங்கள் உள்ளங்கை மற்றும் உள்ளங்கால்கள் மட்டுமே. பகல் வேளையில் விழித்திருந்தாலும், ஆயிரக்கணக்கான முறை கண்ணை சிமிட்டுகிறோம். இதை மொத்தமாக ஆய்வு செய்தால் இரவைத் தவிர பகலிலும் அரைமணி நேரம் கண்ணை மூடிக் கொண்டு தான் இருக்கிறோம்.

உடலின் வலுவான விடயம், பல்லின் மீது இருக்கும் என்றில்லாமல் தான். இது யானை தந்தத்தை விட வலுவானது என்று கண்டுப்பிடித்திருக்கிறார்கள். விதம் விதமான பல்லாயிரக்கணக்கான வேலைகளை அலட்சியமாக செய்யக்கூடிய ஒரே ஆயுதம் எமது கை. தட்டில் இருக்கும் நூடில்சை கரண்டியில் எடுக்கும்போது உடலில் உள்ள முப்பது இணைப்புகளும், 50 தசைகளும் இயங்க ஆரம்பிக்கின்றன.

எமது பாதங்களைப் பற்றி யோசித்தால் பிரமிப்பே மிஞ்சும் காரணம் ஒரு சதுர அடியில் வெறும் 3 இல் ஒரு பங்கு உள்ள எமது பாதங்கள், 80 கிலோ எடையுள்ள நம் உடலை 70-80 வருடங்கள் தாங்கி நிற்கின்றன.

இதயம் ஒரு நாளைக்கு சுமார் ஒரு லட்சம் தடவை சுருங்கி விரிகிறது. வருடத்துக்கு நான்கு கோடி தடவை. இதயத்தின் இடதுபக்கத்தை விட வலது பக்கம் சற்று பெரியதாக இருக்கும்.

எமது உடலில் நாலு அவுன்ஸ் சர்க்கரை, இரண்டு நீச்சல் குளங்களை அப்புறப்படுத்த தேவையான களோரின், 3 பவுண்டு கல்சியம், 20 ஆயிரம் தீக்குச்சிகள் உருவாக்கக் கூடிய அளவுக்கு பொஸ்பரஸ், 10 பார் செப்புகளுக்கு தேவையான கொழுப்பு ஒரு ஆணி செய்யக்கூடிய அளவுக்கு இரும்பு எனப் பல பொருள்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரத்ன தீப பிறந்த பூமி லங்கா தீப வெற்றி பூமி

பிள்ளைகளுக்கு ஆரம்ப நாளில் சரியாகப் பாடத்தைப் புகட்டினால்தான் அவர்களது எதிர்காலம் சிறந்து விளங்கும் என்று சொல்வார்கள். அதனால் ஆரம்ப நாள்களில் பிள்ளைகளுக்கு பலவற்றை சொல்லிக் கொடுக்கின்றனர். தவறான வரலாற்றை இவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதன் மூலம் பின்னாளில் அது உண்மையாகி விடும் என்ற நிலைப்பாடு பல மட்டத்தில் இடம்பெறுகின்றன.

அது இப்பொழுது கல்வி மட்டத்திலும் இடம்பெறுவதுதான் வேதனை தரும் விடயம். ஆனாலும் அதனைக் கண்டு கொள்ளாமல் கல்வி அதிகாரிகள் இருக்கின்றனர். இந்தத் தவறுகளை முளையிலேயே கண்டு கிள்ளி எறியாவிடின் அது வளர்ந்து நாளைய சந்ததிகளால் ஒன்றுமே செய்ய முடியாமல் போகும் அளவுக்கு மாறிவிடும்.

சிறிய தவறு என்றாலும் அதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பது பெரிய தவறை தாமே விடுவதற்குக் காரணமாக அமையும். அதில் வரலாற்றுத் தவறு என்பது எமது சந்ததி வாழ்ந்ததற்கான அடையாளமே இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடாக அமையும். இதனை ஒட்டு மொத்த தமிழ்க் கல்விச் சமூகமும் உணர வேண்டும்.

பதவிகளுக்கு ஆசைப்பட்டு சுயபுத்தி சுய சிந்தனை இல்லாமல் வாழ்வதில் எந்தப் பயனும் இல்லை, புடித்த படிப்பு எமது சுய சிந்தனையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் எமக்கான முடிவுகளை நாமே எடுக்க முடியும். இல்லாது போனால் நாம் படித்த படிப்பு விளங்காத ஒரு கல்வியாகப் போய் விடும். நாளைய சந்ததிக்கு அந்தக் கல்வி உதவாமலும் போய்விடும். எனவே கல்விச் சமூகம் சிந்திக்க வேண்டும்.

படித்தவர்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவிலும்தான் புத்திஜீவிகள் எமது ஊரிலும் இருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றும். தரமான தமிழ் வரலாற்றுப் பிழையில்லாத முடிவுகளை எடுக்க முடியாத புத்திஜீவிகளால் என்ன பயன்?

கடந்த 17 ஆம் திகதி புதன்கிழமை மத்தியான நேரம் உடலை சுட்டெரிக்கும் வெயில் சூட்டில் வேர்வை வெளியேறி வெப்பத்தைத் தணித்துக் கொண்டிருக்கிறது. மோட்டார் சைக்கிளின் வேகத்தில் வெட்டவெளி காற்று என்னை வரவேற்று வழிவிட மேலும் உடல் வெப்பம் தணிவதாக எனது உடலும் மனமும் உணர்ந்து மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கூட்ட ஒருவிதமாகவும், வேகத்தைக் குறைக்க ஒருவிதமாகவும் உடல் உணர்வு மாறுபட தென்மராட்சிப் பிரதேசம் ஒன்றுக்கு ஓர் அலுவலாகச் செல்கின்றேன்.

அங்கு போன அலுவல் நிறைவேறியதும் ஒரு சாப்பாட்டுக் கடையில் மதிய உணவை அருந்தி விட்டு ஒரு பீடாவையும் வாங்கி வாயில் போட்டபடி கடை வாசலில் நிற்கிறேன். மோட்டார் சைக்கிளில் போகும் போது களைப்புத் தெரியவில்லை. மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கியதும் உடல் களைப்பை உணர்ந்தது. அதனால் சிறிது நேரம் கடை ஓரமாக நின்று விட்டுப் போவோம் என்று வாசலில் நிற்கிறேன். பக்கத்தில் பாடசாலையில் படிப்பு முடிந்து மாணவர்கள் வீட்டுக்குச் சென்று கொண்டிருப்பதைப் காண முடிந்தது. அந்த வழியே போகும் மாணவர்கள் ஒரு பாட்டைப் பாடிய படியே சென்றனர். இப்பத்தே சினிமாப் பாட்டைக் கேட்டால் ஒன்றுமே விளங்காது. அந்தளவுக்கு புரியாத வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்துவார்கள்.

குறிப்பிட்ட அந்த மாணவர்கள் ஏதோ ஒரு சினிமாப் பாட்டைத்தான் பாடிக் கொண்டு செல்கின்றார்கள். நடந்து வந்த களைப்பில் நான் நின்ற கடைப் பக்கம் ஒதுங்கிய ஒரு மாணவன் பாடிய பாடல் எனது காதில் தெளிவாகக் கேட்டது.''ரத்ன தீப, பிறந்த பூமி, லங்காதீப வெற்றி பூமி'' என்று பாடிக் கொண்டு நின்றான். அவனுக்கு ஆறு வயது இருக்கும். அந்த மாணவன் பாடுவது சிங்களப் பாட்டு என்பது நன்கு புரிந்தது. சின்ன வயசில் சிங்களப் பாட்டைப் பாடுகிறானே என்று எனக்கே வியப்பாக இருந்தது. ஒன்றில் அவன் சிங்கள மாணவனாக இருப்பான்; அல்லது கொழும்பில் பிறந்து வளர்ந்திருப்பான். இரண்டில் ஒன்றாக இருந்தால்தான் சிங்களப் பாட்டை அவனால் பாட முடியும்.

எதற்கும் மாணவனைக் கேட்டால் தெரிந்து போய்விடும் என்று ''தம்பி சிங்களப் பாட்டுப் படிக்கிறாய் உனக்கு சிங்களம் தெரியுமா?'' என்று கேட்டேன். மாணவனோ ''தெரியாது'' என்று சொன்னான். நானோ ''பாடசாலையில் சொல்லித் தந்ததா?'' என்று கேட்டேன் மாணவனோ ''இல்லை'' என்றான். ''பிறகு எப்படி உனக்கு சிங்களப் பாட்டுத் தெரியும்'' என்று கேட்டேன். மாணவனோ ''வினாத்தாளில் இருந்தது'' என்று

## கோப்பாய் சண்முகம்
### கதையோடு செய்தி

சொன்னான். ''எந்தக் கேள்விப் பேப்பர்'' என்று கேட்டேன். மாணவனோ தனது தோளில் சுமந்திருந்த புத்தகப் பையை இறக்கி அதைத் திறந்து ஒரு வினாத்தாளை எடுத்துத் தந்தான். நானும் அதனை வாங்கிப் பார்த்தேன். இந்த ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் கருத்தரங்கு விசேட முன்னோடி வினாத்தாள் என்று தலைப்பில் போட்டிருந்தது. அதனைப் படித்து விட்டு ''நான் என்ன கேட்டேன். நீ என்ன காட்டுகிறாய்?'' என்றேன். மாணவனோ என்னைப் பார்த்து கொடுப்புக்குள் வந்த சிரிப்பை ஒருவாறு அடக்கி விட்டு எனது கையில் இருந்த வினாத்தாளின் பக்கத்தை தட்டிப் பார்த்துக் கொண்டு நின்றான். எனக்கு கோபம் கோபமாக வந்தது. இந்தச் சின்னப் பெடியன் என்னோடு விளையாடுகிறானே என்று எனக்குள்ளே நினைத்துக் கொண்டு ''நீ என்ன வினாத்தாளைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாய்'' என்று கேட்டேன். மாணவனோ ''வினாத்தாளில்தான் நான் பாடின பாட்டு இருக்குது'' என்றான். எனக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி ''தமிழ்ப் பேப்பரில சிங்களப் பாட்டா..... அதாவது தரம் 5 புலமைப் பரிசில் கருத்தரங்கு விசேட முன்னோடி வினாத்தாளில் சிங்களப் பாட்டா!'' என்று மாணவனைக் கேட்டேன். மாணவனோ ''வினாத்தாளில் இருந்த சிங்களப் பாட்டை எனக்குக் காட்டினான்''

ரத்ன தீப பிறந்த பூமி,
லங்கா தீப வெற்றி பூமி
இது எமது தாய் நாடாகும்

பரம்பரை வீரம் கொண்ட எமது மூதாதையர்களின் இரத்தத்தினால் செழிப்பான மகத்தான எமது தாய்நாடு. இதில் இரத்தினக்கல் போன்று படிந்திருப்பது,

''அவர்கள் நாட்டிற்காக
சிந்தி உயிர் நீத்த இரத்தமாகும்
இந்து தேசத்தின் குளங்களிலிருந்து
வீசுகின்ற காற்றினூடாக
தங்க கதிர்கள் ஊடாக வந்து
மனதை மகிழ்ச்சியூட்டுவது
அந்த வீரர்களின் பிராண வாயுவாகும்''

என்ற சிங்களம் தமிழ் கலந்த பாடலை வழங்கி 5 கேள்விகளையும் கேட்டிருந்தனர் அந்த வினாத்தாளில் மாணவனோ ''படிச்சாச்சோ'' என்று கேட்டு விட்டு வினாத்தாளை வாங்கி மறுபடியும் புத்தகப் பையில் வைத்துவிட்டு புத்தகப் பையை தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நகர்ந்து சென்றான். என்னைக் கடந்து செல்லும் போது என்னைப் பார்த்தபடியே கொடுப்புக்குள் சிரிப்பை வரவழைத்து அதே பாட்டைப் பாடிக் கொண்டே சென்றான். மாணவன் எதற்காக சிரிக்கிறான் என்று புரியாவிட்டாலும் சிரிப்புக்கிடமான விடயங்கள் பல இப்போது எமது மண்ணில் இடம் பெறுகின்றன என்பது மட்டும் மனதை நெருடியது. அது எமது தமிழ்ப் புத்திஜீவிகளின் செயற்பாடுகளால் இடம்பெறுவதுதான் வேதனை அளிக்கும் ஒன்றாக இருக்கிறது.

# மனச்சாட்சியின் விளைவு



ஒரு தடவை அறவொழுக்கத்தை நேசிக்கும் பிரபலமான தத்துவவாதி ஒருவர் முல்லா வசிக்கும் ஊரைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அப்போது சாப்பாட்டு நேரமாகையால் அவர் முல்லாவிடம் நல்ல உணவு விடுதி எங்குள்ளது என்று கேட்டார். முல்லா அதற்கு பதில் சொன்னவுடன், தத்துவவாதி போகும் போது பேச ஆள் கிடைத்தால் நல்லது என்ற எண்ணத்தில் முல்லாவையும் தன்னுடன் சாப்பிட வருமாறு அழைத்தார்.

முல்லாவும் நெகிழ்ந்து போய் அந்த படிப்பாளியை அருகிலிருந்த உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றார். அங்கே போன பிறகு ''அன்றைய சிறப்பான உணவு என்ன?'' என்று கடைச் சிப்பந்தியிடம் கேட்டார் முல்லா. ''மீன்! புதிய மீன்!'' என்று பதில் சொன்னார் சிப்பந்தி. ''இரண்டு துண்டுகள் நல்லதாக கொண்டு வாருங்கள்'' என இருவரும் கூறினர்.

சிறிது நேரம் கழித்து ஹோட்டல் சிப்பந்தி ஒரு பெரிய தட்டில் இரு மீன் துண்டுகளை வைத்துக் கொண்டு வந்தார். அதில் ஒரு துண்டு பெரியதாகவும், இன்னொரு துண்டு சிறியதாகவும் இருந்தது. அதைக் கண்டவுடன் முல்லா எந்தவொரு தயக்கமில்லாமல் பெரிய மீன் துண்டை எடுத்து தனது தட்டில் போட்டுக் கொண்டார். முல்லாவின் செய்கையால் கடுப்படைந்து போன தத்துவவாதி முல்லாவைப் பார்த்து கடுமையாக முறைத்து விட்டு, முல்லா நீங்கள் நடந்து கொண்ட முறையானது எந்த தர்ம, நீதி, நியாய, மத சாஸ்திரத்துக்கும் ஒத்துவராத ஒன்றாகும் என்றார்.

முல்லா, தத்துவவாதி சொல்லுவதையெல்லாம் மிக அமைதியுடன் பொறுமையாக கேட்டுக் கொண்டு வந்தார். கடைசியாக அந்த மெத்தப் படித்தவர் பேசி முடித்தவுடன், நீங்களாக இருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? என்றார் முல்லா. நான் மனச்சாட்சியுள்ள மனிதனாகையால் சிறு மீன் துண்டை எடுத்திருப்பேன். அப்படியா, ரொம்ப நல்லது. இந்தாருங்கள் உங்கள் பங்கு என்று சொல்லி சின்ன மீன் துண்டை அந்த தத்துவவாதி தட்டில் வைத்தார் முல்லா.

## வாசகர் திருமுகம்

# தமிழர் ஆசிரியர் சங்கம் மௌனத்தை கலைக்குமா?

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மௌனமாக இருந்ததை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். 35 ஆண்டுகளுக்கு மேலாக அதிபர் ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு ஆசிரியக் குடும்பங்களில் ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரே ஒரு தமிழ் ஆசிரிய சங்கம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமே.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் ஆசிரியர் சங்கம் மௌனமாக இருந்தமை தமிழர் தரப்பின் முதலமைச்சர் பதவிக்கே பங்கத்தை ஏற்படுத்தியது என்பதனை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியது.

இதுதொடர்பில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூத்த கல்வியாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில், ''இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தனித்து நின்று ஆதரித்து ஒரு கட்சியை வெல்லச் செய்ய முடியாது. ஆனால் ஒரு கட்சிக்கான ஆதரவை வெளிப்படுத்தியிருந்தால் சிறுநூறு வாக்குகளால் இழக்கப்பட்ட முதலமைச்சர் பதவி தமிழர் தரப்பிற்குக் கிடைத்திருக்கும். இப்போதுள்ள சூழ்நிலையில் அதிபர், ஆசிரியர்கள் தமது குறைகளையும் தமது பிரதேசம் சார்ந்த சூழலில் உள்ள கல்வி தொடர்பான குறைகளையும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் எடுத்துரைப்பதனையும், அவர்கள் அதனை முடிந்தவரை தீர்த்து வைப்பதனையும் நாம் மறைப்பதற்கில்லை. அதற்காகவாவது அவர்கள் சொல்லும் பாதையில் அதிபர், ஆசிரியர்கள் பயணிப்பார்கள்'' என்றார். எமது பிரதேசம் சார்ந்த அரசியல் விடயங்களிலும் அவதானமாக இருப்பது அவசியமானதொன்றாகும். அரசியல் கலப்பில்லாமல் நீங்கள் நடந்து கொள்ள வேண்டுமென்ற கொள்கையுடன் இருப்பதனை நாம் வரவேற்கின்றோம். அதற்கு மேலாக தொழிற்சங்கம் உணர்வோடு பேரம்பேசி எமது சமூகத்துக்கு ஒவ்வாதவர்களை இனங்காட்டுவதனையும் நாம் வரவேற்கின்றோம்.


அதிபர்களும், ஆசிரியர்களும் அரசியல் உரிமையுள்ளவர்கள். அவர்களின் வாக்குப் பலம் மிகவும் காத்திரமானது. வடமாகாணத்தில் கடந்த காலங்களில் நடைபெற்று முடிவடைந்த நாடாளுமன்றத் தேர்தலில் கல்விப் புலம் சார்ந்த எவரும் வெற்றிபெறவில்லை. இதற்கு மௌனமும் ஒரு காரணம். தேர்தல் வாக்களிப்பில் ஏராளமான கல்விப் புலம்சார்ந்தவர்கள் வாக்களிக்கவில்லை.

இன்று எமக்கு சர்வதேச அங்கீகாரத்துடனான சுயகௌரவ உரிமை தேவைப்படுகின்றது. அதனை இனிமேலும் நாம் இழந்துவிடக் கூடாது. இதைவிட சர்வதேச கல்வியகம் போன்ற பல்வேறு சர்வதேச அமைப்புக்களுடன் உங்களுக்கு நீண்ட கால உறவு இருக்கின்றது. ஆகையால் உங்களின் மௌனமற்ற வெளிப்பாடு இப்போது அவசியமாகின்றது. எனவே நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமது நிலைப்பாட்டை உரிய நேரத்தில் வெளிப்படுத்த வேண்டும். அந்தச் செய்திக்காக நாம் காத்திருப்போம்.

வ.செல்வராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# கூடைப்பந்தாட்ட வீரரை கடத்திய வேற்றுக் கிரக வாசிகள்

அமெரிக்காவின் பிரபல கூடைப் பந்தாட்ட வீரர்களில் ஒருவரான பரோன் டேவிஸ், தன்னை வேற்றுக் கிரகவாசிகள் பறக்கும் தட்டில் கடத்திச் சென்று மீண்டும் பூமியில் இறக்கிவிட்டதாக கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். இரு வாரங்களுக்கு முன் அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரிலிருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை நோக்கித் தான் சென்று கொண்ருந்தபோது இச்சம்பவம் இடம் பெற்றதாக அவர் தெரிவித்தார். 34 வயதான பரோன் டேவிஸ் 6 அடி 3 அங்குல உயரமானவர். அமெரிக்காவின் பல்வேறு கழகங்களுக்காக விளையாடியவர். இரு தடவைகள் அமெரிக்க அனைத்து நட்சத்திர அணியிலும் இடம் பெற்றவர். இறுதியாக 2012 ஆம் ஆண்டு நியூயோர்க் நைக்ஸ் கழகத்துக்காக விளையாடியவர். 2001 ஆம் ஆண்டு குட்வில் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற அமெரிக்க அணியிலும் அவர் இடம் பெற்றார்.

கடந்த வியாழனன்று 'த சம்ப்ஸ்' எனும் நேர்காணல் நிகழ்ச்சியில் பங்குபற்றிய அவர், தன்னை வேற்று கிரகவாசிகள், அவர்களது பிரதான விண் வெளிக் கலமொன்றுக்கு (பறக்கும் தட்டுக்கு) கொண்டு சென்றதாகக் கூறினார். இரு வாரங்களுக்கு முன் நான் உண்மையில் வேற்றுக் கிரகவாசிகளால் கடத்தப் பட்டேன். லாஸ் வேகாஸிலிருந்து லொஸ் ஏஞ்சல்ஸுக்கு காரைச் செலுத்திக் கொண்ருந்தபோது இது இடம்பெற்றது. அவ்வேளையில் நான் சற்றுக் களைப் படைந்திருந்தேன். திடீரென பெரும் வெளிச்சத்தைக் கண்டேன். பெரிய ட்ரக் ஒன்று நிறுத்தப்பட்ருப்பதாக நான் நினைத்தேன். அதன்பின் நான் பாதியளவு மனிதர்களைப்போன்ற அவலட்சணமான நபர்களைக் கண்டேன். அவர்கள் என்னைத் தமது விண்வெளி ஓடத்தின் மூலம் தமது பிரதான கலத்துக்குக் கொண்டு சென்றார்கள். என பரோன் டேவிஸ் கூறினார்.


இதற்குமுன் வேற்றுக் கிரகவாசிகளின் பறக்கும் தட்டையும் வேற்றுக்கிரக வாசிகள் போன்ற இனந்தெரியாத நபர்களையும் கண்டதாகவும் சிலர் கூறியுள்ளனர். ஆனால், பறக்கும் தட்டுவாசிகளால் பூமியிலுள்ள மனிதர் ஒருவர் தமது பறக்கும் தட்டுக்கு கடத்தப்பட்டதாக அல்லது பறக்கும் தட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

பரோன் டேவிஸ் கூறுவதை மேற்படி நிகழ்ச்சியை நடத்திய நீல் பிரெனன், மோஷ் கேஷர் ஆகியோர் கூட நம்பவில்லை. ''நீங்கள் சீரியஸாக சொல்கிறீர்களா?'' என செவ்வி கண்டவர்களில் ஒருவர் கேள்வி எழுப்பினார். ''ஆமாம். உண்மையாக. அவர்கள் எனது மூக்கில் குத்தினார்கள். எனது கண்களை உற்று நோக்கினார்கள்'' என டேவிஸ் பதிலளித்தார். அவர் தனது கூற்றுகளை வாபஸ் பெற்றுக் கொள்வதற்கு வழங்கப்பட்ட பல வாய்ப்புகளையும் நிராகரித்தார். எனது கைகள் கட்டப்பட்டிருந்தன. அதன்பின் நான் மொன்ட் பெல்லோவில் (லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள ஒரு நகரம்) இருந்தமைதான் எனக்குத் தெரியும் என பரோன் டேவிஸ் சத்தியம் பண்ணாத குறையாக கூறினார். அதையடுத்து இத்தகவல்கள் அமெரிக்காவின் பல முக்கிய ஊடகங்களில் பரபரப்புச் செய்தியாக வெளியாகின.

ஆனால், இருநாட்களின் பின்னர் நேற்று முன்தினம் தனது டுவிட்டர் பக்கத்தில், ''வேற்றுக் கிரகவாசிகள் விடயம் ஒரு ஜோக்'' என பரோன் டேவிஸ் தெரிவித்தார். அதே டுவிட்டர் செய்தியில் ''எனக்கு உதவுங்கள். என் வீட்டுக்கு வெளியே கறுப்பு உடையணிந்த நபர்கள் நிற்கிறார்கள்'' எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.


எனினும் பரோன் டேவிஸ் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் கூறியவை உண்மையா அல்லது பின்னர் டுவிட்டரில் கூறியது உண்மையா என பலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இதற்குமுன் வேற்றுக் கிரகவாசிகளின் பறக்கும் தட்டையும் வேற்றுக்கிரக வாசிகள் போன்ற இனந்தெரியாத நபர்களையும் கண்டதாகவும் சிலர் கூறியுள்ளனர். ஆனால், பறக்கும் தட்டுவாசிகளால் பூமியிலுள்ள மனிதர் ஒருவர் தமது பறக்கும் தட்டுக்கு கடத்தப்பட்டதாக அல்லது பறக்கும் தட்டில் அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது





# ஒரு மில்லியன் டொலரை நிராகரித்த கணித மேதை



2003 ஆம் ஆண்டு ரஷ்ய கணிதவியலாளரான Grigori Perelman (கிரகெரி பார்ல்மன்) என்பவர், சுமார் 100 ஆண்டுகளாக விடுவிக்கப்படாதிருந்த பியான்கேரி (Poincar) அனுமானங்களில் ஒன்றை விடுவித்தார். 2002, 2003 ஆம் ஆண்டுகளில் இதற்கான சான்றுகளைச் சமர்ப்பித்திருந்தார். 7 பேர் இந்த புதிருக்கான சான்றுகளை சமர்ப்பித்திருந்தாலும், Cambridge பல்கலைக்கழக கணிதவியலாளர்களைக் கொண்ட குழு ஒன்று சுமார் 7 வருட கால உறுதிப்படுத்தலின் பின்னர் கிரகெரியை வெற்றியாளராக 2010 இல் அறிவித்தது. இப்புதிரை விடுவித்தவருக்கு கணிதத்துறையில் நோபல் பரிசுக்கு நிகரான பரிசும் சுமார் ஒரு மில்லியன் டொலர் ரொக்கப்பணமும் வழங்கப்படுவது வழக்கம். அந்தப்பரிசு கிரகெரிக்கு கொடுக்கப்பட்டது. ஆனால், அதை வாங்க அவர் மறுத்துவிட்டார்.

வெற்றிடங்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. அவற்றைக் கணித்து தீர்க்க முடியும் என்பதே எமக்கு சிறந்த வாய்ப்பு. என்னால் இந்த பிரபஞ்சத்தையே கணித்துக் கட்டுப்படுத்த முடியும். பின்னர் ஏன் நான் பணத்துக்காக ஓட வேண்டும்? என்ற கேள்வியுடன் மில்லியன் டொலர் பெறும தியான பணத்தை நிராகரித்தார். இத்தனைக்கும் 45 வயதான கிரகெரி தனது தாய் மற்றும் சகோதரியின் வீட்டில் வாழ்ந்து வருகிறார் என்பது குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக் குடியமர்ந்தவர்களுக்கு வாழ்வாதார இலகு கடனுதவி



கொழும்பிலுள்ள எகலப் லங்கா ஸ்தாபனம் மன்னார் மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த விதவைகள், மாதர் சங்கப் பிரதிநிதிகள், சிறு குழுக்களில் அங்கத்துவம் வகிக்கும் தாய்மார்கள் ஆகியோருக்கு அவர்களின் தேவையைப் பொறுத்து தலா 25 ஆயிரம் ரூபாவை இலகு கடனாக வழங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 100 இற்கும் மேற்பட்டவர்களுக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மன்னார் நகர பிரதேச செயலர் பிரிவிலுள்ள நடுக்குடா, பேசாலை, துள்ளுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் உள்ள 100 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு இரண்டாவது கட்டமாக அவர்களுக்கு ஓகஸ்ட் மாதத்திலிருந்து 25 ஆயிரம் ரூபா இலகு கடனாக வழங்கப்படவுள்ளது.

இதில் முருங்கைக்காய் சேகரித்து விற்றல், பனங்கிழங்கு, ஒடியல், பனாட்டு ஆகியவற்றை விற்றல், பனை மட்டை, கிடுகு, சிறுவியாபாரம், ஆடைகள் தைத்து விற்றல், கோழிப்பண்ணை, ஆடு வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், சிற்றுண்டி வியாபாரம், சிறிய வலைகள் மூலம் மீன்பிடித்து விற்றல், குடிசைக் கைத்தொழில் ஆகியனவற்றுக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டது. பயனாளிகள் ஒரு வருடத்தில் இந்தக் கடனைச் செலுத்துவதுடன் தமது வாழ்வாதாரத்தைச் சிறிது உயர்த்திய பின்னர், அடுத்து வரும் ஆண்டில் 40 ஆயிரம் ரூபாவரை தேவைக்கேற்ப கடனுதவி அதிகரித்து வழங்கப்படும்.

மேலும் தமது நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிய மன்னார் அரச அதிபர், மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எகலப் பணிப்பாளர் சபையினர் நன்றியும் தெரிவித்துள்ளனர். (க-14-435)

# முதியோர் இல்லத்தில் சிரமதானம்



கைதடி அரச முதியோர் இல்லத்தின் 11 ஆம் விடுதியைச் சூழவுள்ள பகுதி நுணாவில் பிரிவு இராணுவத்தினரால் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்புச் செய்யப்பட்டது. இந்தப் படைப்பிரிவின் பொறுப்பு அதிகாரி தலைமையில் அங்கு காலை வருகை தந்த படையினர் பற்றைகளை வெட்டித் தீயிட்டுக் கொளுத்தினர். (ஒ-51)

# தென்மராட்சிப் பகுதியில் குரங்குகளின் அட்டகாசத்தை குறைக்க நடவடிக்கை

வரணி, ஜூலை 23

தென்மராட்சிப் பிரதேசத்தில் குரங்குத் தொல்லைகளைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) நடவடிக்கை எடுத்துள்ளதாக அவரால் பிரதேச விவசாய சமமேளனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பத்தரமுல்லையில் இயங்கும் வனவிலங்கு திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் தாரங்க பிரசாத்தின் அனுமதியுடன் முல்லைத்தீவு வனவிலங்கு திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் கிரிதரன் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் உள்ள களநிலையை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

கடந்த மாதம் இவர் குறித்த பிரதேசத்துக்கு பயணம் செய்து குரங்குகளால் சேதமடைந்த வாழைத்தோட்டங்கள், பயிர் விளை நிலங்கள் மற்றும் சேதமாக்கப்பட்ட பொதுமக்களின் சொத்துக்கள் என்பவற்றை பார்வையிட்டு பிரதேச மக்களுடனும் கலந்துரையாடி முடிவொன்றை அறிவித்தார்.

அதன் முதல் தீர்வாக சிக்னல் வெடியை பாவித்து அதை வெடிக்க வைப்பதன் மூலம் குரங்குகள் விரட்டும் நடவடிக்கையை மேற்கொண்டு ஆரம்பகட்டமாக மீசாலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அவர்களை 5 குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு வெடிகளையும் வழங்கி செயற்பாடுகளை முன்னெடுக்க ஆலோசனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் விவசாய சம்மேளனங்கள் தீவிர பிரசாரங்களை மேற்கொண்டு தங்களாலான உதவிகளை மேற்கொள்ளவும் என அதில் கூறப்பட்டது. (வ-122)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24/07/2013



# நீர் இல்லாத காலங்களிலும் செடி வளரும்

நீர் இல்லாது போனாலும் தாவரங்களின் வறட்சியை தடுத்து வளர்ச்சியை மேம்படுத்தக் கூடிய வகையில் ஆய்வாளர் ஒருவர் புதிய இரசாயனவியல் ஆய்வு ஒன்றை மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளார். அதாவது நீரில்லாத வறட்சியான பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு புதிய கண்டுபிடிப்பொன்றை மெக்சிகோவைச் சேர்ந்த இரசாயனவியலாளர் ஒருவர் மேற்கொண்டுள்ளார்.

அவரது கண்டுபிடிப்பு, நீரை உறிஞ்சிச் சேமித்து வைப்பதன் மூலம் அதனை எதிர்காலத்தேவைக்கு உபயோகப்படுத்தலாகும். நீரை உறிஞ்சி சேமித்து வைக்கும் பொருட்டு 'சொலிட் ரெயின்' எனும் சீனியைப் போன்ற தூள் ஒன்றை உருவாக்கியுள்ளார். இது பொட்டாசியம் பொலியகிரைலேட் எனும் மூலப் பொருளால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த தூள் தன் உருவத்தைப் போல 500 மடங்கு அளவு நீரை உறிஞ்சி வைத்துக்கொள்ளக்கூடியது. மேலும் 10 கிராம் 'சொலிட் ரெய்ன்' தூள்கள் 1 லீற்றர் நீரை ஜெல்லாக மாற்றி தம்முள் சேமித்துவைக்கும் திறன் படைத்தன. சுமார் ஒரு வருட காலத்துக்கு ஆவியாகாமல் அந்நீரை 'சொலிட் ரெய்ன்' தூள்கள் சேமித்து தனக்குள் வைக்கக்கூடியது. பின்னர் இதனை மண்ணுக்குள் போடுவதன் மூலம் தாவரங்களின் வேர்களால் அந்நீர் உறிஞ்சப்படும். இது தாவரங்கள் செழிப்பாக வளர வழிசெய்கின்றது.

இந்தப் புதிய கண்டுபிடிப்பானது வறட்சியால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைவதை பெரிதும் குறைக்கும் என இதனை உருவாக்கிய மெக்சிகோ இரசாயனவியலாளரான சேர்ஜியோ ஜீசஸ் ரிகோ வெலஸ்கோ தெரிவிக்கின்றார்.

# இறந்த நபர் முதல்வராக தெரிவான விநோதம்

மெக்சிகோவில் இறந்த நபர் ஒருவர் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது. தெற்கு மெக்சிகோவில் உள்ள ஒயாகசா நகருக்கு அருகே உள்ளது சான் அகஸ்டின் அமா டென்கோ என்ற கிராமம். இந்த கிராமத் தில் முதல்வரைத் தெரிவு செய்வதற்கான நடந்த தேர்தலில், லெனின் கார்பெல் லிடோ என்பவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், லெனின் கடந்த 2010 ஆம் ஆண்டு இறந்துவிட்ட தாக வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ் கிடைத் துள்ளது தான். அதன் பிறகு தான் லெனின் போலியாக இறப்புச் சான்றிதழ் வாங்கியது தெரிய வந்தது. முன்னதாக கடந்த 2004 ஆம் ஆண்டு லெனின் மற்றும் 4 பேர் சேர்ந்து தன்னை வன்புணர் வுக்குட்படுத்தியதாக பெண் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு கொடுத்தார். இந்த வழக்கில் கைதாவதில் இருந்து தப்பிக்க லெனின் இறந்துவிட்டதாக அவரது இறப்புசான்றிதழை பொலிஸாரி டம் அவரது உறவினர் ஒருவர் காட்டியுள்ளார். இறந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஒருவர், முதல்வர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.




# பைபிள் குறிப்பிடும் இஸ்ரேல் மன்னார் டேவிட்டின் பண்டைய கோட்டை கண்டுபிடிப்பு

ஹீப்ரு பைபிளின் படி கி.மு. 1040 ஆம் ஆண்டளவில் இஸ்ரேலை ஆண்ட பண்டைய மன்னனான கிங் டேவிட்டின் சாம்ராஜ்ஜியத்தின் இடிபாடுகள் இஸ்ரேலிய தொல்பொருள் ஆய்வாளர்களால் ஜெருசலேத்துக்கு அருகில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தற்போது இந்தப்பகுதியில் இடிபாடுகள் தோண்டப் பட்டு ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதுவரை தோண்டப் பட்டதன் மூலம் ஒரு சோடிக் கட்டமைப்புக்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இதில் ஒன்று கிங் டேவிட்டின் மாளிகையாகவும் இன் னொன்று களஞ்சிய அறையாகவும் இனங்காணப் பட்டுள்ளன. இந்தக்களஞ்சிய அறையில் பண்டைய காலத்தில் வரியாக அறவிடப்பட்ட தானியங்கள் சேமிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. மேலும் இவை கிங் டேவிட்டின் காலத்தில் செல்வரக்கு செலுத்தியிருந்த யூதர்களின் அதிகாரத்துக்கு மறுக்க முடியாத சான்று எனவும் கூறப்படுகின்றது.

பைபிளில் குறிப்பிடப்பட்ட டேவிட்டுக்கும் கோலியரத்துக்கும் இடையேயான சண்டை இடம் பெற்ற பிரதேசம் இப்போது கிர்பெட் கியூபா என அழைக்கப்படுகின்றது. மேலும் இச்சண்டை கி.மு. 980 இல் பிலிஸ்டின்ஸ் உடனான போர் இடம்பெற்றபோது நிகழ்ந்ததாக ஜெருசலேம் போஸ்ட் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிரதேசமே ஒலிவ் விதைகளுடன் ஆர்கானிக் பதார்த் தங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசமாக உள்ளது. மேலும் பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள ஷாரயிம் (Shaarayim) எனும் இரு கதவுகள் இந்த இடிபாட்டுக்குள் அடங்கியுள்ளன. இப்பிரதேசத்தின் அமை விடம் மேற்கே மத்திய தரைக்கடலும் கிழக்கே ஹெரொன் மலைகளுடன் ஜெருசலேம் நகரும் கொண்டு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org